அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்.

# அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்.

## 12 - ஆம் வகுப்பு

# வணிகவியல்

## மாணவர் கையேடு

**( 2023 - 2024 )**

**B. பாலாஜி,**
**முதுகலை வணிகவியல் ஆசிரியர்,**
**அரசினர் மேல்நிலைப் பள்ளி,**
**பரந்தூர்,**
**காஞ்சிபுரம் மாவட்டம் - 631 552.**
**கைபேசி எண் : 9629647613**

# 12- ஆம் வகுப்பு --- வணிகவியல் ( 2023 - 2024 )

## அலகு 1. மேலாண்மைச் செயல்முறைகள்

## அத்தியாயம் 1. மேலாண்மைத் தத்துவங்கள்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **மேலாண்மை என்றால் என்ன?** ( MAY 2022 )
   - ❖ மேலாண்மை என்பது மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலையாகும்.

2. **மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.** (MAR 2020 , 2023 )
   - i) கணக்கியல்
   - ii) வணிகச் சட்டங்கள்,
   - iii) உளவியல்
   - iv) புள்ளியியல்
   - v) பொருளியல்
   - vi) தரவு செயலாக்கம்

3. **அதிகாரம் என்பதன் பொருள் தருக.** ( SEP 2020, JUL 2022 , JUN 2023 )
   - ❖ அதிகாரம் என்பது ஒரு அலுவலர், தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

4. **மேற்பார்வை வீச்செல்லை என்பதன் பொருள் யாது?**
   - ❖ ஒரு உயர் அலுவலரால், திறமையாக மேலாண்மை செய்யப்படும் கீழ்ப்பணியாளர்களின் எண்ணிக்கையை மேலாண்மையின் வீச்செல்லை குறிக்கின்றது.

### மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **மேலாண்மை வரைவிலக்கணம் தருக.** ( AUG 2021 , JUL 2022 , JUN 2023 )
   - ❖ "மேலாண்மை என்பது முன்கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது" - ஹென்றி ஃபோயல்

     ( அல்லது )
   - ❖ "மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது" - பீட்டர்.F. டிரக்கர்

2. **மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக.** ( ஏதேனும் 3 ) ( MAY 2022 )

| வ. எண் | அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|---|
| 1 | பொருள் | மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலை மேலாண்மை ஆகும் | நிறுவனத்தை நிர்வாகிப்பதற்கான செயல்முறையே நிர்வாகம் ஆகும் |

| | | | |
|---|---|---|---|
| 2 | அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர்மட்ட அளவில் |
| 3 | பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| 4 | முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| 5 | பணி | நிர்வாகம் மற்றும் ஆளுமை | சட்டம் மற்றும் தீர்மானித்தல் |
| 6 | தொடர்பு தன்மை | கொள்கைகளை செயல்படுத்துதல் | கொள்கைகளை உருவாக்குதல் |

3. **டேய்லரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை? ( SEP 2020 , MAR 2023 )**
    1) அறிவியல், கட்டை விரலின் விதி அல்ல
    2) இணக்கம், சச்சரவின்மை
    3) மனப்புரட்சி
    4) தனிமனிதத் தத்துவம் அல்ல, ஒத்துழைப்பு
    5) ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி

4. **மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?**
- தனிப்பட்ட மேலாளர்களின் பணியில் உள்ள மனோபாவத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது.
- தொழில் நிறுவனத்தின் கட்டமைப்பை தீர்மானிக்கின்றது.
- மேலாண்மையின் பரப்பு என்பது நிர்வாகக் கட்டமைப்பின் கிடைமட்ட நிலைகளோடு தொடர்புடையது.

<u>மேலாண்மையின் வீச்செல்லையைத் தீர்மானிப்பவை</u>
    1) பரந்த வீச்செல்லை
    2) குறுகிய வீச்செல்லை
- பரந்த வீச்செல்லையில் அதிகார படிமட்டங்களின் அளவு குறைவாக இருக்கும்
- குறுகிய வீச்செல்லையில் அதிகார படிமட்டங்களின் அளவு அதிகமாக இருக்கும்

## <u>ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )</u>

1. **மேலாண்மையின் அடிப்படைக் கருத்துகளை விவரி. ( ஏதேனும் 5 ) ( JUN 2023 )**

1. <u>அறிவின் தொகுப்பு</u>
    - மேலாண்மை இலக்கியம் அனைத்து நாடுகளிலும் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. வணிக உலகம் அல்லது அரசுத்துறை அல்லது தனியார்துறை போன்றவற்றின் வேலைவாய்ப்பு உலகில், வெற்றிகரமாக நுழைவதற்கு சிறந்த கடவுச்சீட்டு போன்றது மேலாண்மை ஆகும்.
2. <u>மேலாண்மைக் கருவிகள்</u>
    - கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியல், தரவு செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பல்கிப் பெருகி விரிவடைந்துள்ளது.
3. <u>தனிப் பாடப்பிரிவு</u>
    - பல்வேறு பல்கலைக் கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப்பிரிவாக அங்கீகரித்திருக்கின்றன.
4. <u>சிறப்பீடுபாடு</u>
    - வணிகத்தின் ஒவ்வொரு செயல்பாட்டுப் பகுதியையும் சீரிய முறையில் மேலாண்மை செய்து வணிகத்தை சிறப்பாக நிர்வகிக்க உயர்கல்வித் தகுதியும், முறையான பயிற்சியும் பெற்ற, உரிய முன்னனுபவமுள்ளவர்களை தேர்ந்தெடுத்து பணியமர்த்த வேண்டும் என்ற மனப்பாங்கு தற்போது வளர்ந்து வருகின்றது.

5. **நடத்தை விதி**

- வணிக மேலாண்மை என்பது நுகர்வோர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் அல்லது சமுதாயம் போன்றவற்றிற்கு வணிகமேலாண்மை ஆற்றவேண்டிய சமூகப் பொறுப்புணர்வுகளை அறிவூட்டப்பட்ட வணிகர்கள் அங்கீகரித்திருக்கின்றனர்.

6. **பணி ரீதியானதொரு அமைப்பு**

- பல்வேறு நாடுகளில் மேலாண்மைப் பிரிவுகளில், அறிவுப் பரவலாக்கம் ஏற்படவும், மேலாண்மை சிறப்புத் தொழில் குறித்த பொதுமக்கள் மனதில் ஒரு சிறந்த தோற்றத்தை உருவாக்கவும் வணிகமேலாண்மை சங்கங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை நாம் காண முடிகின்றது.

---

## 2. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. ( ஏதேனும் 5 ) ( AUG 2021 )

1) **வேலைப் பகிர்வு** ( MAY 2022 , JUL 2022 , MAR 2023 )

- இக்கோட்பாட்டின்படி, தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும், சிறிய பணிகளாகப் பகிர்வு செய்ய வேண்டும்.
- தொழிலாளர் ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும், நிபுணத்துவமும் அடையும் வண்ணம், தொழில்முறை வளர்ச்சியையும் பணிச் சூழலையும் உருவாக்க வேண்டும்.

2) **அதிகாரமும், பொறுப்பும்**

- அதிகாரம் என்பது ஒரு அலுவலர், தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.
- பொறுப்பு என்பது, அவ்வாணையினை நிறைவேற்றம் கடமையைக் குறிக்கின்றது.

3) **ஒழுங்குமுறை**

- இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும்.
- இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

4) **கட்டளையொருமை**

- ஒவ்வொரு கீழ்ப்பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளைப் பெற வேண்டும்.
- அவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்கவேண்டும்.

5) **ஒரு முனை இயக்கம்**

- அனைத்துத் தொடர்புடைய நடவடிக்கைகளையும் ஒரே குழுவில் வைக்க வேண்டும்.
- அக்குழுவிற்கு ஒரே செயல்திட்டம் இருக்க வேண்டும்.
- மற்றும் அவர்கள் ஒரே மேலாளரின் கீழ் பணியாற்ற வேண்டும்.

6) **பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்**

- நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்து விட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்தவேண்டும்.

7) **ஊதியம்**

- ஊதியம் என்பது, பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.
- ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மையான கருவியாகும்.
- ஊதிய வழிமுறைகள் நியாயமானதாகவும்,சரியானதாகவும் பணியாளர்களின் முயற்சிக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

8) **ஆணையுரிமை வரிசை/ தரவரிசைத் தொடர்**

- ❖ ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து, கீழ்மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வருவதை குறிக்கும்.

9) **ஆணைகள்**

- ❖ ஆணைகள் என்பது, ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். நிறும விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

10) **நேர்மை நெறி**

- ❖ இக்கோட்பாட்டின்படி, பணியாளர்கள் அன்புடன் நடத்தப்பட வேண்டும் மற்றும் பணியிடத்தில் நீதிமுறை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- ❖ அனைத்துப் பணியாளர்கள் மீதும் சமமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

---

# அத்தியாயம் 2. மேலாண்மை செயல்பாடுகள்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறுவிடை வினாக்கள் )

**1. திட்டமிடுதல் என்றால் என்ன? ( JUN 2023 )**

- ❖ திட்டமிடுதல் என்பது, முன்கூட்டியே முடிவெடுப்பதைக் குறிக்கிறது.
- ❖ திட்டமிடுதல் என்பது, வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

---

**2. செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.**

- ❖ ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயலூக்கமளித்தல் என்ற சொல் உள்ளடக்கியுள்ளது.

---

**3. மேலாண்மையின் துணைப் பணிகளை பட்டியலிடுக.**

1. புதுமைப்படுத்துதல் 2. பிரதிநிதித்துவம் 3. முடிவெடுத்தல் 4. தகவல் தொடர்பு

---

**4. திட்டமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் பாராம்பரிய பழமொழி என்ன?**

1) 'செயல்படுவதற்கு முன் நீங்கள் சிந்தியுங்கள்'
2) 'ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள்'

---

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறுவினாக்கள் )

**1. மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக. ( MAR 2023 )**

1) திட்டமிடுதல்
2) அமைத்தல்
3) பணியமர்த்தல்
4) இயக்குவித்தல்
5) செயல் ஊக்கம் அளித்தல்
6) கட்டுப்படுத்துதல்
7) ஒருங்கினைத்தல்

2. **பணியமர்த்துதலின் முக்கியத்துவம் பற்றி கூறுக.**

- பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகளை, பணிக்கமர்த்துதல் உள்ளடக்கியுள்ளது.
- எந்தவொரு நிறுவனத்தின் வெற்றியும், பணிக்கமர்த்தல் பணியின் வெற்றிகரமான செயல்திறன்களைச் சார்ந்தே இருக்கும்.
- பணிக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது, தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது, பழைய நபர்களுக்கு ஓய்வு அளிப்பது, அனைத்து நபர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வது மற்றும் பணியாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவது ஆகியன பணிக்கமர்த்துதலில் அடங்கியுள்ளது.

3. **நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கப்படும் ?**

- தகவல் தொடர்பு மூலமாக , மனித எண்ணங்களை, கண்ணோட்டங்களை அல்லது கருத்துக்களை, ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்யப்படும்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள்)

1. **மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக. ( ஏதேனும் 5 )**

( SEP 2020 , AUG 2021 , MAY 2022 , JUN 2023 )

1) **திட்டமிடுதல்**
- திட்டமிடுதல் என்பது, மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்.
- திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது.
- திட்டமிடுதல் என்பது, வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

2) **அமைத்தல்**
- பணியாளர்களுக்கு பணிகளை ஒப்படைவு செய்வதும் அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு போதிய அதிகாரங்களை வழங்குவதும் மேலும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பணியாளரே பொறுப்பேற்க செய்வதும் அமைத்தல் பணி எனப்படுகிறது.

3) **பணியமர்த்துதல்**
- பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகளை, பணிக்கமர்த்துதல் உள்ளடக்கியுள்ளது.
- பொருத்தமான நபர்களை, பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயலைக் குறிப்பதாகும்.

4) **இயக்குவித்தல்**
- தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல், மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்பு படுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.

5) **செயலூக்கமளித்தல்**
- செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
- ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயலூக்கமளித்தல் என்ற சொல் உள்ளடக்கியுள்ளது.

6) **<u>கட்டுப்படுத்துதல்</u>**

- ❖ குறைந்த செயல்திறன் உடையவர்களை அடையாளம் காண்பதற்கும், குறைதீர் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குவதற்கும் கட்டுப்பாட்டு செயல்பாடு உதவுகிறது.
- ❖ முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட தர அலகுகளுடன் உண்மையான செயல்திறனை எது ஒப்பீடு செய்ய உதவி புரிகிறதோ?, அது கட்டுப்படுத்தும் செயல்பாடு ஆகும்.

7) **<u>ஒருங்கிணைத்தல்</u>**

- ❖ ஒரு நிறுவனம் தனது குறிக்கோளை அடைவதற்கு பல்வேறு திறன்கள் கொண்ட பணியாளர்களை ஒருங்கிணைப்பது ஒருங்கிணைத்தல் எனப்படுகிறது.
- ❖ நிறுவனத்தின் ஒவ்வொரு மேலாண்மை பணிகளிலும் ஒருங்கிணைத்தல் பணி உள்ளடங்கியுள்ளது.

## அத்தியாயம் 3. குறியிலக்கு மேலாண்மை (MBO)
## விதிவிலக்கு மேலாண்மை (MBE)

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறுவிடை வினாக்கள் )

**1. குறியிலக்கு மேலாண்மையின் குறிக்கோள்கள் என்ன?**

1. அளவிடுதல் மற்றும் செயல் திறன்களை மதிப்பிடுதல்.
2. அமைப்பின் குறிக்கோள்களுடன் தனிப்பட்ட செயல் திறனைத் தொடர்பு படுத்துதல்.
3. நிறைவேற்றக் கூடிய வேலை மற்றும் எதிர்பார்ப்புகள் இரண்டையும் தெளிவுபடுத்துதல்.
4. கீழ்நிலைப் பணியாளர்களின் திறனை அதிகரித்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல்.

**2. விதிவிலக்கு மேலாண்மையின் பொருளை எடுத்துக் கூறுக.**

- ❖ விதிவிலக்கு மேலாண்மை என்பது, நெறிமுறையிலிருந்து விலகிப் போகும் நிகழ்வுகளை அடையாளம் காண்பதற்கும், கையாளுவதற்கும் கவனம் செலுத்துகின்ற வணிக நிர்வாகத்தின் ஒரு பாணியாகும்.

**3. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.**

1. மேலாளர்களுக்கு, ஒட்டு மொத்த அமைப்பில் தங்களது பங்கைப் புரிந்து கொள்ள உதவுகிறது.
2. மேலாண்மைக்கு ஒரு அடித்தளத்தை வழங்குகிறது. மேலும் கீழ் நிலை ஊழியர்களும் இலக்கு அமைப்பில் ஈடுபடச் செய்கிறது.
3. ஒரு துறை மற்றொரு துறையின் வேலையில் குறுக்கிடும் நோக்கில் ஈடுபடாது.
4. குறியிலக்கு மேலாண்மை உதவியுடன் செயல்திறன் முறையாக மதிப்பீடு செய்யப்படுகிறது.

**4. முக்கிய முடிவுப் பகுதிகள் ( KRA) என்பது என்ன?**

- ❖ ஒரு அமைப்பின் குறிக்கோள்களின் அடிப்படையில், முக்கிய முடிவுப் பகுதிகள் நிர்ணயிக்கப் படுகின்றன.
- ❖ முக்கிய முடிவுப் பகுதிகள் முன்னுரிமை அடிப்படையில் அமைக்கப்படுகிறது.
- ❖ முக்கிய முடிவுப் பகுதிகள் ஒரு அமைப்பின் வலிமையைக் குறிக்கிறது.

### மூன்று மதிப்பெண் வினாக்கள் (சிறுவிடை வினாக்கள்)

**1. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.** ( MAR 2020 )

1) அமைப்பு மற்றும் தனி நபர்களின் குறிக்கோள்களை ஒருங்கிணைக்க நிர்வாகத்தால் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இது திறமையான மேலாண்மைக்கு வழிவகுக்கிறது.
2) குறுகிய கால இலக்குகளுடன், நிறுவனத்தின் நீண்டகால இலக்குகளை இணைக்க குறியிலக்கு மேலாண்மை முயற்சி செய்கிறது.

3) சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்த, முயற்சி செய்கிறது.
4) குறியிலக்கு மேலாண்மை இலக்குகளை மட்டும் அடையச் செய்வதல்ல, திறமையான செயல் திறனையும் அடையச் செய்கிறது.
5) நம்பிக்கை, நல்லெண்ணம், மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

## 2. விதிவிலக்கு மேலாண்மையில் உள்ள செயல்முறைகள் என்ன?

- ❖ எதிர்பார்ப்பு அல்லது மதிப்பிடப்பட்ட முடிவுகளுடன் குறிக்கோள்கள் அல்லது நெறிமுறைகளை அமைப்பது அவசியமாமாகிறது.
- ❖ இந்த நிகழ்ச்சிகள் மதிப்பீடு செய்யப்பட்டு உண்மையான செயல்திறனுடன் சமமாக ஒப்பிடப்படுகின்றன.
- ❖ முதுநிலை மேலாளர்கள்,ஒரு சிறிய அல்லது எந்த விலகலும் இல்லாத போது, எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை. அவர்கள் மற்ற விசயங்களில் கவனம் செலுத்தலாம்.
- ❖ உண்மையான செயல்திறன்கள் கணிசமாக விலகிவிட்டால், "ஒரு விதிவிலக்கு ஏற்பட்டுவிட்டது" என்ற பிரச்சினையை முதுநிலை மேலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.
- ❖ இந்த "விதிவிலக்கு" உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என்பதே இறுதியான நோக்கமாகும்.

## 3. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் மூன்று செயல்முறைகளைப் பட்டியிலிடுக.

1) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுத்தல்
2) ஒவ்வொரு பிரிவின் இலக்குகள்
3) முக்கிய முடிவு பகுதிகள்
4) கீழ்நிலை ஊழியர்களின் குறிக்கோள்களை அல்லது இலக்குகளை நிர்ணயித்தல்
5) குறிக்கோள்களுடன் வளங்களை ஒப்புநோக்குதல்
6) காலவாரியான மறுஆய்வுக் கூட்டம் கூட்டுதல்
7) செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல்
8) குறிக்கோள்களை மறுஆய்வு செய்தல்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெருவிடை வினாக்கள் )

## 1. குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? ( ஏதேனும் 5 )

1) மேலாளர்களுக்கு, ஒட்டு மொத்த அமைப்பில் தங்களது பங்கைப் புரிந்து கொள்ள உதவுகிறது.
2) திட்டமிடலுக்கான தேவையையும் மற்றும் திட்டமிடலுக்கான பாராட்டுதலையும் மேலாளர் அங்கீகரிக்கச் செய்கிறது.
3) மேலாண்மைக்கு ஒரு அடித்தளத்தை வழங்குகிறது. மேலும் கீழ்நிலை ஊழியர்களையும். இலக்கினை அடைவதற்கு ஈடுபடச் செய்கிறது.
4) ஒரு துறை மற்றொரு துறையின் வேலையில் குறுக்கிடும் நோக்கில் ஈடுபடாது.
5) குறியிலக்கு மேலாண்மை உதவியுடன் செயல்திறன் முறையாக மதிப்பீடு செய்யப்படுகிறது
6) இது செயல்திறன் அளவுகோல்களை வழங்குகிறது. மேலும் சரியான நடவடிக்கை எடுக்க உதவுகிறது.
7) இதன் உதவியால், அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
8) ஒரு தொழிலாளியின் பொறுப்பு, இதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது.

2. **விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் என்ன? ( ஏதேனும் 5 )** ( MAR 2020 )

1) இது மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது.
2) இது முக்கிய பிரச்சினைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.
3) இது அதிகாரப் பகிர்வினை எளிமையாக்குகிறது.
4) இது முக்கியமல்லாத தகவலில் இருந்து முக்கியமான தகவலைப் பிரிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும்.
5) முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க இது உதவுகிறது.
6) விதிவிலக்கு மேலாண்மை முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளஙகுகிறது. இது குறிக்கோள் செயல்திறன் மதிப்பீட்டில் பயனுள்ளதாக உள்ளது.

3. **விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவதிக்க.**

1) மேலாளர்கள் மட்டுமே, மிக முக்கியமான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். இது கீழ்நிலை ஊழியர்களுக்கான உற்சாகத்தை குறைகின்றது.
2) மேலும், இது பிரச்சினைகளை மேலாளர்களுக்குத் தெரிவிக்க கால நேரம் எடுத்துக்கொள்கிறது.
3) இயல்பான நடைமுறைகளில் இருந்து விலகிச் செல்லும் ஊழியர்களை நிர்வகிப்பது கடினமாகும்.
4) ஏனெனில், சிக்கல்களைக் கருத்தில் கொண்டு நிர்வகிக்கப்படுவதோடு, வழக்கமான வரையறுக்கப்பட்ட வேலைக் கடமைகளுடன், தோல்வியின் புகாருக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து இறுதியாக வேலை நீக்கம் செய்கிறது (அ) வேலையை விட்டு நிறுத்திவைக்கிறது

# அலகு 2 . நிதிச் சந்தை - I

## அத்தியாயம் 4 . நிதிச் சந்தை --- ஓர் அறிமுகம்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறுவிடை வினாக்கள் )

1. **அமைப்பு நிறுவனங்களின் கூறுகள் யாவை?**

1) ஒழுங்காற்று நிறுவனங்கள்
2) நிதி நிறுவனங்கள்
3) நிதிச்சந்தை
4) நிதிச்சார் சேவைகள்

2. **உடனடிச் சந்தை என்றால் என்ன?**

- ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும்.
- அதாவது தீர்வு உடனடியாக நடைபெறுகிறது.

3. **கடன் சந்தை என்றால் என்ன?**

- கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச்சந்தை கடன் சந்தை ஆகும்.

<u>எ.கா</u> : அரசு பத்திரங்கள்(அ) பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள்

4. **இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?**

( AUG 2021 )

- தேவை மற்றும் அளிப்பை பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றது

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறுவிடை வினாக்கள் )

1. **நிதிச் சந்தையின் பொருள் தருக.** ( JUL 2022 )

- ❖ எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள், சொத்துகள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதிக் கருவிகள் வியாபாரம் செய்யப்படுகின்றதோ அதுவே 'நிதிச் சந்தை' எனப்படுகிறது.

2. **இரண்டாம் நிலைச் சந்தை - சிறு குறிப்பு வரைக.** ( MAR 2023 )

- ❖ ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
- ❖ இரண்டாம் நிலைச்சந்தையில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

3. **இந்தியாவில் நிதிச்சந்தையின் வரை எல்லையை விளக்குக.**

- ❖ நிதிச்சந்தை தனி நபர்களுக்கு, விவசாய துறைகளுக்கு, தொழிற்துறைகளுக்கு, சேவைதுறைகள், நிதி நிறுவனங்களான வங்கிகள், காப்பீட்டு துறைகள், சேம நலகாப்பு நிதிகள் மற்றும் அரசுக்கு நிதி உதவிகளை வழங்குகிறது.
- ❖ மேற்குறிப்பிட்ட அமைப்புகள் தேவையான நிதியை, நிதிச்சந்தையின் உதவியுடன் குறித்த நேரத்தில் பெறுகின்றனர்.
- ❖ நிதிச்சந்தையின் மூலம் குறுகியகால மற்றும் நீண்டகால நிதி உதவியினை நிறுவனங்கள் பெறுகின்றன.
- ❖ இது ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெருவிடை வினாக்கள் )

1. **முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.** ( ஏதேனும் 5 ) ( SEP 2020 , JUL 2022 )

| வ.எண் | அடிப்படை | முதல் நிலைச்சந்தை | இரண்டாம் நிலைச்சந்தை |
|---|---|---|---|
| 1 | பொருள் | இது, புதிய பங்குகளுக்கான சந்தை | இது, ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை |
| 2 | கொள்முதலின் வகைகள் | நேரடி | மறைமுகம் |
| 3 | பத்திர விற்பனை | ஒரே ஒரு முறை நடைபெறும் | பலமுறை நடைபெறும் |
| 4 | வாங்குதல் மற்றும் விற்பனை | நிறுமங்கள் மற்றும் முதலீட்டாளர்களிடையே | முதலீட்டாளர்களுக்கு இடையே |
| 5 | பங்குகளை விற்பதன் மீதான ஆதாயம் பெறும் நபர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| 6 | இடைநிலையர் | ஒப்புறுதியாளர்கள் | தரகர்கள் |
| 7 | விலை | நிலையான விலை | தேவை மற்றும் அளிப்பை பொறுத்து மாறும் |
| 8 | அமைப்பு வேறுபாடு | குறிப்பிட்ட புவியியல் வேறுபாடு இல்லை | இதற்கு புற அமைப்பு உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 9 | நிதி | புதியநிறுமங்கள் மற்றும் இயங்கி கொண்டு இருக்கும் நிறுமங்களுக்கு நிதி வழங்குகிறது | நிறுமங்களுக்கு நிதி வழங்குவதில்லை |

2. **பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரிக்க.** ( ஏதேனும் 5 ) ( MAY 2022 )

**அ. நிதி கோருதல் வகையின் அடிப்படையில்**

i) **கடன் சந்தை**

- கடன் கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச்சந்தை கடன் சந்தை ஆகும்

ii) **நேர்மை பங்குச் சந்தை**

- நிறும நேர்மை பங்குகளின் வணிகத்திற்கான நிதிச் சந்தை நேர்மை பங்குச் சந்தை ஆகும்.

**ஆ. நிதி கோருதலின் முதிர்வு அடிப்படையில்**

a) **பணச் சந்தை**

- குறுகிய கால, ஓராண்டு அல்லது அதற்கு குறைவாக நிதி கோருதலுக்கான நிதிச்சந்தை பணச் சந்தை ஆகும்.

  எ.கா: கருவூலச்சீட்டுகள், வணிகத் தாட்கள், வைப்புச் சான்றிதழ்கள்

b) **மூலதனச் சந்தை**

- நீண்டகால ஓராண்டுக்கு மேல் நிதி கோருதலுக்கான சந்தை மூலதன சந்தை ஆகும்.

  எ.கா : பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள்

**இ. நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில்**

a) **முதல் நிலைச் சந்தை**

- முதன்முதலில் புதியதாக பத்திரங்களை வெளியிடும் சந்தை, முதல் நிலைச் சந்தை எனப்படும்.
- இதில் பணம் முதலீட்டாளர்களிடமிருந்து நேரடியாக நிறுமங்களுக்குச் செல்கிறது.

b) **இரண்டாம் நிலைச் சந்தை**

- ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச்சந்தை ஆகும்.
- இரண்டாம் நிலைச்சந்தையில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

**ஈ. நிதி கோருதலின் வழங்கலின் கால அடிப்படையில்**

a) **ரொக்கம் (அ) உடனடிச்சந்தை**

- ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச்சந்தை ஆகும்.
- அதாவது தீர்வு உடனடியாக நடைபெறுகிறது.

b) **முன்னோக்கிய (அ) எதிர்கால சந்தை**

- சொத்து வழங்கலும் ரொக்கம் செலுத்தலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைபெறும் சந்தை எதிர்கால சந்தை ஆகும்.
- பின்னொரு நாளில் பொருட்களை கைமாற்றிக் கொள்வதற்காக இன்றே விலையை முடிவு செய்து கொள்ளும் சந்தை ஆகும்.

**உ. நிதிச் சந்தை அமைப்பின் அடிப்படையில்**

a) **பரிமாற்றக வர்த்தகச் சந்தை**

- ஒரே மாதிரியான ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட பங்கு மாற்றகம் பரிமாற்றக வர்த்தக சந்தை எனப்படுகிறது.
- இது ஒரு மையப் படுத்தப்பட்ட அமைப்பு.

b) **எதிர்ச் சந்தை**

- வழக்கமான நடைமுறைகளைக் கொண்டு பங்கு மாற்றகத்தில் வெளியில் நடைபெறும் சந்தை எதிர்ச் சந்தை எனப்படுகிறது.
- இது ஒரு மையப்ப டுத்தப்படாத அமைப்பு.

---

3. **நிதிச்சந்தையின் பங்கினை விவரிக்கவும்.** ( MAR 2020 , AUG 2021 )

அ. **சேமிப்பை பெருக்குதல்**

- சேமிப்பாளர்கள் (அ) தனிநபர்கள், வணிக நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், மற்றும் அரசு போன்ற உபரி அலகுகளிடமிருந்து நிதிகளை பெறுவதன் மூலம் நிதிச்சந்தை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆ. **முதலீடுகள்**

- நிதி முதலீடுகளை வசூலிப்பதிலும் அவற்றை தேவை உள்ளவர்களுக்கு வழங்குவதிலும் நிதிச் சந்தை முக்கியப்பங்கு வகிக்கிறது.

இ. **தேசிய வளர்ச்சி**

- நிதிப் பற்றாக்குறை உள்ள நிறுவனங்களுக்கு உபரி நிதிகள் தடங்கலின்றி நடமாட்டம் செய்ய உறுதி செய்வதன் மூலம், ஒரு தேசத்தின் வளர்ச்சியில் நிதிச்சந்தை பங்களிப்பை வழங்குகிறது.
- நிதி ஆக்க பூர்வமான நோக்கில் பயன்படுத்த வழிவகை செய்கிறது.
- இது ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

ஈ. **தொழில் முனைவோர் வளர்ச்சி**

- தேவையான நிதி வளங்கள் தொழில்முனைவோர்களுக்கு கிடைக்க பெறுவதன் மூலம் அதன் மேம்பாட்டிற்கு நிதிச்சந்தை பங்களிக்கிறது.

உ. **தொழிற்துறை மேம்பாடு**

- நிதிச்சந்தையின் பல்வேறு கூறுகள் ஒரு நாட்டின் தொழிற்துறையின் துரிதவளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவி புரிகிறது.
- இதன்மூலம் சமுதாயத்தின் வாழ்க்கை தரம் மற்றும் நல்வாழ்வை உயர்த்துகிறது.

---

# அத்தியாயம் 5 . மூலதனச் சந்தை

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **மூலதனச் சந்தை என்றால் என்ன?** ( JUL 2022 , MAR 2023 )

- மூலதனச் சந்தை என்பது, நிதி பத்திரங்களான பிணையங்கள் மற்றும் பங்குகளின் வர்த்தகத்தில் ஈடுபடும் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் கூடும் ஒரு சந்தை ஆகும்.

---

2. OTCEI - **சிறு குறிப்பு வரைக.**

- பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்.
- இதன்மூலம் முதலீட்டாளர் மற்றும் நிறுமத்திற்கு சிலபிரச்சனைகள் இருந்த போதும் வெளிப்படைத் தன்மை, விரைவான முடிவு, நெகிழ்வு தன்மை ஆகிய நன்மைகளையும் அளிக்கிறது.

---

3. **மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?**

- தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதிநிறுவனங்கள்

---

4. **மூலதனச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது?**

- பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து நிர்ணயம் செய்யப்படுகிறது.

**கூடுதல் வினா**

1. **எண்ணெய், காபி ஆகியவை பண்டகச் சந்தையில் விற்கப்படுகின்றன. இவை எப்பண்டகச் சந்தையைச் சார்ந்தது? ( SEP 2020 )**

எண்ணெய் - கடின பண்டகச் சந்தை
காபி - மென் பண்டகச் சந்தை

## மூன்று மதிப்பெண் வினாக்கள் சிறு வினாக்கள்

1. **மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் என்ன? விளக்குக.**
   - மூலதனச்சந்தை , முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1) **முதல்நிலைச் சந்தை**
   - முதல்நிலைச் சந்தை என்பது, புதிய வெளியீடுகளுக்கான ஒரு சந்தை ஆகும்.
   - ஆகையால் இது புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.
   - ஒரு முதல் நிலைச் சந்தையில், ஒரு நிறுமம் பின்வரும் மூன்று வழிகளில் மூலதனத்தை திரட்டி கொள்ளலாம். அவைகள்:

   a) பொது வெளியீடு
   b) உரிமை வெளியீடு
   c) தனியார் வெளியீட்டு முறை

2) **இரண்டாம் நிலை சந்தை**
   - ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான சந்தை, இரண்டாம் நிலைச்சந்தை என வரையறுக்கப்படுகிறது.
   - ஏற்கனவே முதல் நிலைச்சந்தையில் வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்கள், இங்கு வணிகம் செய்யப்படுகின்றன.

2. **மூலதனச் சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.**

1) **சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்**
   - மூலதனச் சந்தையில், பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுவதற்கு உதவி செய்கின்றது.
   - பத்திரங்கள் முதலீடு செய்யும் மக்களுக்கு நிச்சயமான ஊக்கத் தொகையாக, பங்கு மாற்றகத்தின் இரட்டை சிறப்பியல்புகளான நியாயமான வருவாய் மற்றும் நீர்மைத் தன்மை கிடைக்கிறது.
   - இது நாட்டில் மூலதன உருவாக்கத்தை உருவாக்குகிறது.

2) **நிலையான மூலதனம்**
   - மூலதனச்சந்தை / பங்கு மாற்றகம் நிறுமங்கள், நிலை மூலதனத்தை திரட்டுவதற்கு உதவிபுரிகிறது.
   - பங்கு மாற்றகம், முதலீட்டாளர்கள் தங்களுடைய பத்திரங்களை வாங்க அல்லது விற்க வாய்ப்பு அளிப்பதன் மூலமாகவும், அதேசமயம் நிறுமங்களின் நிலையான மூலதனம் பாதிக்காத வகையிலும் இருக்க உதவி செய்கிறது.

3) **தொழிற்துறை வளர்ச்சி**
   - தொழிற் துறையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு, மூலவளங்களை மாற்றுவதன் மூலம் பங்குமாற்றகம் ஒரு மைய சந்தையாக உள்ளது.
   - இது நிறும பத்திரங்களில் முதலீட்டிற்கான நிதிகளை திரட்டுவதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

3. **ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுமங்களைப் பற்றி விளக்குக.**

அ) **ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுவனங்கள்**

- விற்பனை மூலம், பெறவேண்டிய பெறுதல்களின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே, ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.
- ஏட்டுக்கடன் தரகு முகமை, அதனுடைய வாடிக்கையாளர்களுக்காக, ஏட்டுக்கடன்களை வசூலிக்கும்.

ஆ) **துணிகர நிதி நிறுவனம்** ( MAR 2020 )

- துணிகர மூலதன நிதி என்பது, சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும்.
- இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- துணிகர மூலதனம் என்பது, தொழில் நுட்ப திட்டங்களை வணிக மயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெருவினாக்கள் )

1. **மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விளக்குக** ( MAR 2020 )

அ) **பத்திரங்களின் சந்தை**

- பங்குகள், கடனுறுதிப் பத்திரங்கள் போன்ற பத்திரங்கள் மூலதனச் சந்தையில் கையாளப்படுவதால், இது பத்திரங்களின் சந்தை என அழைக்கப்படுகிறது.

ஆ) **விலை**

- பத்திரங்களின் விலை, மூலதனச் சந்தையில் பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

இ) **பங்கேற்பாளர்கள்**

- மூலதனச் சந்தையில் ஈடுபடுபவர்கள் தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதிநிறுவனங்கள் போன்றவர்களை உள்ளடக்கியுள்ளது.

ஈ) **இட அமைவு**

- மூலதனச் சந்தைக்கான இடம், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதில்லை என்றாலும், பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் வேண்டும்.

உ) **நிதிசார்ந்த சொத்துக்களின் சந்தை**

- மூலதனச் சந்தை, நீண்டகால நிதி சார்ந்த சொத்துக்களுக்கான ஒரு மேடையை வழங்குகிறது.

2. **மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. ( ஏதேனும் 5 )**

1) **சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம்** ( MAR 2023 )

- மூலதனச்சந்தையில், பல்வேறு வகையான பத்திரங்கள் பல்வேறு துறையைச் சார்ந்து மக்களிடமிருந்து சேமிப்பை திரட்டுவதற்கு உதவி செய்கின்றது.
- பத்திரங்கள் முதலீடு செய்யும் மக்களுக்கு நிச்சயமான ஊக்கத் தொகையாக, பங்கு மாற்றகத்தின் இரட்டை சிறப்பியல்புகளான நியாயமான வருவாய் மற்றும் நீர்மைத் தன்மை கிடைக்கிறது.
- இது நாட்டில் மூலதன உருவாக்கத்தை முடுக்குகிறது.

2) **நிலையான மூலதனம்**

- மூலதனச்சந்தை / பங்கு மாற்றகம் நிறுமங்கள், நிலை மூலதனத்தை திரட்டுவதற்கு உதவி புரிகிறது.
- பங்கு மாற்றகம் முதலீட்டாளர்கள் தங்களுடைய பத்திரங்களை வாங்க அல்லது விற்க வாய்ப்பு அளிப்பதன் மூலமாகவும், அதேசமயம் நிறுமங்களின் நிலையான மூலதனம் பாதிக்காத வகையிலும் இருக்க உதவி செய்கிறது.

3) <u>தொழிற்துறை வளர்ச்சி</u>

- பொருளாதாரத்தின் தொழிற் துறைக்கு மூலவளங்களை மாற்றுவதன் மூலம் பங்குமாற்றகம் ஒரு மைய சந்தையாக உள்ளது. இது போன்ற நிறுவனங்கள் உற்பத்தி வழிகளில் முதலீடு செய்ய மக்களை ஊக்குவிக்கின்றது.
- எனவே, இது நிறும பத்திரங்களில் முதலீட்டிற்கான நிதிகளை திரட்டுவதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

4) <u>உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை</u>

- பங்கு மாற்றகம், வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் பத்திரங்களை, வாங்க மற்றும் விற்பதற்கு ஒரு வசதியான மையத்தை வழங்குகிறது.
- எளிய சந்தையிடுதல் பத்திரங்களில் முதலீடு செய்வதில் மற்ற சொத்துக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிக நீர்மைத் தன்மையை உருவாக்குகிறது.

5) <u>செயல் திறனுக்கு நம்பகமான வழிகாட்டி</u>

- மூலதனச்சந்தை, நிறுமங்களின் செயல்திறன் மற்றும் நிதி நிலைக்கு ஒரு நம்பகமான வழிகாட்டியாக, சேவை புரிகிறது.

6) <u>நிதிமுதலீட்டிற்கான வழிகாட்டி</u>

- பத்திரங்களின் நடப்பு சந்தை விலை மற்றும் அதன் வருவாய், பொதுமக்கள் தங்கள் நிதியை ஒரு குறிப்பிட்ட நிறுமத்தில் முதலீடு செய்ய வழிகாட்டும் காரணியாக உள்ளது.
- இது பொது நலனுக்காக, நிதியை திறன்பட பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.

7) <u>பல்வேறு சேவைகளை வழங்குதல்</u>

- மூலதனச் சந்தையில் செயல்படும் நிதி நிறுவனங்கள், தொழில் முனைவோருக்கு நீண்டகால மற்றும் நடுத்தர கால கடன்களை வழங்குதல், ஒப்புறுதி வழங்குதல், நிறுமங்களை தோற்றுவித்தலில் உதவி செய்தல், நேர்மைபங்கு முதலில் பங்கேற்றல், நிபுணர்களின் அறிவுரைகளை வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குகிறது.

8) <u>எளிய நீர்மைத் தன்மை</u>

- இரண்டாம் நிலைச்சந்தையின் துணைக் கொண்டு, முதலீட்டாளர்கள் தங்களின் பத்திரங்களை விற்று, நீர்மை ரொக்கமாக மாற்ற, வழிவகை செய்கிறது.

---

**3. நிதிச் சந்தையின் பல்வேறு வகையான புதிய நிறுவனங்களைப் பற்றி விளக்குக. ( ஏதேனும் 5 )**

1) <u>துணிகர நிதி நிறுவனம்</u>

- துணிகர மூலதன நிதி என்பது, சாதாரண நிதியில் ஒரு பகுதி ஆகும்.
- இது புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பிற்கு நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- துணிகர மூலதனம் என்பது, தொழில்நுட்ப திட்டங்களை வணிகமயமாக்குவதற்கு தேவையான நிதியினை அளிக்கிறது.

2) <u>பரஸ்பர நிதி</u>

- சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாக மாற்றும் நிதி நிறுவனங்களையே பரஸ்பர நிதி என்கிறோம்.
- பரஸ்பர நிதி நிறுவனம் பங்குதாரரர்களிடமிருந்து பெற்ற நிதியினை முதலீடு செய்வதற்கு, அந்த முதலீடிலிருந்து பெற்ற பலனை பங்குதாரர்களுக்கு அளிக்கிறது.
- நிதி நிறுவனங்களான LIC, UTI மற்றும் வணிகவங்கிகள் SBI மற்றும் கனரா வங்கி போன்றவை பரஸ்பர நிதி வணிகத்தில் ஈடுபடுகின்றன.

3) <u>ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுவனங்கள்</u>

- விற்பனை மூலம் பெறவேண்டிய பெறுதல்களின் அடிப்படையில், நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன் தரகு முகமை ஆகும்.
- ஏட்டுக்கடன் தரகு முகமை அதனுடைய வாடிக்கையாளர்களுக்காக ஏட்டுக் கடன்களை வசூலிக்கும்.

- இந்தியாவில் செயல்படும் சிலநிறுவனங்களாவன, SBI, மற்றும் வணிகசேவைகள் SBI - ன் துணை நிறுவனம் மற்றும் கான்பேங்க் ஃபேக்டரிக் லிமிடெட், கனரா வங்கியின் துணை நிறுவனம் ஆகும்.

4) **<u>இந்திய எதிர் பங்கு மாற்றகம்</u>**

- பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு முலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்.
- இதன் மூலம் முதலீட்டாளர் மற்றும் நிறுமத்திற்கு சில பிரச்சனைகள் இருந்த போதும் வெளிப்படைத் தன்மை, விரைவான முடிவு, நெகிழ்வு தன்மை ஆகிய நன்மைகளையும் அளிக்கிறது.

5) **<u>இந்திய தேசியப் பங்கு மாற்றகம் லிமிடெட்</u>**

- பங்குச் சந்தையின் மாதிரியாக NESI என்பது 1992 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இச்சந்தையின் நோக்கமானது மின்னணு பங்குகளை, இந்தியா முழுவதும் அமைத்துக் கொடுப்பதாகும்.
- இந்நிறுவனம் திறமையான மற்றும் வெளிப்படைத் தன்மை கொண்ட பங்கு வியாபாரத்தையே எதிர்பார்கிறது.

6) **<u>தேசிய பத்திரங்கள் களஞ்சியம் லிமிடெட்</u>**

- காகிதமில்லா மற்றும் காகிதமாற்று பங்குகளை கொண்டு வருவதற்காக 1996 ம் ஆண்டு NSDL ல் உருவாக்கப்பட்டது.
- இரண்டாம் சந்தையில், வியாபாரத்திற்கு பின் ஏற்படும் சிக்கல்களை தீர்கவும் NSDL ல் உருவாக்கப்பட்டது.

7) **<u>இந்திய பங்கு வைப்பு கழகம் லிமிடெட்</u>**

- இந்திய பங்கு வைப்பு கழகம் லிமிடெட் - ன் நோக்கமானது, பங்குச்சந்தை நடவடிக்கையில், மத்திய பத்திர வைப்பாக செயல்படுவதே ஆகும்.
- இக்கழகம் தேசிய அளவிலான நிர்வாக சீர்திருத்த பணிகளையும் செய்கிறது.

## <u>அத்தியாயம் 6 . பணச் சந்தை</u>

### <u>இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )</u>

**1. வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன?**

- வைப்பு சான்றிதழ், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் குறுகிய காலவைப்பு ஆவணங்களாகும்.
- இவற்றை வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தங்களது நிதி ஆதாரங்களை உயர்த்திக் கொள்வதற்காக வெளியிடுகின்றன.

**2. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?** ( MAR 2020 , JUN 2023 )

- அரசு அல்லது தங்க முனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு 'அரசு பத்திரங்கள் சந்தை' என்று பெயர்.

**3. ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது?**

- வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே 'ஏலம் விடுதல்' என அழைக்கப்படுகின்றது.

**4. மாற்றம் / மாறுதல் என்பதன் பொருள் யாது?**

- ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக, மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்ய கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இரண்டாம்நிலை சந்தையில், இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்ட அதன் திறந்த சந்தை செயல்பாடு 'மாறுதல்' என்று அழைக்கப்படுகிறது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை? ( ஏதேனும் 3 ) ( AUG 2021 , MAY 2022 )**

❖ கருவூல இரசீது பின்வரும் பொதுவான இயல்புகளை உடையது. அவை பின்வருமாறு

1) வெளியிடுபவர்
2) நிதி இரசீது
3) நீர்மைத் தன்மை
4) முக்கிய ஆதாரம்
5) பண மேலாண்மை

---

2. **பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்? ( ஏதேனும் 3 )**

1. பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள்
2. பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள்
3. தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள்
4. பரஸ்பர நிதி நிறுவனங்கள்
5. காப்பீட்டு நிறுவனங்கள்
6. வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்
7. இந்திய ரிசர்வ்வங்கி மற்றும் பாரதஸ்டேட் வங்கி
8. வணிக வங்கிகள்
9. மாநில அரசுகள்
10. பொதுமக்கள்

---

3. **கருவூல இரசீதின் வகைகளை விவரி. ( ஏதேனும் 3 ) ( JUN 2023 )**

❖ கால வரையறை அடிப்படையில், இந்த இரசீதுகள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு.

1) <u>91 நாட்கள் கருவூல இரசீதுகள்</u>

❖ 91 நாட்கள் கருவூல ரசீதுகள் ஒரு நிலையான 4 சதவீத தள்ளுபடி விகிதத்தில் ஏலத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன.

2) <u>182 நாட்கள் கருவூல இரசீதுகள்</u>

❖ 182 நாட்கள் கருவூல இரசீதுகளை ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படை யில் வெளியிடப்படுகிறது.

3) <u>364 நாட்கள் கருவூல இரசீதுகள்</u>

❖ 364 நாட்கள் கருவூல இரசீதுகள் எவ்வித நிலையான விகிதமும் கொண்டு செயல்படுவதில்லை.

---

4. **வணிக இரசீதின் வகைகளை விவரி. ( ஏதேனும் 3 )**

அ. <u>தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள்</u>

❖ தேவை இரசீது என்பது, பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீது ஆகும்.

❖ எனவே தேவை இரசீது என்பது, அந்த இரசீதை வைத்திருப்பவர், தனக்கு எப்பொழுது பணம் தேவைப்படுகிறதோ, அப்போது அந்த இரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. <u>தூய்மை இரசீதுகள் மற்றும் ஆவண இரசீதுகள்</u>

❖ பொருட்களின் உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்ட இரசீதுகள், ஆவண இரசீதுகள் என்று அழைக்கப்படுகிறது.

❖ எந்த ஒரு ஆவணமும், எழுதி இணைக்கப்படாத இரசீதுகள் தூய்மை இரசீதுகள் ஆகும். <u>எ.கா</u>: தொடர்வண்டி இரசீது மற்றும் சரக்குந்து இரசீது.

இ. <u>உள்நாடு மற்றும் அயல்நாட்டு இரசீதுகள்</u>

- ❖ இந்தியாவில் குடியிருக்கும் ஒரு நபருக்கு, இந்தியாவில் எழுதப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய இரசீதுகள் ஆகியவற்றை உள்நாட்டு இரசீதுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- ❖ அயல்நாட்டு இரசீதுகள் என்பது, இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு, இந்தியாவிலோ அல்லது அயல்நாட்டிலோ செலுத்தப்படும் இரசீதுகளை அயல்நாட்டு இரசீதுகள் என்று அழைக்கப்படுகின்றன.

ஈ. <u>தனித்துவமான இரசீதுகள்</u>

- ❖ தனித்துவமான இரசீதுகள் என்பது, வரைதல் மற்றும் ஏற்றுக் கொள்ளல், உள்ளூர் வழக்கப்படி அல்லது வர்த்தகப் பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுவதைக் குறிக்கிறது.

உ. <u>இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்</u>

- ❖ உண்மையான வியாபார நடவடிக்கைகள் அல்லாமல் உருவாக்கப்படும் இரசீதுகளை, இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள் என்று அழைக்கப்படுகின்றன.

## <u>கூடுதல் வினா</u>

1. **ஒரு மாதாந்திர சம்பளதாரரை தங்கமுனை பத்திரத்தில் முதலீடு செய்ய மூன்று அறிவுரைகளை வழங்குக.** ( SEP 2020 )

1) அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால், அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானது.
2) அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால், முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.
3) முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரிவிலக்கு கிடைக்கின்றது.
4) இந்தியாவில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தை ஆகிய இரண்டு சந்தைகளிலும், தங்கமுனை பத்திரங்கள் சந்தைப்படுத்தப்படுகிறது.

## <u>ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )</u>

1. **பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.** ( ஏதேனும் 5 ) ( AUG 2021 , MAY 2022 )

| வ.எண் | தன்மைகள் | பணச்சந்தை | மூலதனச்சந்தை |
|---|---|---|---|
| 1 | நிதியின் காலம் | ஒரு வருடத்திற்கும் மிகாமல் நடக்கும், குறுகியகால சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேலான நீண்டகாலம் நடக்கும் சந்தை |
| 2 | வணிக ஆவணங்கள் | மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச்சீட்டு, வணிகத்தாள் | பங்குகள், கடனீட்டுப்பத்திரங்கள், அரசு பத்திரங்கள் |
| 3 | பரிவர்த்தனை நடைபெறும் இடம் | முறையான இடம் ஏதும் இல்லாமல், தொலைப்பேசி வழியாக பரிவர்த்தனை நடைபெறும் | முறையான இடத்தில் பரிவர்த்தனை நடைபெறும். <u>உதாரணம்</u> : பங்கு பரிமாற்றம் |
| 4 | பங்கேற்பாளர்கள் | வங்கியாளர்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் அரசு | இடைத்தரகர்கள், முதலீட்டாளர்கள், வணிக வங்கியர்கள், ஒப்புறுதியாளர்கள் மற்றும் வணிக வங்கிகள் |

| | | | |
|---|---|---|---|
| 5 | இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்தளவு உள்ளது. | கடன் மற்றும் சந்தை ஆபத்து அதிகளவு உள்ளது |
| 6 | நீர்மைத்தன்மை | நீர்மைத்தன்மை கொண்டது | குறைந்தளவு நீர்மைத்தன்மை கொண்டது |
| 7 | விலை மதிப்பு தெரிந்து கொள்ளுதல் | வெளிப்படைத் தன்மை ஏதும் இல்லை | வெளிப்படைத் தன்மை உள்ளது |
| 8 | ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மைய வங்கி | மைய வங்கி தவிர செபி போன்ற தனித்த ஒழுங்குபடுத்தும் அமைப்புகள் |
| 9 | ஒப்புறுதியளித்தல் | ஒப்புறுதியளித்தல் முதன்மைப் பணி அல்ல | ஒப்புறுதியளித்தல் முதன்மைப் பணி ஆகும் |
| 10 | ஆதிக்க நிறுவனங்கள் | வணிக வங்கிகள் | வங்கி அல்லாத நிதி நிற்வனங்கள் மற்றும் தனிச் சிறப்பு நிதி நிறுவனங்கள் |

2. **பணச்சந்தையின் சிறப்பியல்புகளை விவரி.** ( ஏதேனும் 5 ) ( JUL 2022 )

1) **குறுகிய கால நிதிகள்**
   - முற்றிலும் குறுகிய கால நிதிகள் அல்லது பணத்திற்கு நிகரான நிதி சொத்துக்களுக்கான ஒரு சந்தை இது ஆகும்.

2) **முதிர்வு காலம்**
   - இச்சந்தையில், ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்வு காலம் கொண்ட நிதி சொத்துக்களை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

3) **பணமாக மாற்றுவது**
   - உடனடியாக பணமாக மாற்றியமைக்கக் கூடிய நிதிச் சொத்துக்களை மட்டுமே, இச் சந்தையில் இழப்பு இல்லாமல், குறைந்தபட்ச பரிவர்த்தனை செலவில் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

4) **முறையான இடமில்லை**
   - பொதுவாக பரிவர்த்தனைகள் தொலைபேசி அதாவது வாய்மொழி தொடர்பு மூலமாக நடைபெறுகின்றன.
   - மூலதனச் சந்தையில் உள்ளது போல் பங்குச்சந்தையில் ஒரு முறையான இடமில்லை.

5) **துணை சந்தைகள்**
   - இது ஒரு ஒற்றைத் தன்மையுள்ள சந்தை அல்ல.
   - இது தனித்தனி சிறப்புடைய பல துணைச் சந்தைகளின் தொகுப்பாகும்.

   **ஏ.கா**: அழைப்பு பணச்சந்தை, ஏற்புச்சந்தை மற்றும் மாற்றுமுறை ஆவண சந்தைகள்.

6) **சந்தையின் பங்கு**
   - மத்திய வங்கி, வணிக வங்கிகள், வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள், தள்ளுபடியகம் மற்றும் ஏற்பகங்கள், பணச் சந்தையின் கூறுகளாகும்.

7) **இரண்டாம் நிலை சந்தையின் தேவை**
   - இச்சந்தையில் பயன்படுத்தப்படும் நிதிச்சொத்து ஆவணங்களுக்கு, ஒரு சிறப்பான இரண்டாம் நிலைசந்தை தேவைப்படுகிறது.

3. **அரசுப்பத்திரங்களின் இயல்புகளை விவரி.** ( ஏதேனும் 5 ) ( JUN 2023 )

1) **இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு பணி**
   - ❖ இந்திய ரிசர்வ் வங்கி அரசு பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது.

2) **பத்திரங்களின் இயல்பு**
   - ❖ அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால், அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாகவும் மேலும் அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால், முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

3) **பணப் புழக்க விபரம்**
   - ❖ தங்க முனைபத்திரங்கள் பலவகை நீர்மைதன்மை கொண்டவை.
   - ❖ அதன்படி மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்திரங்கள் அதிக நீர்மைதன்மை கொண்டதால், அதன் பணப்புழக்கமும் அதிகமாக இருக்கும்.

4) **வரிவிலக்கு**
   - ❖ முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரிவிலக்கு அளிப்பது, அரசு பத்திரங்களின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

5) **படிவங்கள்**
   - ❖ பங்கு சான்றிதழ்கள், உறுதிமொழி சீட்டுகள் மற்றும் கொணர்பவர் பத்திரங்கள் போன்ற வடிவங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் வழங்கும் பத்திரங்கள் இருக்கும்.

6) **பங்கேற்பாளர்கள்**
   - ❖ அரசு பத்திர சந்தையில், அரசுத்துறை வைத்துள்ள வளங்களைப் பரிமாற்றம் செய்வதில், ஒருங்கிணைந்த பங்கேற்பாளர்களாக, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் உள்ளன.

7) **வெளியீட்டு இயந்திரம்**
   - ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் கீழுள்ள பொது கடன் அலுவலகம், அரசு பத்திரங்களை வெளியிடுகிறது.

8) **மாற்றம்**
   - ❖ ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்ய கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இரண்டாம் நிலைசந்தையில் இந்திய ரிசர்வ்வங்கி மேற்கொண்ட அதன் திறந்த சந்தை செயல்பாடு 'மாறுதல்' என்று அழைக்கப்படுகிறது.

9) **ஏலமிடுதல்**
   - ❖ வர்த்தகர்கள் ஒருவர் ஒருவரோடு போட்டியிடும் முறையில் பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே 'ஏலம் விடுதல்' என அழைக்கப்படுகின்றது.

# அலகு 3 . நிதிச் சந்தை - II

## அத்தியாயம் 7 . பங்கு மாற்றகம்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **பங்குச் சந்தை என்றால் என்ன?** ( MAY 2022 )
   - ❖ பங்குச் சந்தை என்பது பெருநிறுவன மற்றும் பிற பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தையாகும்

     ( அல்லது )
   - ❖ பங்குச் சந்தை என்பது, தொழில்துறை மற்றும் நிதிப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை

2. **இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச்சந்தைகளை பற்றி எழுதுக.**

1) தி பாம்பே பங்குச்சந்தை
2) பெங்களூரு பங்கு சந்தை லிமிடெட்
3) புவனேஷ்வர் பங்குச் சந்தை
4) கொச்சி பங்கு பரிவர்த்தனை லிமிடெட்
5) தில்லி பங்குச் சந்தை சங்கம் லிமிடெட்
6) ஹைதராபாத் பங்கு பரிவர்த்தனை லிமிடெட்
7) ஜெய்ப்பூர் பங்கு பரிவர்த்தனை லிமிடெட்
8) சென்னை பங்கு சந்தை லிமிடெட்

3. **துணைத் தரகர் என்றால் என்ன?**

- பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகச் செயல்பட்டு, தன்னை அமர்த்திய முதல்வருக்கு அதாவது உறுப்பினருக்கு வியாபாரத்தைப் பெற்றுத் தந்து, அதற்காகக் கழிவு பெறுபவர் துணைத் தரகர் ஆவார்.

4. **தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள்?** ( AUG 2021 , JUL 2022 , JUN 2023 )

- பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்குமிடையே இடைநிலையாளர்களாக செயல்படுபவர்கள் தரகர்கள் ஆவார்.
- இவர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை.
- தரகர்கள், கழிவு முகவர் ஆவர்.

5. **ஊக வணிகர்களின் வகைகள் யாவை?** ( MAR 2023 )

- காளை, கரடி, கலைமான், முட வாத்து

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் ):

1. **பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி? ( ஏதேனும் 3 )** ( JUN 2023 )

i) பங்கு பரிவர்த்தனையின் சீரான கட்டுப்பாடு இல்லை
ii) பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லை
iii) ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி.
iv) ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது.
v) பங்கு மாற்றகங்களில் பங்குகளை பட்டியலிட சரியான ஒழுங்கு முறைகள் இல்லை.

2. **காளை மற்றும் கரடி - விளக்குக.** ( JUL 2022 )

**காளை** ( AUG 2021 )

- பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊகவணிகர்.
- இவர் தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார்.
- இவர் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்க முனைகிறார்.
- இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.
- ஒரு காளை தன்னுடைய கொம்புகளால் எதிரிகளை உயரே அல்லது மேல் நோக்கி தூக்கி எறிவது போன்று, இந்தவகை ஊகவணிகர் பிணையப் பத்திரங்களின் விலையை உயரச் செய்யும் நோக்கோடு செயல்படுவதால் காளை எனப் பெயரை பெற்றுள்ளார்.

**கரடி** ( MAR 2020 , 2023 )

- எதிர்காலத்தில் பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுகின்ற ஊகவணிகர்.
- இவர் மண்டிவாலா என்று அழைக்கப்படும் ஊகவணிகர்
- இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

- ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது. அதேபோல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.

**3. மான் மற்றும் முடவாத்து - விளக்குக.**

**கலைமான்** ( MAY 2022 )

- ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என்று அறிந்தவுடன், புதிய விடுப்புகளில் பங்கு கோரி விண்ணப்பம் செய்யும் ஊகவணிகர்.
- எந்த நிறுமங்களின் பங்கு வெளியீடு பொதுமக்களால் விரும்பப்படுகிறது, முனைமத்துடன் விற்கப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்து அந் நிறுமங்களை தேர்வு செய்வார்.
- இவர் 'முனைம வேட்டையாளர்' என்று அழைக்கப்படுகிறார்.
- கலைமான் ஊகவணிகர் முன்னெச்சரிக்கை உடையவர்.

**முடவாத்து**

- தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார்.
- கரடி ஊக வணிகர், பின்னர் கொடுப்பதற்காகத் தற்போது பத்திரங்களை விற்பார்.
- ஆனால், குறிப்பிட்ட நாளில் பங்குகளை வைத்துள்ள எவரும் அதை விற்க விரும்பாததால், எந்த விலையிலும் வாங்குவதற்கு, எந்த ஒரு பங்கும் கிடைக்காமல் மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் (பெறுவிடை வினாக்கள்)

**1. பங்குச் சந்தை பணிகளை விவரி? ( ஏதேனும் 5 ) ( AUG 2021, MAY 2022 )**

1) **உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை**
   - பங்கு பரிவர்த்தனை உண்மையில், ஏற்கனவே இருக்கும் பத்திரங்களுக்கு ஒரு சந்தை.
   - ஒரு முதலீட்டாளர் தனது பத்திரங்களை விற்க விரும்பினால், அவர் எளிதில் விரைவாக பங்குச் சந்தைகளில் அவற்றை விற்பனைச் செய்யலாம்.
   - பத்திரங்களின் இந்த எளிமையான விற்பனைத் திறன், அவர்களின் பணப் புழக்கத்தை அதிகரிக்கிறது மற்றும் இதன் விளைவாக அவர்களுடைய மதிப்பை அதிகரிக்கிறது.
2) **பத்திரங்கள் சரியான மதிப்பீடு**
   - பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலைகள் பதிவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.
   - இந்த விலைகள் "சந்தை மேற்கோள்கள்" என்று அழைக்கப்படுகின்றன.
   - இந்த மேற்கோள்களின் அடிப்படையில் ஒருவர் பத்திரங்களின் மதிப்பை எளிதாக மதிப்பீடு செய்யலாம்.
3) **முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு**
   - ஒரு பங்கு பரிவர்த்தனையில் அனைத்து ஒப்பந்தங்களும் நன்கு வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப உள்ளன.
   - உதாரணமாக, தங்கள் சேவைகளுக்கான அதிகமான கமிஷன்களை புரோக்கர்கள் வசூலிக்க முடியாது.
   - இதனால் பங்குச் சந்தை பரிவர்த்தனைகளின் கொள்முதல் மற்றும் விற்பனையில் நியாயமான அளவீடு மற்றும் நியாயமான நடவடிக்கைகளை வழங்குகிறது.
4) **மூலதனதனத்தை சரியான முறையில் வழிப்படுத்துதல்**
   - மக்கள் நல்ல லாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில், முதலீடு செய்ய விரும்புகின்றனர்.
   - தனி நபர்களின் சேமிப்பு, ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில், நல்ல லாபத்தை அறிவிக்கும் நிறுவனங்களுக்கு உறுதியளிக்கிறது.

- ஆனால் பங்குச் சந்தைகளுக்கு, இந்த சேமிப்புக்கள், இலாபமற்ற அலகுகள் பங்குகள் மீது வீணடிக்கப்படக் கூடும்.

5) <u>மூலதன உருவாக்கத்திற்கான உதவி</u>
   - பங்குச் சந்தை பரிமாற்றம் பல்வேறு தொழில்துறை பத்திரங்கள் மற்றும் அவற்றின் விலைகள் மற்றும் அவர்களின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு வழங்கிய வசதிகள் ஆகியவற்றை மக்களுக்கு சேமித்து, முதலீடு செய்ய தூண்டுகிறது.
   - பங்கு பரிமாற்றங்கள், ஒரு நிலையான மூலதனத்தை தொழில் துறையில் உறுதிப்படுத்துகின்றன மற்றும் தொழில் துறைவளர்ச்சிக்கு உதவுகின்றன.

6) <u>ஊக வணிகத்திற்கான வசதிகள்</u>
   - ஊகவணிகம் என்பது, பங்கு பரிவர்த்தனை நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
   - ஊகவணிகத்தின் விளைவாக, பத்திரங்களின் தேவை மற்றும் வழங்கல் சமமாகிறது. இதேபோல், விலை நகருவுகள் சுமூகமாக அளிக்கப்படுகின்றன.

7) <u>பருவகால பத்திரங்கள்</u>
   - புதிய நிறுவனங்கள் பங்குகள் வெளியிடும் பொழுது, ஊகவணிகர்கள் மற்றும் பொறுப்புறுதியாளர்கள் தற்காலிக கால வணிகத்தில் ஈடுபடுகின்றனர்.
   - புதிய வெளியீடுகளை சந்தை ஈர்க்க தயாராகும் பொழுது அவர்களுக்கு அவைகள் சந்தையை திறந்து விடுகின்றன.

---

**2. பங்குச் சந்தை தன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 ) ( JUL 2022 )**

1) <u>பத்திரங்களுக்கான சந்தை</u>
   - இது பெருநிறுவனங்கள், அரசு மற்றும் அரசுக்கு இணையான நிறுவனங்கள் ஆகியவற்றின் பத்திரங்கள் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

2) <u>மறுவிற்பனை பத்திரங்களுக்கான சந்தை</u>
   - நிறுவனங்களால் ஏற்கனவே வெளியிடப்பட்ட பங்குகள், கடனீட்டு பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் விற்பனையில் இது ஈடுபடுகிறது.
   - எனவே, இது இரண்டாம் நிலைசந்தை என்று அழைக்கப்படுகிறது.

3) <u>பத்திர வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல்</u>
   - பங்கு மாற்றகம் அதன் சொந்தகணக்கில் எந்தப் பத்திரங்களையும் வாங்குவதோ விற்பதோ இல்லை.
   - பத்திர வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் பங்கு மாற்றக உறுப்பினர்கள் மற்றும் தரகர்கள் ஆகியோர் பத்திரங்களை வர்த்தகம் செய்வதற்கு தேவையான உள் கட்டமைப்பு மற்றும் வசதிகளை அது வழங்குகிறது.

4) <u>பட்டியலிடப்பட்ட பத்திரங்களில் மட்டும் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதியளித்தல்</u>
   - உண்மையில் பங்கு மாற்றகம் அலுவல் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பத்திரங்களை மட்டுமே வாங்கி விற்க அனுமதிக்கிறது.
   - பங்கு பரிவர்த்தனைகளின் பட்டியலில் காணப்படாத பத்திரங்கள், பட்டியலிடப்படாத பத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
   - அத்தகைய பட்டியலிடப்படாத பத்திரங்கள், பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யமுடியாது.

5) <u>உறுப்பினர்களால் மட்டும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்</u>
   - பங்கு மாற்றகத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகை பத்திர நடவடிக்கைகளும் அதன் அங்கீகரிக்கப்பட்ட தரகர்கள் மற்றும் உறுப்பினர்கள் மூலமாக மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன.

6) <u>தனிநபர்களின் அமைப்பு</u>
   - இது, தனி நபர்களின் அல்லது குழுக்களின் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அமைப்பாக இருக்கலாம்.

7) <u>மத்திய அரசின் அங்கீகாரம்</u>

- இது, ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சந்தையாகும்.
- அரசின் அங்கீகாரம் இதற்கு தேவைப்படுகிறது.

---

3. **பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தருக.** ( MAR 2020 , JUN 2023 )

| வ.எண் | சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை | பாண்டமாற்று பரிவர்த்தனை |
|---|---|---|---|
| 1 | பொருள் | பங்குச் சந்தை என்பது, தொழில்துறை மற்றும் நிதிப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை. | ஒரு பண்டமாற்ற பரிமாற்றம் என்பது, பண்டமாற்ற சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் இடத்தில் பொருட்களை பரிமாற்றம் செய்வதாகும். |
| 2 | பணிகள் | சந்தைப்படுத்தலை எளிதாக்கிறது | பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக்காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மைத்தன்மை ஏற்படுத்துகிறது |
| 3 | நோக்கம் | பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குகிறது | ஆபத்து குறைப்பு மூலம், பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுகிறது |
| 4 | பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், நிறுவனங்களின் வியாபாரிகள் மற்றும் ஊகவணிகர்கள் |
| 5 | ஒப்பந்தங்களின் காலம் | ரொக்கம், உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு | எதிர்கால சந்தை ஒப்பந்தங்களுக்கான 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள் |
| 6 | ஆவணங்கள் வர்த்தகம் | இதில், பங்குகள், பத்திரங்கள், தொழில்துறை பத்திரங்கள் சந்தைப்படுத்தப்படுகின்றது | இதில், அதிகளவு வர்த்தகம், விலை நிச்சயமற்ற மற்றும் கட்டுபாடற்ற பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகின்றது |
| 7 | ஊகவணிகம் | ஒரு பரந்த, தயாராக, நீர்மை மற்றும் தொடர்ச்சியான பத்திரங்கள் விற்பனையை உறுதிப்படுத்துகின்றன | விலை இடர்பாட்டின் ஈர்ப்பு உத்தேசத்தை உறுதி செய்கிறது |

# அத்தியாயம் 8 . இந்தியப் பத்திர மாற்றக வாரியம் (செபி)

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள்)

**1. செபி பற்றிய சிறுகுறிப்பு வரைக.**

- நமது மூலதன சந்தையை ஒழுங்குப்படுத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட உயர் அமைப்பு இந்தியப் பத்திர மற்றும் மாற்றங்களின் வாரியம் (செபி) ஆகும்.
- இது இந்திய அரசால் 1988 - ல் உருவாக்கப்பட்டது.
- ஆனால் 1992 - ஆம் ஆண்டில் சட்டமுறை அதிகாரம் பெற்றது.
- செபி மும்பையில் உள்ள பாந்திராகுர்லா வளாகத்தின் வணிக மாவட்டத்தில் அதன் தலைமையகம் உள்ளது.

**2. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.**

1) பங்குச் சந்தைகளை ஒழுங்குபடுத்துவது
2) முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது
3) உள்வழி வியாபாரத்தை சரி பார்க்க பல நடவடிக்கைகள் எடுப்பது
4) இடைநிலையர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவது மற்றும் கண்காணிப்பது

**3. செபியின் தலைமையகம் பற்றி குறிப்பிடுக.**

- செபி மும்பையில் உள்ள பாந்திராகுர்லா வளாகத்தின் வணிக மாவட்டத்தில் அதன் தலைமையகம் உள்ளது.

**4. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை?**

1) நிரந்தர கணக்கு எண் (PAN card)
2) வாக்காளர் அட்டை (Voter's ID)
3) ஓட்டுநர் உரிமம் (Driving license)
4) வங்கி செல்லேடு (Bank Pass book)
5) வருமான வரி படிவங்கள் (Income Tax returns)
6) மின்கட்டண ரசீது (Electricity Bill)
7) தொலைபேசி கட்டண ரசீது (Telephone Bill)
8) மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் வழங்கிய புகைப்படம் ஒட்டிய அடையாளச் சான்றிதழ்கள்.

## கூடுதல் வினா

**1. செபியின் தலைமையகம் எது? அதன் பணிகளில் ஏதேனும் ஒன்றினைக் கூறுக.** ( SEP 2020 )

- செபி, மும்பையில் உள்ள பாந்திராகுர்லா வளாகத்தின் வணிக மாவட்டத்தில் அதன் தலைமையகம் உள்ளது.

  **பணிகள்**


  1) பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.
  2) விதிமுறைகளை வகுப்பது, விசாரணை மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை நடத்துவது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?**
   - ❖ புறத்தோற்றமற்ற பத்திரங்கள் உருவாக்கம் என்பது, நிறுவன பதிவாளரால் காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து, புறத்தோற்றமில்லாத வகையில் பத்திரங்களாக மாற்றல் என்பதாகும்.
   - ❖ பின்னர் அதற்குத் சமமான எண்ணிக்கையிலான பத்திரங்கள் வைப்புத்தாரரால் முதலீட்டுதாரர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

2. **புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களை கூறுக.**
   - ❖ பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கணக்கு துவக்க, படிவத்துடன் அடையாள மற்றும் முகவரி சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.
   - ❖ நிரந்தர கணக்கு எண் அட்டை வைத்திருக்க வேண்டும்.
   - ❖ ஆவணங்களின் நகல் பிரதிகளை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
   - ❖ ஆனால் சரிபார்ப்புக்கு, அசல் ஆவணங்களை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **செபி அமைப்பின் கட்டமைப்புகளை வரைக.**




## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **செபியின் பணிகளை விவரி.** ( ஏதேனும் 5 ) ( MAR 2023 )
   1) போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாக்கிறது.
   2) பங்கு சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது
   3) பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.
   4) பங்கு சந்தைகளில் செயல்படும் இடைத் தரகர்களால் மேற்கொள்ளப்படும், நிதி மோசடி மற்றும் நியாயமற்ற முறைகளை தடை செய்கிறது.
   5) மூலதன வெளியீட்டில் ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு, வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகளை வெளியிடுகிறது.
   6) இடைத்தரகர்களின் சுய ஒழுங்கு முறை அமைப்பை ஊக்குவித்தலில், இது விரிவான சட்ட அதிகாரங்களை கொண்டுள்ளது.
   7) இந்திய மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

2. **செபியின் அதிகாரங்களை விவரி.** ( ஏதேனும் 5 ) ( JUN 2023 )

1) **பங்குச்சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்**
   - ஆய்வு மற்றும் கூர்ந்தாய்வு மற்றும் பிற நோக்கத்திற்காக வணிக பரிவர்த்தனைகளில் பங்குச்சந்தை மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து தகவலை கேட்கலாம்.
2) **நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்**
   - மூலதனசந்தை இடைத்தரகர்கள் மற்றும் பிறபங்கேற்பாளர்கள் மீது, வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதங்களை சுமத்துவதற்கு செபி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
3) **பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது**
   - செபி ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க அதிகாரம் உண்டு.
4) **பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்**
   - உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அல்லது வணிக வங்கியாளர்களின் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.
5) **பத்திரங்கள் ஒப்பந்த சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள்**
   - பங்குச்சந்தை திறம்பட ஒழுங்குபடுத்த, நிதி அமைச்சகம், பத்திரங்கள் ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்களை செபிக்கு 13 செப்டம்பர், 1994 அன்று ஒரு அறிவித்தல் மூலம் வழங்கியுள்ளது.
   - ஒவ்வொரு பங்குச்சந்தையிலும் ஆளும் குழுவில், மூன்று உறுப்பினர்களை நியமிக்க நிதி அமைச்சகம் செபிக்கும் அதிகாரம் அளிக்கிறது.
6) **பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம்**
   - பத்திரச் சந்தை மற்றும் பரஸ்பர நிதியுடன் தொடர்புடைய இடைநிலையர்கள், மோசடியான மற்றும் முறையற்ற வியாபார செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை கொண்டுள்ளது.

---

## கூடுதல் வினா

1. ஒரு வங்கியின் மேலாளராக உனது வாடிக்கையாளருக்கு புறத்தோற்றமற்ற பத்திரக் கணக்கைத் தொடங்க வழிகாட்டுக. ( SEP 2020 )

1) புறதோற்றமற்ற பத்திர கணக்கை தொடங்க, தேவையான ஆவண நகல்களையும் இணைத்து அத்துடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை சமர்ப்பிக்க சொல்லுதல்,
2) நிரந்தர கணக்கு எண் அட்டை வைத்திருக்க சொல்லுதல்,
3) சரிபார்ப்பதற்கு அசல் ஆவணங்கள் எடுத்து வரச் சொல்லுதல்,
4) வாடிக்கையாளர்கள் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் உடன்படிக்கைகள் மற்றும் அது தொடர்பானவற்றை வழங்குதல்,
5) செயல்முறையின் போது, வைப்பக பங்கேற்பாளர், அமைப்பின் பிரதிநிதி சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும் நபரை தொடர்பு கொண்டு படிவத்தில் வழங்கப்பட்ட விவரங்களை கேட்டு சரிபார்ப்பர்.
6) விண்ணப்பம் செயல்படுத்தப்பட்டவுடன், வைப்பக பங்கேற்பாளர் அமைப்பு வாடிக்கையாளருக்கு ஒரு கணக்கு எண் அல்லது வாடிக்கையாளர் இணையதள முகவரியை வழங்கும்.
7) இணையதளத்தில் புறத்தோற்றமற்ற பத்திர கணக்கை அணுக மேற்கண்ட விவரங்களைப் பயன்படுத்தலாம் என எடுத்துச் சொல்லுதல்.
8) ஒரு புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு வைத்திருப்பவர் கணக்கை பராமரிப்பு மற்றும் பரிவர்த்தனைக் கட்டணத்திற்காக விதிக்கப்படும் வருடாந்திர பராமரிப்பு கட்டணம் போன்ற சில கட்டணங்களை செலுத்தவேண்டும் என எடுத்துச் சொல்லுதல்.
9) புறத்தோற்றமற்ற பத்திர கணக்கு துவங்க, குறைந்தபட்ச இருப்பு பராமரிக்கப்பட வேண்டியது தேவையில்லை என்றும், பங்குகள் இல்லாமலும் ஒரு புறத்தோற்றமற்ற பத்திர கணக்கினை துவங்கலாம் என்றும் எடுத்துச் சொல்லுதல்.

# அலகு 4 . மனித வள மேலாண்மை

## அத்தியாயம் 9 . மனிதவள மேம்பாட்டின் அடிப்படைகள்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( மிகக் குறுகிய விடைவினாக்கள்)

1. **மனித வள மேலாண்மை என்றால் என்ன?**
   - மனித வளத்தை நிர்வகிக்கும் மேலாண்மையின் கிளையே, மனித வள மேலாண்மை என அழைக்கப்படுகிறது.
   - மனிதவள மேலாண்மை என்பது, ஒரு நிறுவனத்தில் ஆட்களை பணியமர்த்தல், ஊக்குவித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான மேலாண்மை பணியை செய்வதாகும்.

2. **மனித வள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.**

( SEP 2020 , MAY 2022 )

   1) உலகளவில் பொருத்தமானது
   2) இலக்கு சம்பந்தமானது
   3) திட்டமிட்ட அணுகுமுறை
   4) அனைத்திலும் பரவலானது
   5) தொடர்ச்சியான செயல்பாடு
   6) மாறும் செயல்பாடு
   7) ஒருங்கினைந்த கருவி
   8) வளர்ச்சியின் மீதான கவனம்

3. **மனித வளத்தின் சிறப்பியல்புகளில் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.**
   i) உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.
   ii) பிற அனைத்து வளங்களையும், மனித வளம் உருவாக்குகிறது.
   iii) மனித வளங்கள் உணர்ச்சிபூர்வமானவை
   iv) மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.
   v) பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர, மனித வளம் என்பது பணியாளர் அல்ல.
   vi) மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

4. **மனித வள மேலாண்மையின் மேலாண்மை பணிகள் என்னென்ன?.**
   1) திட்டமிடுதல் 2) அமைத்தல் 3) இயக்குவித்தல் 4) கட்டுப்படுத்துதல்.

### மூன்று மதிப்பெண் வினாக்கள் ( குறுகிய விடை வினாக்கள் )

1. **மனித வள மேலாண்மையின் வரைவிலக்கணம் தருக.**
   - ஈ.எஃப்.எல். ப்ரெச் அவர்களின் வார்த்தைகளில் மனிதவள மேலாண்மை என்பது, " நிர்வாக செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். மேலும் அவை ஒரு நிறுவனத்தின் மனிதக் கூறுகளை முதன்மையாக கருத்தில் கொண்டுள்ளது".

2. **மனித வளங்களின் இயல்புகள் யாவை?** ( ஏதேனும் 3 ) ( AUG 2021 , MAR 2023 )
   i) உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.
   ii) பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.
   iii) மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
   iv) மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.
   v) மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.
   vi) மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது

3. **மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன?** ( ஏதேனும் 3 )

i) மனித வளத்தின் மூலமாக மட்டுமே மற்ற அனைத்து வளங்களும் திறம்பட பயன்படுத்தப்படுகின்றன.
ii) ஒரு நிறுவனத்தின் நிலையான வளர்ச்சி, முக்கிய வளமான மனித வளத்தை சார்ந்துள்ளது.
iii) தொழில்துறை உறவுகள் மனித வளத்தை சார்ந்துள்ளது.
iv) மனித வளங்கள் மூலமாக மட்டுமே மனித உறவுகள் சாத்தியமாகிறது.
v) மனித வளமானது பிற அனைத்து உற்பத்தி காரணிகளையும் நிர்வகிக்கிறது.
vi) பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் மூலம் மனித வளங்களின் திறனை மேம்படுத்த முடியும்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.** ( ஏதேனும் 5 ) ( JUL 2022 )

i) உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.
ii) பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.
iii) பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர, மனித வளம் என்பது பணியாளர் அல்ல.
iv) மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
v) மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.
vi) மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.
vii) மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது
viii) மனித வளமானது ஒரு குழுவாக செயல்படாலாம்
ix) மனித வளங்கள் தனியாக சிந்திக்கவும், செயல்படவும், பகுப்பாய்வு செய்யவும், மற்றும் விளக்கவும் முடியும்.
x) நிதியுடன் அல்லது நிதியில்லாமலும் மனித வளங்கள் ஊக்குவிக்கப்படலாம்

2. **மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.** ( ஏதேனும் 5 )
( SEP 2020 , JUL 2022 )

1) <u>மனித சக்தி தேவைகளை அடையாளம் காணுதல்:</u>
   - ஒரு நிறுவனத்தில் மனிதவள தேவைகளைத் தீர்மானிப்பது என்பது மிகவும் முக்கியமான ஒரு முதலீட்டு முறையாகும்.
   - செலவுகளை மேம்படுத்த, நிறுவனத்திற்கு தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கையை துல்லியமாக அடையாளம் காணப்பட வேண்டும்.
2) <u>மாற்றங்களை இணைத்துக் கொள்ளல்</u>
   - மாற்றம் என்பது எந்த அமைப்பிலும் நிலையானது மற்றும் இந்த மாற்றத்தை நிறுவனத்தில் திறன்பட அறிமுகப்படுத்த மனித வள மேலாண்மை ஒரு முகவராக செயல்பட வேண்டும்.
3) <u>மனித சக்தியின் சரியான தேவையை உறுதி செய்தல்</u>
   - மனிதவள மேலாண்மையின் மூலமாக நிறுவனத்தில் எந்த நேரத்திலும் பணியாளர்கள் பற்றாக்குறை அல்லது உபரி ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.
4) <u>சரியான வேலைக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்தல்</u>
   - சரியானவேலைக்கு சரியான தகுதியுடைய நபர்களை மனிதவள மேலாண்மை உறுதிப்படுத்துவதால், நிறுவனத்தில் குறைதகுதி அல்லது மிகைதகுதி உடைய பணியாளர்கள் இல்லாத நிலை ஏற்படுகிறது.

5) <u>திறன் மற்றும் அறிவை மேம்படுத்துதல்</u>

- ❖ பணியாளர் திறன் மற்றும் அறிவு மேம்பாடு செயல்பாடுகளை நிர்வகிப்பதில் மனிதவள மேலாண்மையின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தாக இருப்பதோடு மட்டுமில்லாமல், பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் இன்று வரை இருக்கும் தொழில் சார்ந்த அறிவை பணியாளர்களுக்கு வழங்குகிறது.

6) <u>பணியாளர் அர்ப்பணிப்பை தீர்மானித்தல்</u>

- ❖ மனிதவள மேலாண்மை நேர்காணல் அல்லது வினாத்தொகுப்பு வாயிலாக பணியாளர்களுக்கு அவர்களின் பணி அர்ப்பணிப்பு நிலையை தீர்மானிக்கிறது.

7) <u>கூட்டு பிரதிநிதித்துவ வாய்ப்புகளை வழங்க</u>

- ❖ பணியாளர்கள் தங்களது பிரச்சனைகளுக்கு கூட்டு பிரதிநிதித்துவ அடிப்படையில் தீர்வு காண, தொழிற் சங்கங்களை உருவாக்க, மனிதவள மேலாண்மை பணியாளர்களை ஊக்குவிக்கிறது.

---

3. **மனித வள மேலாண்மையின் செயல் பணிகளை விவரி.** ( JUN 2023 )

1) <u>திரட்டுதல்</u>:

- ❖ வேலைபகுப்பாய்வு, மனித வள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தேர்வு, வேலைவாய்ப்பு, பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றின் மூலம் மனித வளத்தை ஈர்க்கும் செயலை குறிக்கிறது.

2) <u>வளர்ச்சி</u>:

- ❖ செயல்திறன் மதிப்பிடுதல், பயிற்சி, செயலதிகாரி வளர்ச்சி, தொழில் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி, நிறுவன வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது அபிவிருத்தியாகும்.

3) <u>ஊதியம்</u>:

- ❖ இது வேலை மதிப்பீடு, ஊதியம் மற்றும் சம்பள நிர்வாகம், ஊக்கத் தொகை, மேலூதியம், விளிம்பு நலன்கள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது

4) <u>ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளுதல்</u>:

- ❖ சுகாதார மற்றும் பாதுகாப்பு, நலன், சமூக பாதுகாப்பு, வேலை திருப்தி மற்றும் வேலையினால் ஏற்படும் வாழ்க்கைத் தரத்தின் மூலம் இது சாத்தியமாகிறது.

5) <u>ஒருங்கிணைத்தல்</u>:

- ❖ தனிப்பட்ட விருப்பத்திற்கும், நிறுவன விருப்பத்திற்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உள்ள செயல்பாடுகளை இச்சொல் குறிக்கிறது.

6) <u>பராமரிப்பு</u>:

- ❖ பணியாளர் திருப்தியுடன் பணியாற்ற, பணியாளர் வேலையை விட்டு செல்வதை குறைத்தல், மனித வளத்தைகணக்கில் கொள்ளல், தணிக்கை மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்வதன் மூலம் பணியாளர்களை பராமரிப்பதை இச்சொல் குறிக்கிறது.

---

## <u>அத்தியாயம் 10. ஆட்சேர்ப்பு முறைகள்</u>

### <u>இரண்டு மதிப்பெண் வினாக்கள்</u> ( குறு வினாக்கள் )

1. **ஆட்சேர்ப்பின் பொருள் தருக.** ( MAR 2020 , 2023 )

- ❖ ஒரு நிறுவனத்தில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு, பொருத்தமான நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிச் செயல்முறை, ஆட்சேர்ப்பு எனப்படுகிறது.

---

2. **பதவி உயர்வு என்றால் என்ன?** ( AUG 2020 )

- ❖ பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில், பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைக்கு சென்று பணி புரிய அளிக்கப்படும் வாய்ப்பிற்கு பதவி உயர்வு எனப்படுகிறது.

3. **அக வள ஆட்சேர்ப்பின் ஏதேனும் இரண்டு நன்மைகளை கூறுக.**
   1) ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை, பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் , காலிபணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.
   2) பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில், பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைக்கு சென்று, பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுவதன் மூலம், அவர்களுக்கு நிறுவனத்தின் மீது ஈடுபாட்டினை உருவாக்கிடலாம்.

4. **ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?** ( JUN 2023 )
   - நிறுவனங்கள் தங்களது சொந்தபணியாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் மேம்பாடுகள் வழங்குவதற்கு பதிலாக, போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்க் நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை, கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துகிறது.
   - இதனையே கவர்தல் அல்லது திறமையானவர்ககளை வேட்டையாடுதல் எனப்படுகிறது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன?**
   - நிறுவனங்கள், காலிபணியிடங்கள் குறித்து எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில், வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலை வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்கள், கோரப்படாத விண்ணப்பங்கள் ஆகும்.

2. **வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?** ( MAY 2022 , JUL 2022 )
   - நிறுவனங்கள், வேலை வாய்ப்பு இணையதளங்களைப் பயன்படுத்தி தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுடைய பணியாளர்களை தேர்வு செய்து காலியிடங்களை பூர்த்தி செய்யலாம்.

3. **ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் உள்ள புறத்திறனீட்டல் படிநிலைகளை கூறுக.**
   1) தேவைகளை புரிந்து கொள்ளுதல்
   2) விளம்பரம் & மூலம்
   3) திரையிடல் / கூர்ந்தாய்வு
   4) சரிபார்த்தல்
   5) சுயவிவர சமர்ப்பிப்பு
   6) நேர்முகம் செயல்முறை & கருத்தளிப்பு
   7) தேர்வு & பின்தொடர்தல்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக. ( ஏதேனும் 5 )**
   1) <u>இடமாற்றம்</u> : ( JUL 2022 , JUN 2023 )
      - ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை, பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம், காலிபணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.
   2) <u>மேம்படுத்துதல்</u>:
      - பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலை நோக்கி செல்ல, செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது.

3) **<u>பதவி உயர்வு</u>:**

- ❖ பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில், பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைக்கு சென்று, பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

4) **<u>பதவி இறக்கம்</u>:**

- ❖ பணியில் தொடர்ந்து குறைவான செயல் திறனை வெளிப்படுத்தும் பணியாளர், செயல் திறனின் முக்கியத்துவத்தை உணரும் வகையில், அவரை மேல்நிலை பணியிலிருந்து, கீழ்நிலை பணிக்கு மாற்றிவிடுவது பதவி இறக்கம் எனப்படுகிறது.

5) **<u>பழைய ஊழியர்களின் பரிந்துரை</u>:**

- ❖ பழைய பணியாளர்களை திருப்திப்படுத்த, அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களை வேலைக்கு அமர்த்தலாம்.

6) **<u>தக்கவைத்தல்</u>:**

- ❖ மேலாண்மை விருப்பப்படி, வயது முதிர்வு, ஓய்வுக்குப் பிறகு ஓய்வூதியம் பெறும் பணியாளர்களை நிறுவன தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

7) **<u>ஓய்வு பெற்ற ஊழியர்கள்</u>:**

- ❖ போதிய தகுதி மற்றும் அனுபவம் கொண்ட ஓய்வு பெற்ற பணியாளர்களை கொண்டு நிறுவனத்தில் உள்ள காலியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம்.

8) **<u>சார்ந்தவர்கள்</u>:**

- ❖ இறந்த பணியாளருக்கு பதிலாக, அவருடைய சட்ட வாரிசு அல்லது அவரை சார்ந்த ஒருவருக்கு வேலையில் வாய்ப்பு வழங்கப்படலாம்.

---

## 2. ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புறவளங்களை விளக்குக. ( ஏதேனும் 5 )

### அ) <u>நேரடி வளங்கள்</u> : ( MAY 2022 )

1) **<u>விளம்பரங்கள்</u>:**

- ❖ விண்ணப்பதாரர்கள், விண்ணப்பிக்க ஏதுவாக நிறுவனத்தின் உரிமையாளர் வேலையின் தன்மை, காலியிடத்தின் தன்மை, தேவைப்படும் தகுதி மற்றும் அனுபவம், வழங்கப்படும் சம்பளம், விண்ணப்பிக்கும் முறை, விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடு ஆகியவற்றைக் குறிப்பிட்டு தினசரி பத்திரிக்கைகள், இதழ்கள் மற்றும் பிற ஊடகங்கள் வழியாக விளம்பரம் செய்யலாம்.

2) **<u>கோரப்படாத விண்ணப்பதாரர்கள்</u>:**

- ❖ நிறுவனங்கள், காலிபணியிடங்கள் குறித்து எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில், வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலை வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்களை தேவைப்படும் நேரத்தில் நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ❖ இவர்கள் வேறு நிறுவனங்களில் பணி புரியலாம் அல்லது தேடுவோராக இருக்கலாம்

3) **<u>நேர்முகத் தேர்வு</u>:**

- ❖ வேலைதேடி நிறுவனத்திற்கு நேரடியாக வருபவர்களை, நேர்முக தேர்வின் மூலமாகவும் பணியமர்த்த முடியும்

4) **<u>வளாக தேர்வு</u>:**

- ❖ கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று, நல்ல கல்வித் தகுதியுடைய விண்ணப்பதாரர்களை, வளாகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கலாம்.

5) **<u>தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு</u>:**

- ❖ பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள், இந்த வழியின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.

6) **<u>போட்டி நிறுவனங்கள்</u>:**

- ❖ உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம், போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை, தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர் வேட்டை என அழைக்கப்படுகிறது.

## ஆ. மறைமுக வளங்கள்:

1) **பணியாளர் பரிந்துரை:**
   - ❖ தற்போது இருக்கும் காலியிடங்களுக்கு பொருத்தமான நபர்களை நிறுவனத்தில் இருக்கும் ஊழியர்கள் பரிந்துரைக்கலாம்.
   - ❖ அந்நபர்கள், அவர்களின் உறவினர்களாகவோ அல்லது தெரிந்த நபர்களாகவோ இருக்கலாம்.
   - ❖ பணியாளரின் நம்பகத்தன்மையின் அடிப்படையில், பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட வேண்டும்.
2) **தனியார் வேலைவாய்ப்பு முகவர்கள்:**
   - ❖ உரிமையைத் தவிர, மற்றப்படி அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் போன்றே இதுவும் செயல்படுகிறது.
   - ❖ உரிய மற்றும் தேவையான தகவல்களைத் தந்து, வேலை வழங்குவோரையும், வேலை தேடுவோரையும் இணைக்கிறது.
3) **தொழில்முறை சங்கங்கள்:**
   - ❖ அதிக திறமை மற்றும் தொழில்நுட்ப அறிவுள்ள, சரியான நபரை தேடும் நிறுவனங்கள், சிறப்புத் தொழில் சங்கங்களான பட்டய கணக்குகள் நிறுவனம், இந்திய மருத்துவ சங்கம், பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், பொறியியல் சங்கம் மற்றும் இந்தியா மேலாண்மை சங்கம் போன்றவற்றை அணுகலாம்.
4) **பதிலாயனுப்புதல்:**
   - ❖ ஏற்கனவே ஒரு நிறுவனத்தில் பணியில் இருப்பவரை, குறுகிய கால தீர்விற்கு குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள பதிலாய் நிலையில் நியமித்துக் கொள்ளலாம்.
5) **வாய் வார்த்தை:**
   - ❖ வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை, தங்களுக்கு தெரிந்த நபர்களுக்கு பகிரும் நன்மதிப்புள்ள நபர்களிடமிருந்து, வேலைதேடுவோர் தொர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
6) **பணியாளர் ஒப்பந்ததாரர்கள்:**
   - ❖ நிறுவனங்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம், திறமையற்ற மற்றும் கைத்தொழிலாளர்களை நியமிக்கின்றன.
7) **வேலைவாய்ப்பு இணையதளங்கள்:**
   - ❖ நிறுவனங்கள் வேலைவாய்ப்பு இணையதளங்களைப் பயன்படுத்தி, தாங்கள் எதிர்பார்க்கும் தகுதியுடைய பணியாளர்களை தேர்வு செய்து, காலியிடங்களை பூர்த்தி செய்யலாம்.

---

### 3. ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.

( AUG 2021 )

1) **புறத்திறனீட்டல்**
   - ❖ ஆட்சேர்ப்பு பணியினை மேற்கொள்ள சேவைக்கட்டணம் வழங்கும் நிறுவனங்களின் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து சரியான பணிக்கு சரியான நபரை தேர்தெடுத்து கொடுக்கும் பணியினை புறத்திறனீட்டல் நிறுவனங்கள் செய்கின்றன.

**ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் உள்ள புறத்திறனீட்டல் படிநிலைகள்**

1. தேவைகளை புரிந்து கொள்ளுதல்
2. விளம்பரம் & மூலம்
3. திரையிடல் / கூர்ந்தாய்வு
4. சரிபார்த்தல்
5. சுயவிவர சமர்ப்பிப்பு
6. நேர்முகம் செயல்முறை & கருத்தளிப்பு
7. தேர்வு & பின்தொடர்தல்

2) <u>புறம்பான திறன் மற்றும் ஆற்றல் கொண்ட நபரை வேட்டையாடுவது</u>

- நிறுவனங்கள் தங்களது சொந்தபணியாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் மேம்பாடுகள் வழங்குவதற்கு பதிலாக, போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை, கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துகிறது.
- இதனையே கவர்தல் அல்லது திறமையானவர்ககளை வேட்டையாடுதல் எனப்படுகிறது.

# அத்தியாயம் 11. பணியாளர் தேர்ந்தெடுத்தல்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன?** ( JUL 2022 )
   - தேர்ந்தெடுத்தல் என்பது, பணிநாடுவோரை வேறுபடுத்திப் பார்த்து, ஆய்ந்தறிந்து சரியான நபரை, உரிய பணிக்கு அடையாளம் கண்டு, அப்பணிக்கு அவரை வெற்றிகரமாக பணியமர்த்தும் நிலை ஆகும்.

2. **நேர்காணல் என்றால் என்ன?** ( SEP 2020 )
   - தேர்ந்தெடுப்பவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுபவர் இருவரும் முகத்திற்கு முகம் பார்த்து, வினாக்களுக்கு விடை பகிர்தல், கருத்து பரிமாற்றம் செய்தல், நேர்காணல் எனப்படும்.

3. **நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?**
   - நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது, ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும்.
   - இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு ( IQ ) போன்றவற்றை சோதிக்கப் பயன்படும்.
   - நுண்ணறிவு எண் என்ற அளவீட்டால் இது அளவிடப்படுகிறது.
   - அந்நபரின் அறிவார்ந்த திறனை சோதிப்பது இதன் முதன்மை நோக்கமாகும்.

4. **பணியமர்த்தல் என்றால் என்ன?**
   - சரியான நபருக்கு சரியாயன வேலைவாய்ப்பை அளிக்கும் செயல்முறையே பணியமர்த்தல் என்று அழைக்கப்படுகிறது.

     ( அல்லது )
   - பணியமர்த்தல் என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட நபருக்கு, ஒரு குறிப்பிட்ட வேலையை வழங்குவதற்கான செயல் முறையாகும்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **மனஅழுத்த நேர்காணல் என்றால் என்ன?** ( JUN 2023 )
   - விண்ணப்பதாரரிடம், உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க, வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையினை கேள்விகள் கேட்கப்பட்டு நேர்காணல் நடத்தப்படுவதையே மனஅழுத்த நேர்காணல் எனப்படுகின்றது.

2. **கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன?**
   - கேட்கப்பட வேண்டிய கேள்விகள் முன் கூட்டியே தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நேர்காணல் நடத்தப்படுவதையே கட்டமைக்கப்பட்ட நேர்காணல் எனப்படுகின்றது.

3. **தேர்வுச் சோதனையின் வகைகள் யாவை?**
   - தேர்வு சோதனை இரண்டு வகைப்படும். அவை -

     1) திறன் சோதனை 2) ஆளுமை சோதனை

1) **திறன் சோதனை**
   i) உளவியல் சோதனை
   ii) அடைவுச் சோதனை
   iii) நுண்ணறிவுச் சோதனை
   iv) முடிவெடுக்கும் திறன் சோதனை
2) **ஆளுமை சோதனை**
   i) ஆர்வச் சோதனை
   ii) ஆளுமைச் சோதனை
   iii) செயல்திறன் சோதனை
   iv) மனோபாவச் சோதனை

---

4. **அடைவுச் சோதனை குறித்து நீவீர் அறிவது யாது?**
   - குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையையே அடைவுச் சோதனை ஆகும்.
   - இதனை அறிவுத் திறன் சோதனை எனவும் அழைக்கப்படுகின்றது.
   - கல்வி நிறுவனங்களில் வழக்கமாக நடத்தப்படும் தேர்வுகள், இச்சோதனை முறையைச் சார்ந்ததே.

---

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **பல்வேறு வகையான சோதனைகள் சுருக்கமாக விளக்குக.** (ஏதேனும்5)

**அ) திறன் சோதனை** ( JUL 2022 )

- இச்சோதனை விண்ணப்பதாரரின் பொது அறிவுத்திறன், பிரச்சனைகளை தீர்க்கும் திறன், குறிப்பிட்ட துறையில் அவருக்குள்ள அறிவு, பகுத்தறிவும் திறன், நுண்ணறிவு போன்ற திறன்களை சோதிக்க பயன்படுகிறது.
- இச்சோதனை குறிப்பிட்ட பணிக்கு ஏற்ற பொருத்தமான நபரை தேர்ந்தெடுக்கப் பயன்படுகிறது.

1) **உளவியல் தேர்வு**
   - மனோபாவச் சோதனை என்பது, குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பதாரர் எந்த அளவிற்கு பொருத்தமானவர் என்பதை அளவிட மேற்கொள்ளப்படும் உளவியல் தேர்வு ஆகும்.
   - இச்சோதனை, பணியாளரின் பன்முகத் திறன்களை அளவிடவும், பணியாளரின் எதிர்கால செயல்திறனை முன்கணிக்கவும் பயன்படுகிறது.
2) **சாதனை ஆய்வுத் தேர்வு**
   - குறிப்பிட்ட துறையில் விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையையே அடைவுச் சோதனை ஆகும். இதனை அறிவுத் திறன் சோதனை எனவும் அழைக்கப்படுகின்றது.
   - கல்வி நிறுவனங்களில் வழக்கமாக நடத்தப்படும் தேர்வுகள், இச்சோதனை முறையைச் சார்ந்ததே.
3) **நுண்ணறிவு திறன் தேர்வு**
   - நுண்ணறிவுத் திறன் சோதனை என்பது, ஒருவகை உளவியல் ரீதியிலான சோதனை ஆகும்.
   - இது மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு ( IQ ) போன்றவற்றை சோதிக்கப் பயன்படும்.
   - நுண்ணறிவு எண் என்ற அளவீட்டால் இது அளவிடப்படுகிறது.
   - அந்நபரின் அறிவார்ந்த திறனை சோதிப்பது இதன் முதன்மை நோக்கமாகும்.

4) <u>முடிவெடுக்கும் திறன் ஆய்வுத் தேர்வு</u>

- ❖ இச்சோதனை விண்ணப்பதாரரின் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறன் மற்றும் காரணப்படுத்தும் திறன் போன்றவற்றை சோதிக்க பயன்படுகிறது.

### ஆ) <u>ஆளுமை ஆய்வுத் தேர்வு</u>

- ❖ இச்சோதனை விண்ணபதாரரின் அறிவுத்திறன் சாராத, பிற திறன்களான மனோநிலை, ஆர்வம், உணர்வு ரீதியான பிரதிபலிப்பு, உணர்ச்சிகளை கட்டுப்படுத்தல், உறுதித்தன்மை போன்ற திறன்களை சோதிக்க பயன்படுகிறது.

1) <u>ஆர்வ ஆய்வுத் தேர்வு</u>

- ❖ இச்சோதனை தேர்ந்தெடுக்கப்பட்டவரின் ஆர்வம் எத்துறையில் மிகுதியாக உள்ளது என்பதை அறிந்து அத்துறையில் அவருக்கு மிகுந்த ஆர்வமுள்ள பணியை அவருக்கு ஒதுக்க பயன்படுத்தப்படுகிறது.

2) <u>ஆளுமைத் திறன் ஆய்வுத் தேர்வு</u>

- ❖ மனிதர்களை நிர்வகித்து ஆளும் திறன், அதிகாரம் செலுத்தும் திறன், தன்னம்பிக்கை போன்ற ஆளுமைத் திறன்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவரிடம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை இச்சோதனை மூலம் கண்டறியப்படுகிறது.

3) <u>செயல் திறன் ஆய்வு தேர்வு</u>

- ❖ செயலாற்றும் வேகத்தினை அளவிட இச்சோதனை பயன்படுகிறது.

4) <u>உளவியல் ஆய்வுத் தேர்வு</u>

- ❖ இச்சோதனை விண்ணப்பதாரரது சக மனிதர்கள், சூழ்நிலைகள், செயல்பாடுகள் மற்றும் அவை சார்ந்த மனநிலையை அளவிடுவதாகும்.
- ❖ <u>உதாரணமாக</u> ஒழுங்குணர்வு கற்றல், மதிப்புக் கற்றல், சமூக பொறுப்புணர்வு கற்றல் ஆகியவை விண்ணப்பதாரரது மனோநிலையை சோதிக்கப் பயன்படுகிறது.

---

### 2. பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகளை விளக்குக? ( ஏதேனும் 5 )

1) <u>ஆரம்ப நேர்காணல்</u>

- ❖ விண்ணப்பதாரர்களின் குறிப்பிட்ட பணிக்கான பொருத்தப்பாட்டை அறிய ஆரம்ப நேர்காணல் நடத்தப்படுகிறது.
- ❖ இது ஆரம்ப கட்டத்திலேயே தேவையற்ற விண்ணப்பதாரரை, நீக்க நடத்தப்படுகிறது.
- ❖ இது நேரம், பணிச்சுமை மற்றும் செலவை கட்டுப்படுத்த உதவுகிறது.

2) <u>வடிவமைக்கப்பட்ட நேர்காணல்</u>

- ❖ கேட்கப்பட வேண்டிய கேள்விகள் முன் கூட்டியே தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நேர்காணல் நடத்தப்படுவதையே கட்டமைக்கப்பட்ட நேர்காணல் எனப்படுகின்றது.
- ❖ நேர்காணலில் விண்ணப்பதாரர் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப் படுகிறார்கள்.

3) <u>வடிவமைக்கப்படாத நேர்காணல்</u>

- ❖ நேர்காணலில் அப்போதிருக்கும் சூழல், மனநிலை போன்றவற்றின் அடிப்படையில் கேள்விகள் அமைக்கப்பட்டு, நேர்காணல் நடத்தப்படுவதே வடிவமைக்கபடாத நேர்காணல் எனப்படும்.
- ❖ கேள்விகள் முன்கூட்டி திட்டமிடப்படுவதில்லை.
- ❖ இது கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கு நேர்மாறானது.

4) <u>ஆழ்ந்த நேர்காணல்</u>

- ❖ இதில் நேர்காணல் செய்யப்படுபவரின் துறை தொடர்பான ஆழமான, பரந்த அளவிலான அறிவு சோதனை செய்யப்படுகிறது.
- ❖ அவர் துறையில் அவர் எந்த அளவு நிபுணத்துவம் மற்றும் நடைமுறை அறிவைப் பெற்றுள்ளார் என அறிய இத்தகைய நேர்காணல் செய்யப்படுகிறது.

5) <u>மன அழுத்த நேர்காணல்</u>

- விண்ணப்பதாரரிடம், உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க, வேண்டுமென்றே மன அழுத்தம் தரும் வகையினை கேள்விகள் கேட்கப்பட்டு நேர்காணல் நடத்தப்படுவதையே மன அழுத்த நேர்காணல் எனப்படுகின்றது.

6) <u>தொலைப்பேசி நேர்காணல்</u>

- விண்ணப்பதாரர் தொலைவு காரணமாக, நேர்காணல் நடக்கும் இடத்திற்கு நேரில் வர இயலாத போது, இவ்வகையான தொடக்க நிலை நேர்காணல் நடத்தப்படுகிறது.
- இதில் விண்ணப்பித்தவர்களின் விவரங்களை தொலைபேசி வழியாகவே அறியப்பட்டு, தேவையற்றவர்கள் ஆரம்ப நிலையிலேயே நீக்கப்படுகின்றனர்.

7) <u>இணைய வழி நேர்காணல்</u>

- இது ஒரு வகையான காணொளிக்காட்சி நேர்காணல் ஆகும்.
- விண்ணப்பதாரர்களிடம் நேரடியாக காணொளிக்காட்சி உரையாடல் மூலம் நேர்காணல் செய்யப்படுகிறது. இதன் மூலம் பணம், நேரம், உழைப்பு மிச்சப்படுத்தப்படுகிறது.

---

3. **ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி** ( ஏதேனும் 5 ) ( MAR 2023 )

| வ. எண் | அடிபடை | ஆட்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|---|---|
| 1 | பொருள் | பணியாளர்களைத் தேடும் மற்றும் அவர்களை வேலைக்கு விண்ணப்பிக்கத் தூண்டும் நடவடிக்கையே ஆட்சேர்ப்பு ஆகும் | பொருத்தமான வேலைக்கு பொருத்தமான விண்ணப்பத்தாரரை தேர்ந்தெடுத்து பணி வழங்குதல் பணியமர்த்தல் ஆகும். |
| 2 | அணுகுமுறை | இது நேர்மறையான அணுகுமுறை | இது எதிர்மறையான அணுகுமுறை |
| 3 | நோக்கம் | காலியாக உள்ள பணிக்கு, அதிக அளவிளான விண்ணப்பதாரரை அழைப்பது | பொருத்தமான விண்ணப்பதாரரை தேர்ந்தெடுத்துவிட்டு மீதமுள்ள நபர்களை நீக்குவது |
| 4 | வரிசை | முதல்படி | இரண்டாம்படி |
| 5 | முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| 6 | செயல்முறை | மிகவும் எளிமையானது | மிகவும் சிரமம் மற்றும் சிக்கலானது |
| 7 | ஒப்பந்த உறவு | இது ஒப்பந்த அடிப்படையிலான உறவை உருவாக்குவதில்லை | இது ஒப்பந்த அடிப்படையிலான உறவை உருவாக்குகிறது |

# அத்தியாயம் 12. பணியாளர் பயிற்சிமுறை

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள்)

1. **பயிற்சி முறை என்றால் என்ன?**
   - அறிவு, திறமை, மற்றும் மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டமிடப்பட்ட நடவடிக்கையே பயிற்சி முறையாகும்.

2. **வழிகாட்டுதல் பயிற்சி முறை என்றால் என்ன?**
   - ஒரு பணியாளர் தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் செயல்முறையே வழிகாட்டுதல் பயிற்சி முறை ஆகும்.

3. **பங்கேற்று நடித்தல் முறை என்றால் என்ன?** ( MAR 2023 )
   - பயிற்றுவிப்பாளர்கள், பதவியின் சூழ்நிலையை அல்லது பதவியில் நியமிக்கப்பட்ட பாத்திரத்தை விளக்குவார்.
   - அவர்கள் எந்த ஒத்திகையும் இல்லாமல் ஒதுக்கப்படும் பாத்திரங்களாக செயல்பட வேண்டும்.
   - முன் தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் எதுவும் இல்லை.


4. **மின்னணு கற்றல் முறை பற்றி கூறுக.**
   - மின்னணு கற்றல் முறை என்பது, பாரம்பரிய பயிற்சி வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில்நுட்ப செயல்முறையை பயன்படுத்துவதாகும்.
   - மின்னணு கற்றல், பெரும்பாலும் இணையவழி கற்றல் அல்லது வலைபக்க அடிப்படையிலான பயிற்சியை குறிக்கிறது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **பணியிடத்தை ஒத்தயிடத்தில் பயிற்சி முறை என்றால் என்ன?**
   - பயிற்சி நோக்கத்திற்காக செயற்கையாக உருவாக்கப்படும் உண்மையான வேலை சூழலைப்போல, ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கும் முறை தொழிற்சாலைக்குள் பயிற்சி முறை எனப்படுகிறது.
   - ஓட்டுனர்கள், விமானிகள், விண்வெளி விஞ்ஞானிகள் போன்றோருக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

2. **பணிவழி பயிற்சி பற்றி நீ அறிவது யாது?**
   - பணிவழி பயிற்சி என்பது, பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் (அ) முன் அனுபவம் பெற்றவரால் பணி சார்ந்த போதனை அளிக்கப்படுகிறது.
   - அதாவது பணியாளர் பணி சார்ந்த விவரங்களை பணிச்சூழல் மூலம் கற்கிறார்.
   - ‘ செய்து கற்றல் மற்றும் சம்பாதிக்கும் போது கற்றல் என்ற அடிப்படை கோட்பாட்டினை கொண்டது.

3. **பயிற்சி திட்டத்தில் பல்வேறு படிகளை எழுதுக.**




4. **பயிற்சி அளிப்பவர் மற்றும் பயிற்சி பெறுபவர் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

<u>**பயிற்சி அளிப்பவர்**</u>

- ❖ பணியாளருக்குத் திறன்களை போதித்து, பணியை சிறப்பாக செய்ய தயார் செய்யும் ஒரு நபர் பயிற்சி அளிப்பவர் ஆவார்.
- ❖ பயிற்சி அளிப்பவர் என்பவர் பயிற்சியாளர், ஆசிரியர் வழிகாட்டல், ஆலோசகர், ஆலோசகர் கையேடு, குரு, மேலாளர், கையாளுநர், ஆசிரியர் மற்றும் கல்வியாளர் போன்றோர்.

<u>**பயிற்சி பெறுபவர்**</u>

- ❖ ஒரு வேலையின் திறனை கற்றுக்கொள்ளும் நபரே பயிற்சி பெறுபவர் ஆவார்.
- ❖ பயிற்சி பெறுவர், மனிதவள மேன்மைத்துறை அல்லது மேற்பார்வையாளரின் பரிந்துறையின் அடிப்படையிலும், தன் சுய ஆர்வத்தின் அடிப்படையில் பயிற்சிக்கு தேர்வு செய்யபடுகிறார்.

## <u>ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )</u>

1. **பயிற்சியின் பல்வேறு முறைகளை விவரி** ( ஏதேனும் 5 )

✓ <u>பயிற்சி முறை இரண்டு வகைப்படும். அவை</u> : -

அ) பணியிடைப் பயிற்சி   ஆ) பணிவெளிப் பயிற்சி

**அ) <u>பணிவழி பயிற்சி முறைகள்</u>**

- ❖ பணிவழி பயிற்சி என்பது, பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் (அ) முன் அனுபவம் பெற்றவரால் பணி சார்ந்த போதனை அளிக்கப்படுகிறது.

1) <u>**பயிற்சியளிப்பு**</u>

- ❖ பயிற்சியளிப்பு பயிற்சி முறையில், மேலதிகாரிகள் (அ) வழிகாட்டிகள் புதிய பணியாளர்களுக்கு பணிக்குத் தேவையான அறிவு மற்றும் திறவை வழங்குகின்றனர்.
- ❖ இம்முறையில் மேலதிகாரிகள் தான் ஒரு பயிற்சியாளர், வழிகாட்டி கற்பிப்பவர் போல செயல்படுகிறார்.
- ❖ இம்முறையின் கீழ் மேலதிகாரிகள் புதிய பணியாளர்கள் செய்யும் தவறுகளை சுட்டி காட்டி அவற்றை களைவதற்கான அறிவுரைகளையும் வழங்க வேண்டும்.

2) <u>**வழிகாட்டுதல் பயிற்சி முறை**</u>

- ❖ வழிகாட்டுதல் பயிற்சி முறையில், ஒரு பணியாளர் தங்களின் அறிவு மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் செயல்முறை ஆகும்.

3) **<u>பணி சுழற்சி அல்லது வேலை சுழற்சி முறை</u>**

- ❖ பயிற்சி பெறும் ஒரு பணியாளர், ஒரே வேலையை செய்து கொண்டிருக்காமல், ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில், ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கோ அல்லது ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கோ மாற்றப்படுவதையே பணி சுழற்சி அல்லது வேலை சுழற்சி முறை எனப்படுகின்றது.
- ❖ இதனால் பணியாளரால் பலதரப்பட்ட பணி அனுபவங்களை அறிந்து கொள்ளமுடிகிறது.

4) **<u>பணி அறிவுறுத்தல் நுணுக்க முறை</u>**

- ❖ ஒரு பயிற்சியாளராக பணிபுரிபவர், தனது வேலையை மற்றும் அதன் நோக்கத்தை எவ்வாறு செய்வது என்பது குறித்து, ஒரு ஊழியருக்கு சில அறிவுறுத்தல்களை அளிக்கிறார்.

5) **<u>தொழில் பழகுநர் பயிற்சி முறை</u>**

- ❖ பொதுவாக மெக்கானிக்ஸ், எலெக்ட்ரிசிஸ், கைத்தொழில்கள், வெல்டர்ஸ், ஃபிட்டர் போன்ற தொழில்நுட்ப பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிப்பு வழங்கப்படுவதையே தொழில் பழகுநர் பயிற்சி முறை எனப்படுகின்றது.

6) **<u>குழு ஒதுக்கீடுமுறை</u>**

- ❖ ஒரு குறிப்பிட்ட விவகாரத்தை விசாரிப்பதற்கு ஊழியர் ஒருவரை நியமிக்கப்படும் போது, அவர்கள் மற்ற உறுப்பினர்களுக்கும் குழு உறுப்பினர்களுக்கும் நெருக்கமாக பணியாற்ற முடியும்.
- ❖ அவர்கள் முடிவெடுப்பதில் ஈடுபடுவதன் மூலமும், பங்கு பெறுவதன் மூலமும் அதிக அறிவைப் பெறுகிறார்கள்.

## ஆ) <u>பணி வழியற்ற பயிற்சி முறைகள்</u>

- ❖ பணியிடங்களுக்கு வெளியே பயிற்சி பெறுவது பணியிடமற்ற பயிற்சி எனப்படுகின்றது.

1) **<u>விரிவுரை முறை</u>**

- ❖ இந்த முறையின் கீழ் பயிற்றுவிப்பாளர்கள் கருத்துக்கள், கோட்பாடுகள் மற்றும் அறிவுரைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைப் பற்றி கல்வி கற்கின்றனர்.
- ❖ கல்லூரிகள், பல்கலைகழகங்கள், ஆலோசனை மையங்கள், நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள், சங்கங்கள் முதலியவற்றிலிருந்து பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

2) **<u>குழு கலந்துரையாடல் முறை</u>**

- ❖ குறிப்பிட்ட பொருள் அல்லது ஒரு தலைப்பை விவாதிக்க இந்த முறையின் கீழ் பங்கேற்பாளர்கள் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்படுகிறார்கள்.
- ❖ ஒவ்வொரு குழுவும், ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை விவாதிக்கும்.
- ❖ ஒவ்வொரு குழுவும், தங்கள் குழுவுடன் ஆழமான விவாதத்திற்கு பிறகு தீர்வை தயார் செய்யும்.

3) **<u>பங்கேற்று நடித்தல்</u>**

- ❖ பயிற்றுவிப்பாளர்கள், பதவியின் சூழ்நிலையை அல்லது பதவியில் நியமிக்கப்பட்ட பாத்திரத்தை விளக்குவார்.
- ❖ அவர்கள் எந்த ஒத்திகையும் இல்லாமல் ஒதுக்கப்படும் பாத்திரங்களாக செயல்பட வேண்டும்.
- ❖ முன் தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் எதுவும் இல்லை.

4) **<u>புலம் பயணம் முறை</u>**

- ❖ வழக்கமாக பணிபுரியும் இடத்தை விட்டுவிட்டு, வேறு ஒரு இடத்திற்கு பணியாளர்கள் குழுவாக சேர்ந்து பயணித்து, சென்ற இடத்தில் இருக்கும் தொழில் வல்லுநர்களிடம் விளக்கம் கேட்டு, தங்களது திறனை வளர்த்துக் கொள்வதே புலப்பயணம் முறை சார்ந்த பயிற்சி எனப்படும்.

5) **<u>மின்னணு கற்றல் முறை</u>**

- ❖ மின்னணு கற்றல் முறை என்பது, பாரம்பரிய பயிற்சி வகுப்பறையில் அல்லது அலுவலகத்தில் தொழில்நுட்ப செயல்முறையை பயன்படுத்துவதாகும்.

- ❖ மின்னணு கற்றல், பெரும்பாலும் இணையவழி கற்றல் அல்லது வலைபக்க அடிப்படையிலான பயிற்சியை குறிக்கிறது.

6) <u>திட்டமிடப்பட்ட அறிவுறுத்தல் முறை</u>

- ❖ இது ஒரு கணினி சார்ந்த பயிற்சி ஆகும்.
- ❖ இதில் நினைவாற்றல் சேமித்து வைக்கப்படுகிறது.
- ❖ இது திறமையான மற்றும் சிறந்த கற்றல் முறையை பங்கேற்பாளர்களுக்கு வழங்குகிறது.

---

2. **பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )**

| வ.எண் | அடிபடை | பணிவழி பயிற்சி | பணிவழியற்ற பயிற்சி |
|---|---|---|---|
| 1 | விளக்கம் | பணியாளர், உண்மையான வேலை சூழலில் வேலையை புரிந்து கொள்கிறார் | பணியாளர், பணிச் சூழலுக்கு வெளியே பயிற்சியை பெறுகிறார் |
| 2 | செலவு | செலவு குறைவான முறை | செலவு அதிகமான முறை |
| 3 | இடம் | வேலை இடத்திலேயே பயிற்சி அளிக்கப்படுகின்றது | வேலை இடத்திற்கு வெளியே பயிற்சி அளிக்கப்படுகின்றது |
| 4 | பொருத்தம் | உற்பத்தி செய்யும் அமைப்புகளுக்கு பொருத்தமான முறை | மேலாண்மை செய்யும் நிறுவனங்களுக்கு பொருத்தமான முறை |
| 5 | அணுகுமுறை | நடைமுறை அணுகுமுறை | கோட்பாடு அணுகுமுறை |
| 6 | கோட்பாடு | நிறைவேற்றல் மூலம் கற்றல் | அறிவைப் பெறுவதன் மூலம் கற்றல் |
| 7 | கற்றல் | அறிவைப் பெறுவதன் மூலம் கற்றல் | அனுபவத்தின் மூலம் கற்றல் |

---

3. **பயிற்சியின் நன்மைகளை விளக்குக ? ( தலைப்புக்கு இரண்டு விளக்கம் )**

( MAR 2020 , JUN 2023 )

<u>நிறுமதிற்கு கிடைக்கும் நன்மைகள்</u>

i) இது ஊழியர்களின் திறமையை அதிகரிக்கிறது மற்றும் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துகிறது.
ii) இது மூலப்பொருள் சேதத்தினையும் மற்றும் செயலற்ற நேரத்தினையும் குறைக்கிறது.
iii) இது சமீபத்திய போக்குகளுக்கு ஊழியர்களை மாற்ற உதவுகிறது.
iv) இது மேற்பார்வைக்கான நேரத்தை குறைக்கிறது.
v) பயிற்சி பணியாளர்களின் சுழற்சியைக் குறைக்கிறது.

<u>ஊழியர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்</u> ( MAR 2020 )

i) பணியாளர்களின் தனித்திறன் மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்துகிறது.
ii) குறுகிய காலத்தில் அவர்கள் பணி உயர்வு மற்றும் பண மேம்பாட்டிற்கு உதவுகிறது.
iii) தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது.
iv) தொழிலாளரின் மனத்திண்மையை, ஒழுங்குணர்வு தன்மையை மேம்படுத்துகிறது
v) அதிக ஊதியம் மற்றும் வெகுமதிகளுக்கு வழி கோலுகிறது

<u>வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள்</u>

i) வாடிக்கையாளர்கள் சிறந்த தரமான பொருள்கள் மற்றும் சேவையினை பெறமுடிகிறது
ii) வாடிக்கையாளர்கள் புதுமையான அல்லது மதிப்பு கூட்டப்பட்ட அல்லது சிறப்பியல்புடைய பொருள்களை பெறுகின்றனர்.

# அலகு 5 . சந்தையிடுகையின் அடிபடை கூறுகள்

## அத்தியாயம் 13 . சந்தை மற்றும் சந்தையிடுகையாளர்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **சந்தை என்றால் என்ன?** ( MAR 2020 , AUG 2021 )
    - ❖ வணிகம் நடைபெறும் இடத்தைக் குறிப்பது சந்தையாகும்.
    - ❖ பொருட்களை வாங்குதல் மற்றும் விசாரணை செய்வதற்கான ஒரு இடமாக சந்தை திகழ்கிறது.

2. **சந்தையிடுகையாளர் வரைவிலக்கணம் தருக.**
    - ❖ தொழில் அகராதியின் கூற்றுப்படி, " யார் ஒருவர் ஒரு குறிப்பிட்ட நுகர்வோருக்கான பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைகளை அறிந்து, பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நிறுவனங்கள் சார்பாக பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையிடுகை செய்கிறாரோ அவரே சந்தையிடுகையாளர் ஆவார் ".

3. **ஒழுங்கு முறை சந்தை என்றால் என்ன?** ( SEP 2020 )
    - ❖ அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு நடைபெறும் சந்தை, ஒழுங்கு முறை சந்தை எனப்படுகிறது.
    - ❖ மேலும் இதன் செயல்பாடுகள் அனைத்தும் சட்டமுறைப்படி கட்டுப்படுத்தப்படுகிறது.

4. **களச் சந்தை என்றால் என்ன?** ( MAY 2022 )
    - ❖ பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதே நேரத்தில், அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமன்றி, உரிமை மாற்றமும் உடனே செய்யப்படுவது களச் சந்தை ஆகும்.

5. **பண்டகச் சந்தை என்றால் என்ன?**
    - ❖ உற்பத்தி பொருட்கள் அல்லது நுகர்வு பொருட்கள் போன்றவை வாங்குதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தை பண்டகச் சந்தை எனப்படும்

### மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **சந்தையில் என்னென்ன பொருட்களை சந்தையிட முடியும் என்பதை தெரிவிக்கவும். ( ஏதேனும் 3 )**
    - i) பண்டங்கள்/ பொருட்கள்
    - ii) பணிகள்/ சேவைகள்
    - iii) அனுபவங்கள்
    - iv) நிகழ்வுகள்
    - v) நபர்கள்
    - vi) இடம்
    - vii) உடமைகள்
    - viii) அமைப்பு
    - ix) தகவல்
    - x) கருத்துக்கள்

2. **சந்தையிடுகையாளரின் பங்களிப்பு எவையேனும் மூன்றினை குறிப்பிடுக.**
   1) தூண்டுபவர்
   2) புதுமை புகுத்துநர்
   3) ஒருங்கிணைப்பாளர்
   4) செயல்பாட்டாளர்

3. **காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?** ( JUL 2022 ) ( JUN 2023 )
   1) மிக குறுகிய கால சந்தை
   2) குறுகிய கால சந்தை
   3) நீண்டகால சந்தை

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி ( ஏதேனும் 5 )** ( JUL 2022 )
   1) புவியியல் அடிப்படையில்
      a. குடும்ப சந்தை
      b. உள்ளூர் சந்தை
      c. தேசிய சந்தை
      d. பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை
   2) பண்டங்களின் / பொருட்களின் அடிப்படையில்
      a. பண்டக சந்தை
         1. உற்பத்திபொருள் மாற்று சந்தை
         2. தயாரிப்பு பொருள் மாற்று சந்தை
         3. தூய உலோகச் ( பொன் ) சந்தை
      b. மூலதன சந்தை
         i) பண சந்தை
         ii) அந்நிய செலவாணி சந்தை
         iii) பங்கு சந்தை
   3) பொருளாதாரத்தின் அடிப்படையில்
      அ) முறையான ( செம்மையான ) சந்தை
      ஆ)முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை
   4) நடவடிக்கைகளின் அடிப்படியில்
      i) களச்சந்தை
      ii) எதிர்கால சந்தை
   5) ஒழுங்குமுறை அடிப்படையில்
      1. ஒழுங்கு முறை சந்தை
      2. ஒழுங்குமுறையற்ற சந்தை
   6) காலத்தின் அடிப்படையில்
      1) மிக குறுகிய கால சந்தை
      2) குறுகிய கால சந்தை
      3) நீண்டகால சந்தை
   7) தொழில் அளவின் அடிப்படியில்
      i) மொத்த விற்பனை சந்தை
      ii) சில்லறை விற்பனை சந்தை
   8) முக்கியத்துவத்தின் அடிப்படையில்
      a. முதன்மை சந்தை
      b. இரண்டாம் நிலைச் சந்தை
      c. முனையச் சந்தை

## விளக்கம்

1) **குடும்ப சந்தை**

- ❖ ஒரு குடும்பத்தில் அல்லது குடும்பத்தின் நெருங்கிய உறுப்பினர்களிடையே பண்டங்களையோ அல்லது பணிகளையோ பரிமாறிக்கொள்ளப்படும் வகையில் உள்ள சந்தையை குடும்பசந்தை என அழைக்கப்படுகிறது

2) **உள்ளூர் சந்தை**

- ❖ உள்ளூரிலேயே வாங்குவோரும், விற்போரும் பங்கேற்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட பொருட்களுக்காக உள்ள ஒரு சந்தையை உள்ளூர் சந்தை என்று அழைக்கப்படுகிறது.
- ❖ இத்தகைய சந்தை ஒரு கிராமமாகவோ அல்லது நகரமாகவோ இருக்கலாம்.

3) **தேசிய சந்தை**

- ❖ இத்தகைய சந்தையில், பண்டங்கள் மற்றும் பணிகள் ஒரு நாட்டின் பல்வேறு மூலைமுடுக்குகளிலும் கிடைக்கப்பெறும் வகையில், அமையப் பெற்ற சந்தையை தேசிய சந்தை எனலாம்.

4) **பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை**

- ❖ பண்டங்கள் மற்றும் பணிகளை பன்னாட்டு அளவில் சந்தையிடுகை செய்வதனை, பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை என அழைக்கப்படுகிறது.

5) **உடனடிச்சந்தை**

- ❖ பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதேநேரத்தில் அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமன்றி உடன் உரிமை மாற்றமும் செய்யப்படுகிறது.

6) **எதிர்காலசந்தை**

- ❖ இத்தகைய சந்தையில் பொருட்கள் விநியோகம் செய்த பிறகு அதற்கான தொகை எதிர்வரும் காலங்களில் வழங்குவதாக ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் நடைபெறும் சந்தையை எதிர்கால சந்தை எனலாம்.

---

### 2. பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

(அ) **முறையான (செம்மையான) சந்தை** ( MAR 2023 )

- ❖ இவ்வகை சந்தையில், ஒரே இயல்பான தன்மை கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை, ஒரே விதமான விலையின் அடிப்படையில் கையாளப்படுகிறது.
- ❖ இந்த சந்தை கீழ்காணும் நிபந்தனைகளை கொண்டுள்ளது.
  1) அதிக எண்ணிக்கை உள்ள வாங்குவோர் மற்றும் விற்போரை கொண்டுள்ளது.
  2) பொருட்களின் விலை , சந்தை முழுவதும் ஒரே சீராக இருத்தல்.
  3) வாங்குவோர் மற்றும் விற்போர் சந்தையைப் பற்றி தெளிவாக அறிந்திருத்தல்.
  4) பொருட்கள் தங்கு தடையின்றி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு வழிவகை செய்கிறது.

(ஆ) **முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை**

- ❖ இவ்வகை சந்தை பல்வகை பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது.
- ❖ ஒரே தன்மை மற்றும் விலை கொண்ட பொருட்கள் இச்சந்தையில் மேற்கொள்ளப்பட மாட்டாது.
- ➢ கீழ்கண்ட செயல்பாடுகளின் அடிப்படையில் இத்தகைய சந்தை செயல்படுகிறது.
  1) பொருட்கள் ஒத்த தன்மை இன்மை
  2) விலையில் ஏற்ற தாழ்வு
  3) தகவல் தொடர்பில் குறைபாடு
  4) ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதில் உள்ள தடைகள்.

## கூடுதல் வினா

**1. பண்டங்கள் மற்றும் சேவைகள் தவிர சந்தையில் சந்தியிடப்படும் ஏதேனும் ஐந்து பொருட்களை விவரிக்கவும்.** ( மார்ச் 2020 )

1) **அனுவபங்கள்**
   - ❖ பண்டங்கள் மற்றும் பணிகளை பற்றி முன் அனுபவம் பெற்ற குழு மூலம் ஒரு நிறுமம் தனக்கென ஒரு தனி இடத்தை உருவாக்கி அதன் அடிப்படையில் சந்தையிடுகை செய்வது.
   - ❖ உதாரணமாக வர்த்தகப் பொருட்காட்சி சென்று வருதல் மற்றும் எவரெஸ்டு மலை ஏறுதல் போன்றவைகள் இதில் அடங்கும்.
2) **நிகழ்வுகள்**
   - ❖ காலம் மற்றும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வகை சந்தை மேம்படுத்தப்படுகிறது.
   - ❖ அதாவது பொருட்காட்சி, கலை நிகழ்ச்சிகள், ஆசிய அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் உலக அளவிலான விளையாட்டு போட்டிகள் போன்றவை இதில் அடங்கும்.
3) **நபர்கள்**
   - ❖ இன்றைய தொழிலில் பிரபலங்கள் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையிடுகை செய்வது ஒரு வாடிக்கையாக உள்ளது.
   - ❖ அதாவது சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள், இசைக்கலைஞர்கள், மற்றும் புகழ்பெற்ற நபர்களால் ஒரு நிறுவனத்தின் வாணிபக் குறிகளின் ஒப்புதல் அளித்து அதன் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.
4) **இடம்**
   - ❖ புதிய குடியிருப்புகள், நிறுமத்தின் தலைமையகம், தொழிற்சாலை, பொழுதுபோக்கு அம்சங்கள், சுற்றுலா வசதி, வணிக வாய்ப்புகள், மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்பு அம்சங்கள் பற்றி எடுத்துரைத்து, அதன் அடிப்படையில் பண்டங்கள் மற்றும் பணிகள் குறித்து வாங்க தூண்டுவது இத்தகைய சந்தையிடுகையில் மேற்கொள்ளப் படுகிறது.
5) **உடமைகள்**
   - ❖ கண்ணுக்கு புலப்படாத உரிமை மாற்றத்தை இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது நிலம், மனை மற்றும் கட்டிடம் அல்லது நிதி சார்ந்த உடமைகளாகிய பங்கு மற்றும் பத்திரங்கள் போன்றவை அதன் அடிப்டையில் வாங்கி, விற்பனை செய்யப்படுகிறது.
6) **அமைப்பு**
   - ❖ ஒரு அமைப்பு பொது மக்கள் மத்தியில் தனக்கென நிரந்தரமான ஒரு இடத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக சில செயல்பாடுகளை மேற்கொண்டு அதன் மூலம் தனது பொருட்களை சந்தையிடுகை செய்கிறது.
   - ❖ பல்கலைக் கழகம் உருவாக்குவது, அருங்காட்சியகம் ஏற்படுத்துவது மேலும் லாபநோக்கமின்றி சந்தையில் மக்கள் மத்தியில் தனக்கென நற்பெயரை உருவாக்கி கொள்வதன் மூலம் சந்தையில் போட்டியை சமாளிக்க வழிவகை செய்யப்படுகிறது.
7) **தகவல்**
   - ❖ இன்று தகவலும் சந்தைப்படுத்தக் கூடிய மிகமதிப்பு வாய்ந்த ஒரு பொருளாக கருதப்படுகின்றது. மேலும் பள்ளி மற்றும் கல்லூரிகள் போன்றவை தங்கள் நிறுவனம் குறித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தகவல்கள் தயாரித்து அவ்வப்போது தெரிவிக்கிறது.
   - ❖ உதாரணமாக கலைக்களஞ்சியம், இதழ்கள் மற்றும் செய்தித்தாள் மூலம் தகவல்களை அளித்து வருகின்றன.

8) <u>கருத்துக்கள்</u>

- ஒவ்வொரு சந்தையும் தனக்கென ஒரு கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது
- சமுதாய நோக்குடைய சந்தையிடுகையாளர்கள் எப்போதும் கருத்துக்கள் மேம்படுத்துவதில் முனைப்புடன் இருந்து வருகின்றனர்.

# அத்தியாயம் 14 . சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **சந்தையிடுதல் என்றால் என்ன?**
   - பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தியாளரிடமிருந்து, இறுதி பயன்பாட்டு நுகர்வோர் வரை, கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு, வசதியை ஏற்படுத்தும் ஓர் நடவடிக்கை சந்தையிடுகையாகும்.

2. **சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.** ( MAR 2023 )
   - திரு. ஜெரோம் மெக்கார்த்தி அவர்களின் கூற்றுப்படி. " சந்தையிடுகை கலவை நான்கு கூறுகளை கொண்டுள்ளது. அவையாவன, பொருள் கூறுகள், விலை கூறுகள், விற்பனை மேம்பாட்டு கூறுகள் மற்றும் இடகூறுகள் ஆகும்.

3. **தரப்படுத்துதல் என்றால் என்ன?**
   - தரப்படுத்துதல் என்பது, பொருட்களை இயல்பான தரத்தின் அடிப்படையில் பிரித்து அமைப்பது ஆகும்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?** ( MAY 2022 )
   1) நவீன சந்தையிடுகை கொள்கையானது, அறிவு திறத்தை பயன்படுத்த உதவுகிறது.
   2) சந்தையிடுகை துறையில் மேம்பாட்டை ஏற்படுத்துகிறது.
   3) கொள்கை வழிகாட்டல் மேம்பாடு மற்றும் நல்லதொரு பயனுள்ள முடிவினை செயல்படுத்துகிறது.
   4) சந்தையிடுகை தொடர்புள்ள பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண வழிவகை செய்கிறது.
   5) சந்தையிடுகை தொடர்பான பிரச்சினை குறித்து மேலும் தகவல்களை கண்டு உணருகிறது.
   6) தற்போது நடைமுறையில் உள்ள சந்தையிடுகை பணிகளில், குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை மறு ஆய்வு செய்கிறது.
   7) முன்னேற்ற செயல் குறித்து சரியான நடிவடிக்கை மேற்கொள்கிறது.

2. **சந்தையிடுகையின் கருத்துக்களை விவரிக்கவும்.**
   1. என்ன விற்பனை செய்ய இயலும்?
      - என்ன விற்பனை செய்ய இயலும் என்பதை முடிவு செய், ஆனால் எதை நீ உற்பத்தி செய்தாயோ, அதை விற்பனை செய்ய முயற்சிக்காதே
   2. முதலில் பொருட்களை உற்பத்தி செய்யலாமா?
      - இல்லை, முதலில் வாடிக்கையாளரை உருவாக்கு, அதன் பிறகு பொருட்களை உருவாக்கு.

3. **எனது பொருட்கள் மீது அன்பு செலுத்தலாமா?**
    - ❖ இல்லை, உனது வாடிக்கையாளர் மீது அன்பு செலுத்து. ஆனால், பொருட்களின் மீது அல்ல.
4. **சந்தையில் யார் மேம்பட்டவர்?**
    - ❖ நுகர்வோரே மேம்பட்டவர். அவர்கள் மன்னர் போன்றவர்கள்.
5. **யார் எனது முடிவினை வடிவமைப்பவர்?**
    - ❖ வாடிக்கையாளரின் முன்னுரிமையே உனது முடிவினை வடிவமைக்கும்.

---

3. **சந்தையிடுகை கலவை என்பது பற்றி நீவீர் அறிவது யாது? ஏதேனும் இரண்டு கூறுகளை விளக்கவும்.**
    - ❖ சந்தையிடுகை கலவை மூலம் நிறுவனம் தனது நுகர்வோர்களை குறிவைத்து அதன் மூலம் இலாபம் ஈட்டுவதே ஆகும்.
    - ❖ இத்தகைய சந்தையிடுகையின் செயல்பாடுகள் நான்கு வகை கலவை பொருட்களை கொண்டுள்ளது.
    - ❖ அதாவது பொருட்கலவை, விலை கலவை, இடக்கலவை, மற்றும் மேம்பாட்டு கலவை போன்றவையாகும்.

    **கூறுகள்**

    1) **பொருள்**
        - ❖ பொருள், சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும்.
        - ❖ பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது என்று கூறுகின்ற அளவிற்கு பொருள் முக்கிய இடம் பெறுகிறது.
    2) **விலை**
        - ❖ பிலிப்கோட்லர் அவர்களின் கருத்துப்படி, " விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பாக பெறப்படும் ஒன்றாகும்" அல்லது நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ளதக்க ஒன்றுதான் விலை என்கிறார்".
    3) **இடம்**
        - ❖ ஒரு பொருள் என்னதான் தரம் வாய்ந்தவையாகவும், விலையில் சாதகத் தன்மை மற்றும் சிறந்த மேம்பாட்டு நடவடிக்கைள் இருந்த போதிலும், உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை, பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லையெனில், அனைத்தும் பயன் அற்றதாகும்.
        - ❖ எனவே சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம், ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

---

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **சந்தையிடுகையின் பரிணாமவளர்ச்சி பற்றி விவரி.** ( ஏதேனும் 5 ) ( AUG 2021 )

    1) **பண்டமாற்று முறை**
        - ❖ பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே, ஆரம்ப காலத்தில் மாற்றிக் கொண்டார்கள்
        - ❖ வேறு எந்தவித மாற்றங்களும், இதில் மேற்கோள்ளப்படவில்லை.
        - ❖ குறிப்பாக பணம்.
    2) **உற்பத்தி சார்ந்த**
        - ❖ நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக இலாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்திக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
        - ❖ மேலும் வாடிக்கையாளர்களுக்கு சிறிய அளவிலான முக்கியத்துவமே இக்காலக் கட்டத்தில் வழங்கப்பட்டது.

3) **<u>விற்பனை சார்ந்த</u>**

- இன்றைய பொருளாதார நிலை வாழ்க்கையின் மாற்றத்திற்கு, ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது.
- விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

4) **<u>சந்தையிடுகை சார்ந்த</u>**

- வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.
- ஆனால், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்று தீர்ப்பதில் மட்டுமே அதிக போட்டி இருந்து வந்துள்ளது.

5) **<u>நுகர்வோர் சார்ந்த</u>**

- இந்த நிலையில் மட்டுமே மேம்படுத்தபட்ட பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டது.
- மேலும் அவைகள், நுகர்வோருக்கு மனநிறைவு ஏற்படுத்தும் வகையில் சுவை, விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

6) **<u>மேலாண்மை சார்ந்த</u>**

- சந்தையிடுகை, ஒரு மேலாண்மை பணியினை மேற்கொள்கிறது.
- அதாவது இன்றைய நுகர்வோரின் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடல், பொருள் மேம்பாடு செய்தல் மற்றும் வினியோகம் செய்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

---

**2. சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.** ( SEP 2020 , JUN 2023 )

1) **<u>பொருள்</u>**

- பொருள், சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும்.
- பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது என்று கூறுகின்ற அளவிற்கு பொருள் முக்கிய இடம் பெறுகிறது.

2) **<u>விலை</u>**

- பிலிப்கோட்லர் அவர்களின் கருத்துப்படி, " விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பாக பெறப்படும் ஒன்றாகும்" அல்லது நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ளதக்க ஒன்றுதான் விலை என்கிறார்".

3) **<u>இடம்</u>**

- ஒரு பொருள் என்னதான் தரம் வாய்ந்தவையாகவும், விலையில் சாதகத் தன்மை மற்றும் சிறந்த மேம்பாட்டு நடவடிக்கைள் இருந்த போதிலும், உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை, பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லையெனில், அனைத்தும் பயன் அற்றதாகும்.
- எனவே சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம், ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

4) **<u>விற்பனை மேம்பாடு / விளம்பரம்</u>**

- சந்தையில் ஒரு பொருள் என்னதான் தரமுடையதாக இருந்தாலும், மேலும் விலையில் சாதகநிலை இருந்தாலும், நுகர்வோர் மத்தியில் பொருளின் சிறப்பு இயல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தாத நிலையில், அப்பொருள் நிர்ணயித்த வெற்றியை ஒரு போதும் அடைய இயலாது.
- எனவே மேம்பாட்டு நடவடிக்கைகள், மிகவும் அவசியமான ஒன்றாகும்.
- மேம்பாட்டு நடவடிக்கையில், விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

# அத்தியாயம் 15 . சந்தையிடுதல் நவீன போக்கு

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

**1. சேவை சந்தையிடுதல் என்றால் என்ன?**

- சேவை சந்தையிடுதல் என்பது, தகவல் தொழில்நுட்பம், வங்கிக் காப்பீடு, சுகாதாரம், சுற்றுலா, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பழுதுபார்ப்பு போன்ற சேவைப் பொருள்களை பரிவர்த்தனை செய்துக் கொள்ளுவதை குறிக்கும்.
- சேவை என்பது, கண்ணுக்கு புலப்படாத ஒன்றாகும்.

**2. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன?**

- சுற்று சூழலுக்கு எவ்வித தீங்கு விளைவிக்காமல், சுற்றுப்புற சூழலை பாதுகாப்பாக சந்தைப்படுத்துவதை பசுமை சந்தைப்படுத்துதல் எனலாம்.

**3. மறைமுக சந்தையிடுதல் என்றால் என்ன?** ( JUL 2022 )

- ஒரு நிகழ்ச்சிக்கு எவ்வித நிதியுதவியும் செய்யாமல், வாடிக்கையாளரின் மனதில் பதியும் வகையில் விளம்பரத்தாரர்களுடன் இணைந்து, தங்களுடைய பொருட்களுக்கு இரகசிய வழியில், விளம்பரப்படுத்திக் கொள்ளும் நுட்பத்தை, மறைமுக சந்தையிடுதல் எனப்படுகிறது.

**4. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?**

- சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில், சமூகத்தின் குறிப்பிட்ட பழக்க வழங்கங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில், பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் எனலாம்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

**1. மின் சந்தையிடுதலின் நன்மைகளை விவரி.** ( MAY 2022 )

1) **அனைத்து நேரத்திலும் சந்தை**
   - மின் சந்தை, வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரத்திலும் (24x7) பயனாளிகளுக்கு சந்தை வசதியை அளிக்கிறது.
2) **நேரடி தொடர்பு**
   - தயாரிப்பாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே நேரடி தொடர்பு ஏற்படுவதால், செலவுகள் குறைக்கப்படுகிறது.
3) **தேவையை பெறுதல்**
   - நுகர்வோர் தங்களுக்கு தேவைப்படும் எத்தகைய பொருள்களையும் மற்றும் சேவைகளையும் மின் சந்தையில் பல்வேறு தளங்கள் / வலை பக்கங்கள் மூலம் பெறலாம்.

**2. மின் சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 3 )** ( JUL 2022 )

1) சந்தையின் பங்கை மேலும் விரிவாக்கம் செய்தல்
2) வழங்கீடு மற்றும் விற்பனை மேம்பாட்டு செலவுகளை குறைத்தல்
3) பொருள் குறித்த அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
4) தகவல் தளத்தை பலப்படுத்துதல்.

3. **தனியிடச் சந்தை பற்றி விளக்குக.** ( MAR 2020 , AUG 2021 , MAR 2023 )

- போட்டியாளர்களால் அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட வகுப்பு / பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளரின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து சந்தையிடுதல் முயற்சிகளை செய்வதே தனியிடச் சந்தை குறிக்கும்.
- ஒரு பெரிய குளத்தில் ஒரு சிறிய மீனாக இருப்பதற்கு பதிலாக ஒரு சிறிய குளத்தில் ஒரு பெரிய மீனாக இருப்பது போல, ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவைகளை பூர்த்தி செய்யும் சந்தையை இவ்வாறு அழைக்கிறோம்.
- அனைத்து வசதிகளுடன் உரிய திரையரங்குகள் ( இதன் டிக்கெட்விலை மற்ற திரையரங்கை போல் அல்லாமல் 5 அல்லது 6 மடங்கு அதிகமாக இருக்கும் ).
- ஸ்டார் போர்ட்ஸ், சோனி போர்ட்ஸ், ஸ்டார் கிரிகெட் போன்ற விளையாட்டு சேனல்கள் வெறும் விளையாட்டு வெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு மட்டும் உருவானவை.
- இவை விளையாட்டு ஆர்வர்களின் தேவையை மட்டும் பூர்த்தி செய்கின்றன.

## கூடுதல் வினா

1. **வலைதளச் சந்தையிடல் - விளக்குக.** ( MAR 2020 )

- வலைத்தள கடை அல்லது மெய்நிகர் கடையின் மூலம் இறுதி நுகர்வோருக்கு மின் இணையம் வழியாக பொருள் அல்லது சேவைகளை பராமரித்தல் செய்வதை வலைதள கடை என்கிறோம்.
- பாரம்பரிய கடையில் பொருள்களை கவர்ச்சிகராமாக பார்வைக்கு வைப்பது போல் வலைதளத்திலும் பொருள்களின் அட்டைப் படங்களை வாடிக்கையாளர்களை கவர்ந்திருக்கும் வகையில் காட்சிப்படுத்தப்படுகிறது.
- பொருள்களின் தன்மைகளையும் அதன் பயன்களையும் விளங்கும் வகையில் காட்சிப்படுத்தி பலவயைான சலுகைகளை அளித்து வாடிக்கையாளர்களை கவர்ந்திழுத்து வாங்க தூண்டும் வகையில் பொருள்களை வலைத்தளங்களின் காட்சிப்படுத்தப்படுகின்றன.
- வளைத்தலங்களின் கூறப்பட்டுள்ள வகையில் வாடிக்கையாளர்கள் கடன் அட்டை அல்லது பிறமுறைகளில் பணம் செலுத்தி பொருள்களை வாங்கலாம்.
- வாடிக்கையாளர்கள் கொரியர் சேவையின் மூலம் அவர்களின் விருப்பமான முகவரியில் பொருள்களை பெற்றக்கொள்ளலாம்.

2. **கொரில்லா சந்தையிடுதல் - விவரிக்கவும்.** ( SEP 2020 )

- வரவு, செலவு திட்டத்தில் சந்தையிடுவதற்க்காக, அதிகளவு நிதியை ஒதுக்குவதைவிட நேரம், ஆற்றல் மற்றும் கற்பனையின் மூலம் வழக்கத்திற்கு மாறான முறையை கையாண்டு, வாடிக்கையாளரின் கவனத்தை ஈர்த்து, பொருள் அல்லது சேவைப்பற்றிய தகவல்களை அளித்து விற்பனையை பெருக்கும் முறையை கொரில்லா சந்தையிடுதல் என்கிறோம்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெருவினாக்கள் )

1. **பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது - விளக்கு.** ( MAY 2022 )

| மின் சந்தைப்படுத்துதல் | பாரம்பரிய சந்தைப்படுத்துதல் |
|---|---|
| பொருள்கள் / சேவைகளை, மிக விரைவாக குறைந்த செலவில் மேம்படுத்த முடியும் | பொருள்கள் / சேவைகளை மிக தாமதமாகவும், அதிக செலவில்தான் மேம்படுத்த முடியும் |
| உலக அளவில் மிக விரைவில், மிக எளிதாக பொருள்களை மேம்படுத்தி சந்தையிட முடியும் | அவ்வளவு எளிதாக உலக அளவில் பொருள்களை மேம்படுத்த முடியாது. காலமும், செலவும் அதிகமாகும். |
| வணிக நிறுவனங்கள், மிக குறைந்தளவு மனித வளத்துடன் தொழிலை விரிவுப் படுத்தலாம். | தொழிலை விரிவுப்படுத்த, அதிகளவு மனித வளம் தேவைப்படுகின்றது. |
| ஆண்டு முழுவதும், வார 7 நாட்கள் 24 மணி நேரமும் குறைந்த மனித சக்தியுடன் சந்தையிட முடியும். | ஆண்டு முழுவதும், வார 7 நாட்கள் 24 மணி நேரமும் சந்தையிட முடியாது. |

2. **நவீன சந்தையிடுதல் ஏதேனும் இரண்டினை விளக்குக.**

1. **வைரல் சந்தையிடல்**
   - ஒரு நபர் சந்தை (அ) பொருள் பற்றிய விவரங்களை மற்றவருக்கு அனுப்புவார்.
   - அச்செய்தி தொற்றுக்கிருமி பரவுவதைப் போல் ஒருவரிடமிருந்து பல நபர்களுக்கு மிக விரைவாக பரவி, ஒரு பொருள் அல்லது பிராண்டுக்காண விற்பனை அதிகரிக்கும் வகையில் சந்தையிடும் முறையை, வைரல் [பரப்பு] சந்தையிடுதல் என்கிறோம்.
   - உதாரணம் : யூ - டியுப், முகநூல், டிவிட்டர்
2. **பதுங்கியிருந்து சந்தையிடுதல்( மறைமுக சந்தையிடுதல் )**
   - ஒரு நிகழ்ச்சிக்கு எவ்வித நிதியுதவியும் செய்யாமல், வாடிக்கையாளரின் மனதில் பதியும் வகையில் விளம்பரத்தாரர்களுடன் இணைந்து, தங்களுடைய பொருட்களுக்கு இரகசிய வழியில், விளம்பரப்படுத்திக் கொள்ளும் நுட்பத்தை, பதுங்கியிருந்து (அம்புஷ்) சந்தையிடுதல் எனப்படுகிறது.
3. **கொரில்லா சந்தையிடுதல்**
   - வரவு, செலவு திட்டத்தில் சந்தையிடுவதற்காக, அதிகளவு நிதியை ஒதுக்குவதைவிட நேரம், ஆற்றல் மற்றும் கற்பனையின் மூலம் வழக்கத்திற்கு மாறான முறையை கையாண்டு, வாடிக்கையாளரின் கவனத்தை ஈர்த்து, பொருள் அல்லது சேவைப்பற்றிய தகவல்களை அளித்து விற்பனையை பெருக்கும் முறையை கொரில்லா சந்தையிடுதல் என்கிறோம்
4. **பரிந்துரை சந்தையிடுதல்**
   - ஒரு பொருள் (அ) சேவையைப் பற்றி ஒருவர் மற்றவருக்கு பரிந்துரை செய்வதை பரிந்துரை சந்தையிடுதல் என்கிறோம்.
5. **உள்ளடக்க சந்தையிடுதல்**
   - பொருள்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யாமல், அதனைப் பற்றிய செய்தி தகவல்களை நுகர்வோருக்கு தெரிவிக்கும் கலையை, உள்ளடக்க சந்தையிடுதல் என்கிறோம்.
   - இவ்வாறு பொருள்/ சேவை பற்றிய தகவல்களை அளிக்கும் நிறுவனத்தை குறுக்கீடுயில்லா சந்தையிடுதல் எனவும் அழைக்கப்படுகிறது.

# அலகு 6 . நுகர்வோர் பாதுகாப்பு

## அத்தியாயம் 16 . நுகர்வோரியல்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **நுகர்வோர் என்பவர் யார்?**
   - உற்பத்தியாளரிடமிருந்து அல்லது விற்பனையாளரிடமிருந்து பொருட்களை வாங்குவோர் அல்லது பிறரால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்கப்படும் பொருட்களை பயன்படுத்துபவரே நுகர்வோர் ஆவார்.
   - வங்கிகள், போக்குவரத்து நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் போன்றவை வழங்கும் சேவைகளை ஏற்பவரும் நுகர்வோர் என்றே அழைக்கப்படுகிறார்.

---

2. **கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.** ( SEP 2020 , AUG 2021 , MAY 2022 )
   1) உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன.
   2) தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது.
   3) தேனின் அளவை அதிகரிப்பதற்காக தண்ணீர் மற்றும் சர்க்கரை சேர்க்கப்படுகின்றது.
   4) மஞ்சள்தூள் போன்ற மசலாக்களுடன் மெத்தனால் சேர்க்கப்படுகின்றது.
   5) கருப்பு மிளகுடன் பப்பாளி விதை கலக்கப்படுகின்றது.
   6) மிளகாய்ப் பொடியுடன் செங்கல் பொடி கலக்கப்படுகின்றது.

---

3. **"வாங்குவோர் ஜாக்கிரதை" எனறால் என்ன?**
   - பொருட்களை வாங்கியவர் அப்பொருள் தனது எதிர்பார்ப்புகளை ஈடுசெய்யவில்லை எனில், அதற்கு பொருட்களை விற்றவர் எந்தவகையிலும் பொறுப்பாக மாட்டார்.
   - பொருட்களை வாங்கியவர் அதற்கு நிவாரணம் தேட இயலாது என நுகர்வோரை எச்ச ரிக்கை செய்யும் தத்துவமே "வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு" எனும் கோட்பாடாகும்.

---

4. **"விற்பனையாளர் ஜாக்கிரதை" எனறால் என்ன?**
   - இன்றைய தினத்தில் விற்பனையாளர்களுக்கு, தாங்கள் விற்பனை செய்யும் பொருட்கள் மீது, மிக அதிகப் பொறுப்பு உண்டு.
   - விற்பனையாளர்கள், தங்களது பொறுப்பிலிருந்து தப்பிக்க இயலாது.
   - விளம்பரங்களில் "பொருட்கள் உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் விற்பனை செய்வது, "விற்பனையாளர் ஜாக்கிரதை" எனும் கோட்பாடு ஆகும்.

---

5. **<u>சிறு குறிபபு வரைக</u>. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986.**
   - "நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 " , 15.04.1987 அன்று அமுலுக்கு வந்தது.
   - இச்சட்டம் 1993 - ல் திருத்தியமைக்கப்பட்டது.
   - இச்சட்டம் சுருக்கமாக "கோப்ரா" (COPRA) என்றழைக்கப்படுகிறது.
   - இச்சட்டம், நேர்மையற்ற வணிக நடைமுறைகள் மற்றும் பல்வேறு வகையான சுரண்டல்களிலிருந்து, நுகர்வோரைப் பாதுகாக்கின்றது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **நுகர்வோரியல் குறித்து இயற்றப்பட்ட முக்கியச் சட்டங்கள் யாவை? ( ஏதேனும் 3 )**

   1) **இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872**
      - இச்சட்டம் மக்கள் ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்கின்றது.

   2) **பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930**
      - விற்பனை ஒப்பந்தத்தில் வெளிப்படையான மற்றும் உட்கிடையான உத்தரவாதங்களை விற்பனையாளர்கள் செயல்படுத்த மறுப்பதிலிருந்து நுகர்வோர்களைளைப் பாதுகாக்கின்றது.

   3) **எடை மற்றும் அளவுகள் சட்டம் 1976**
      - இச்சட்டம் எடை குறைவு மற்றும் அளவுக் குறைபாடுகளைப் போக்கி நுகர்வோரைப் பாதுகாக்கிறது.
      - இச்சட்டம் அளவியல் சட்டம் 2009 ஆக திருத்தியமைக்கப்பட்டது.

   4) **வணிகக் குறிகள் சட்டம் 1999**
      - இச்சட்டம் பொருட்களில் மோசடியான வணிகக் குறிகளிடுவதை தடை செய்கின்றது.

---

2. **செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?** ( MAR 2020 , AUG 2021 , JUN 2023 )
   - சில சூழ்நிலைகளில் வணிகர்கள், போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட, தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர்.
   - இத்தகைய செயல்முறையே செயற்கைப் பற்றாக்குறை எனப்படுகின்றது.

---

3. **நுகர்வோரியலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக. ( ஏதேனும் 3 )**
   1) நுகர்வோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை ஒருங்கிணைத்தல்
   2) நியாயமற்ற வணிக நடைமுறைகளை எதிர்த்தல்
   3) சுரண்டல்களிலிருந்து பாதுகாத்தல்
   4) அரசின் கவனத்தை ஈர்த்தல்
   5) நுகர்வோர் பாதுகாப்பு விதிகளை திறம்பட நடைமுறைப்படுத்தல்
   6) முழுமையான மற்றும் சமீபத்திய தகவல்களை தருதல்
   7) சமூகவிரோத நடவடிக்கைகளை எதிர்த்தல்

---

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? ( ஏதேனும் 5 )** ( JUL 2022 , MAR 2023 )

   1) **அதிக விலைக்கு விற்றல்**
      - விற்பனையாளர்கள் மற்றும் சேவைகளை அளிப்பவர்கள், தாங்கள் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு அதன் தரத்திற்கு ஈடான விலையைக் காட்டிலும், கூடுதலான விலையை அளிப்பதற்கு பல்வேறு தருணங்களில் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

   2) **கலப்படம்**
      - கலப்படம் என்பது, உணவுப்பொருட்களில் விரும்பத்தகாத பதிலிப் பொருட்களைச் சேர்ப்பதாகும்.
      - கலப்படப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு உடல்ரீதியாகவும், பணரீதியாகவும் கடுமையான இழப்புகள் ஏற்படுகிறது.

      **உதாரணம்**

      i) உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன.
      ii) தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலக்கப்படுகின்றது.

iii) தேனின் அளவை அதிகரிப்பதற்காக தண்ணீர் மற்றும் சர்க்கரை சேர்க்கப்படுகின்றது.
iv) மஞ்சள்தூள் போன்ற மசலாக்களுடன் மெத்தனால் சேர்க்கப்படுகின்றது.
v) கருப்பு மிளகுடன் பப்பாளி விதை கலக்கப்படுகின்றது.
vi) மிளகாய்ப் பொடியுடன் செங்கல் பொடி கலக்கப்படுகின்றது

3) <u>போலியான பொருட்கள்</u>

❖ மக்கள் மத்தியில் பிரபலமடைந்த பொருட்களைப் போன்று, போலியான பொருட்கள் தயாரிக்கப்பட்டு, மோசடியாக விற்பனை செய்கிறனர்.

<u>உதாரணம்</u>

❖ நகைகள், துணிகள் மற்றும் ரூபாய் நோட்டுக்கள் போலியாகத் தயாரிக்கப்படுகின்றது.

4) <u>செயற்கைப் பற்றாக்குறை</u>

❖ சில சூழ்நிலைகளில் வணிகர்கள், தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை, இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட, தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர்.
❖ இத்தகைய செயல்முறையே செயற்கைப் பற்றாக்குறை எனப்படுகின்றது.

5) <u>தரக்குறைவு</u>

❖ கட்டுமானம் செய்து முத்திரையிடப்பட்ட கொள்கலன்களை திறந்தால் அதில் அடைக்கப்பட்டுள்ள பொருட்கள் தரம் குறைந்ததாகவும், கெட்டுப்போனதாகவும், நிகர எடை கொல்கலனில் குறிப்பிடப்பட்டுள்ளதை விட, குறைவாக இருப்பதையும் காணமுடிகிறது.

6) <u>இடர்பாடு கொண்ட பொருட்கள்</u>

❖ பொருட்களின் தயாரிப்பாளர்கள், தங்களின் தயாரிப்பு பொருட்களை எவ்வாறு பாதுகாப்புடன் பயன்படுத்த வேண்டும் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நுகர்வோரிடம் முன் வைக்க வேண்டும்.
❖ இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாமல் நுகர்வோர் அத்தகைய அபாயகரமான பொருட்களை கையாளும் போது விபத்து ஏற்படுத்தும் வாய்ப்புகள் மிக அதிகம்.

7) <u>பொய் விளம்பரங்கள்</u>

❖ விளம்பரங்கள் பொருளின் தரம், விலை, உள்ளடக்கம், பயன்பாடு, உத்தரவாதம், செயல்திறன் குறித்த தவறான கருத்துக்களை பரப்பப்படுகின்றன.
❖ இவ்வகையான பொய் விளம்பரங்களை நம்பி பொருள்களை வாங்கும் நுகர்வோர் ஏமாற்றப்படுகிறார்கள்.

---

**2. நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக? ( ஏதேனும் 5 )**

1) <u>விலை உயர்வைத் தவிர்த்தல்</u> ( MAY 2022 )

❖ வணிக நிறுவனங்கள், தங்கள் வணிகத்தில் பொருட்களில் கடுமையான பற்றாக் குறை ஏற்படும் சூழலில் கூட, பொருளுக்கான விலைகளை உயர்த்துவதை தவிர்க்க வேண்டும்.

2) <u>பதுக்கலை தவிர்த்தல்</u>

❖ வணிக நிறுவனங்கள்நுகர்வோர் பாதிக்கப்படும் வகையில், பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தை நடவடிக்கைகள் மூலம், அதிக இலாபம் ஈட்டும் நடவடிக்கைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

3) <u>உயர்தரத்திற்கு உத்தரவாதம் அளித்தல்</u>

❖ வணிக நிறுவனங்கள், தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு பொய்யான உத்தரவாதங்களை அளிக்கக்கூடாது.
❖ அவைகள் தங்களது பொருட்களின் உயர் தரத்தினை உறுதிப்படுத்த வேண்டும்.

4) **பொருட்கள் குறித்த தகவல்கள் அளித்தல்**

❖ வணிக நிறுவனங்கள், தங்களின் உற்பத்திப் பொருட்களின் தரம், அளவு மூலப்பொருட்கள் பயன்பாடு, பின் விளைவுகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், எடை, மாற்றிக் கொள்ளும் வசதி, பயன்படுத்தும் முறை ஆகியவை குறித்த மிகச்சரியான மற்றும் போதுமான தகவல்களை நுகர்வோருக்கு கட்டாயம் தரவேண்டும்.

5) **விளம்பரங்களில் உண்மை**

❖ வணிக நிறுவனங்கள், தங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விளம்பரம் செய்யும் போது, அவ்விளம்பரங்களில் பொய்யான, உண்மைக்குப் புறம்பான, மோசடியான தகவல்களை அளித்து நுகர்வோருக்கு தவறான வழிகாட்டக் கூடாது.

6) **பணத்தை திருப்பிக் கொடுக்கும் உத்தரவாதம்**

❖ வணிக நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களில், குறைபாடுகள் காணப்படின், அக்குறைபாடுடைய பொருட்களை, திரும்பப் பெற்றுக் கொண்டு, புதிய பொருட்களை வழங்க வேண்டும் அல்லது அவற்றிற்குரிய பணத்தை திருப்பித் தரவேண்டும்.

7) **நுகர்வோர் குறைபாடுகளைத் தீர்த்தல்**

❖ நுகர்வோரின் குறைகளுக்கு, வணிக நிறுவனங்கள் தங்களது நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு மூலம், உடனடியாகவோ அல்லது குறிப்பிட்ட கால வரம்பிற்குள்ளோ தீர்வு காணப்படவேண்டும்.

---

3. **நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், 1986 - ன் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 5 )**

( AUG 2021 )

i) நுகர்வோரின் உயிருக்கும், உடமைக்கும், ஊறு விளைவிக்கும் பொருட்களை, சந்தைப் படுத்துவதற்கு எதிராக நுகர்வோரைப் பாதுகாத்தல்.

ii) நுகர்வோர் வாங்கும் பொருட்களின் தரம், அளவு, சுத்தத்தன்மை, விலை மற்றும் தரநிலை குறித்த உண்மையான மற்றும் முழுமையான தகவல்களை, நுகர்வோருக்கு அளித்தல்.

iii) வணிகர்களின் நியாயமற்ற, வணிக நடைமுறைகளிலிருந்து, நுகர்வோரைப் பாதுகாத்தல்.

iv) சுரண்டல் நடைமுறைகளுக்கு எதிராக, தீர்வுகளை தேட, நுகர்வோருக்கு அதிகாரமளித்தல்.

v) நுகர்வோர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை அறிந்து கொள்ளச் செய்தல்.

vi) நல்ல தரமான பொருட்களை, சரியான விலைகளில் கிடைக்கச் செய்வதன் மூலம், அவர்களின் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிபடுத்துதல்.

vii) நுகர்வோர் தங்களது உரிமைகைளை நிலை நாட்ட, நுகர்வோர் குழுக்கள் மற்றும் பிற அதிகார அமைப்புகளை ஏற்படுத்துதல்.

---

# அத்தியாயம் 17 . சந்தை மற்றும் சந்தையிடுகையாளர்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **தகவல் பெறும் உரிமை (Right to be informed) பற்றி சிறு குறிப்பு வரைக.**

❖ பொருட்களை வாங்கும்பொழுது, நுகர்வோர் அப்பொருட்களைப் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் கேட்டுப் பெற வேண்டும்.

❖ விளம்பரம் மற்றும் பெயரிடல் செயல் மூலம் பொருட்களைப் பற்றிய விவரம் அதன் கட்டுமம் மீது தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

❖ இதன் உட்பொருள் என்னவென்றால், பொருட்களை உற்பத்தி செய்பவரும், விநியோகிப்பவரும், அப்பொருட்களைப் பற்றிய தகவல்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும்.

2. **ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை? ( MAR 2020 , 2023 )**

1) பாதுகாப்பில் உரிமை
2) தகவல் பெறும் உரிமை
3) தேர்ந்தெடுக்கும் உரிமை
4) கேட்கும் உரிமை

3. **வணிகத்தின் முதன்மை நோக்கங்கள் யாவை? ( JUL 2022 )**

- நுகர்வோரை திருப்தியடையச் செய்வதே வியாபாரத்தின் தலையாய நோக்கமாகும்.
  - நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பங்களை தெரிந்து, அதனை நிறைவேற்றுவது, வணிகத்தின் தலையாய மற்றும் முதன்மையான நோக்கங்கள் ஆகும்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன? ( MAY 2022 )**

- பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
- நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உண்மையான கூற்றுகளுக்கு நியாயமான மற்றும் உறுதியான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

2. **ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது என்ன?**

- சில தயாரிப்புப் பொருட்கள் நுகர்வோரின் உடல் நலம், சொத்துக்கள் மற்றும் வாழ்வு முறையில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கலாம்.
- அத்தயாரிப்புகள் நுகர்வோரின் நலனுக்கு தீங்கு விளைவிக்க கூடியதாக இருக்கலாம்.

**உதாரணம்** :

- உணவு சேர்க்கைகள், நிறமிகள், உணவுப்பாதுகாப்பு இரசாயனங்கள் ஆகியவை ஆகும்.
- உடல்நலக் கோளாறுகள் மற்றும் ஆரோக்கிய அபாயங்கள் எழும் வாய்ப்புகள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும் அல்லது முற்றிலும் குறைக்கப்பட வேண்டும்.
- உணவுகள் மற்றும் மருந்துகள் நுகர்வோரின் உயிரைக் காப்பாற்றுவதாகவும், உயிருக்கு பாதுகாப்பு அளிப்பதாகவும் இருக்க வேண்டும்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **நுகர்வோரின் கடமைகளை விளக்குக? ( ஏதேனும் 5 ) ( SEP 2020 , JUL 2022 , JUN 2023 )**

1. **தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்குதல்**
   - பொருட்களைப் பற்றிய முழுமையான அறிவுடன் அதன் விலை , தரம் மற்றும் அதன் அனைத்து விவரங்களையும் அந்த பொருளை வாங்குவதற்கு முன் தெரிந்து கொள்ள வேண்டியது நுகர்வோரின் முக்கிய பொறுப்பாகும்.
   - ஒரு பொருளை வாங்கும்பொழுது நன்கு விசாரித்து வாங்குவதை கடமையாகக் கொள்ளவேண்டும்.
2. **பொருட்களின் எடையையும் அளவையும் உறுதி செய்தல்**
   - வியாபாரிகள், பெரும்பாலும் நியாயமற்ற எடைகள் மற்றும் மோசடி நடவடிக்கைகள் மூலம் நுகர்வோரை ஏமாற்றுகிறார்கள்.
   - நுகர்வோர் என்பவர், சரியான எடை மற்றும் சரியான அளவிலான பொருட்களை பெறுகிறோம் என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.
3. **விவர அட்டையை கவனமாக படித்தல்**
   - பொருளின் மீது ஒட்டப்பட்டுள்ள விவர அட்டையை முழுமையாக படிக்கவேண்டியது நுகர்வோரின் கடமையாகும்.

- ❖ பொருளின் விவரங்கள் முழுமையாகவும் சரியாகவும் மற்றும் உண்மையாகவும் இருக்க வேண்டும்.

4. **தவறான மற்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருத்தல்**
   - ❖ விற்பனையாளர்கள் பெரும்பாலும் பொருட்கள் மீதான கவர்ச்சிகரமான விளம்பரங்களை செய்கிறார்கள்.
   - ❖ எனவே , இத்தகைய மோசடி விளம்பரங்களால், தவறாக புரிந்து கொண்டு ஏமாறாமல் இருப்பதே நுகர்வோரின் தலையாய கடமையாகும்.
5. **தவறான திட்டங்கள்**
   - ❖ பெரும்பாலும் விளம்பரங்கள் கவர்ச்சிகரமாகவும் உணர்ச்சிகரமாகவும் பயன்படுத்தப்படுகின்றன .
   - ❖ அவைகள், ஏமாற்றும் வகையிலும் தவறாகவும் இருந்து நுகர்வோர்களை வழி நடத்லாம். நுகர்வோர் எப்பொழுதும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மீது எச்சரிக்கையாகவும், தவறான விளம்பரங்களை தவிர்க்கவும் வேண்டும்.
6. **ரொக்க ரசீதை உறுதி செய்தல்**
   - ❖ பொருட்களுக்கா ன இடாப்புடன் ரொக்க ரசீது உத்தரவாத அட்டை போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் சட்டப்படியான கடமையாகும்.
   - ❖ பொருட்களில் ஏற்படும் குறைபாடுகளை களைய குறை தீர்வகத்தில் முறையிட உத்தரவாத அட்டை உதவிடுகிறது.
7. **புகழ்மிக்க கடைகளிலிருந்து பொருட்களை வாங்குதல்**
   - ❖ நுகர்வோருக்குச் சிறப்பானது எதுவெனில், புகழ்மிக்க கடைகளில் அல்லது அரசு கடைகளில் பொருட்களை வாங்குவது சிறந்தது என அறிவுறுத்தப்படுகிறது.
   - ❖ உதாரணமாக, கூட்டுறவு கடைகள், சிறப்பங்காடிகள்
8. **தரமான பொருட்களை வாங்குதல்**
   - ❖ நுகர்வோர் குறைந்த விலையிலான தரமற்ற பொருட்களை வாங்குவதைக்கட்டிலும், தரமான பொருட்களையே வாங்குதல் மற்றும் உள்ளதையே ஆராய்ந்து தரக்குறியீட்டுடன் வாங்குதல் பாதுகாப்பானதாகும்.

---

## 2. நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? ( ஏதேனும் 5 )

( AUG 2021, MAY 2022 , MAR 2023 )

1) விற்பனை ஒப்பந்தபடி, பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.
2) பொருட்களை நுகர்வோரின் இருப்பிடத்தில் வழங்குமாறு, விற்பனையாளரை கேட்டுக் கொள்வது அவரின் பொறுப்பாகும்.
3) குறித்த நேரத்தில் பொருட்களை நுகர்வோர் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், அதனால் ஏற்படும் நட்டத்திற்கு அவரே பொறுப்பாவார்.
4) பொருட்களை பெற்றுக் கொண்டு, தாமதமாக விற்பனையாளருக்கு பணம் செலுத்தினாலோ அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திவிட்டாலோ அதற்கான நஷ்டஈடு தர வேண்டியது நுகர்வோரின் கடமையாகும்.
5) நுகர்வோர் தங்களிடமிருக்கும் பொருட்களை, அதன் விதிமுறைகளின்படி மற்றும் முன்னெச்சரிக்கையுடன் அப்பொருட்களை பயன்படுத்த வேண்டும்.
6) நுகர்வோர் பொருட்கள் மீதான தனது தேவையை, தெளிவாக விற்பனையாளரிடம் வெளிப்படுத்த வேண்டும்.
7) நுகர்வோர் பொருட்களை வாங்குவதற்கு முன்பாக, கட்டாயம் பொருட்கள் மீதான விலை, தரம் மற்றும் அளவு ஆகிய தகவல்களை முழுமையாக பார்க்க வேண்டும்.
8) நுகர்வோர் பொருட்களை வாங்கும்பொழுது விற்பனையாளரிடமிருந்து பொருட்களுக்கான ரொக்க ரசீதை பெற்றுக் கொள்ள வேண்டும்.

9) நுகர்வோர் பொருட்களில் ஏதேனும் குறை ஏற்பட்டாலோ அல்லது சேவைக் குறைவு ஏற்பட்டாலோ, நுகர்வோர் குறைதீர்வகத்தில் புகாரை சமர்ப்பிக்க வேண்டும்

10) பொருட்களின் தரத்தில் நுகர்வோர் எவ்வித சமரசமும் செய்து கொள்ளக்கூடாது. நுகர்வோர் ISI, அக்மார்க், FPO போன்ற தரக்குறியீடு சான்றுகளை மற்றும் அடையாளக் குறியீடுகளை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

# அத்தியாயம் 18 . குறை தீர்ப்பு செயல்முறை

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **குறை தீர்ப்பு குறிப்பு வரைக.**
   - ❖ தவறான விளம்பரங்கள், தரம் குறைந்த பொருட்கள், சிறு எடைகள் மற்றும் அளவீடு, அதிகப்படியான செலவுகள் ஆகியவற்றின் மூலம் நுகர்வோர்கள் சுரண்டப்படுவதிலிருந்து, தீர்வு காண்பதற்கு குறை தீர்ப்பு என்று பெயர்

2. **தேசிய ஆணையத்தினைப் பற்றி விவரி.**
   - ❖ இந்த அமைப்பு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 ன் கீழ் ஒரு பகுதி நீதிமன்றமாக 1988 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
   - ❖ இதன் தலைமை அலுவலகம், புதுடெல்லியில் இயங்கி வருகிறது.
   - ❖ இந்த தீர்ப்பாணையம் உச்ச நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதியை, தலைவராக கொண்டு இயங்கி வருகிறது.
   - ❖ இவ்வமைப்பு, தேசிய தீர்பாணையம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

3. **மாநில ஆணையம் என்ற பதத்தை விவரிக்கவும்.**
   - ❖ இந்த ஆணையம் மாநில அளவில் செயல்பட்டுவருகிறது.
   - ❖ இந்த அமைப்பை, நுகர்வோர் குறைப்பாட்டு தீர்பாணையம் என அழைக்கப்படுகிறது.
   - ❖ சரக்கு மற்றும் சேவைகள் தொடர்பாக எழும் புகார்கள் இந்த தீர்பாணையத்தின் செயல் எல்லைக்குள் அடங்கும்.

4. **மாவட்ட மன்றம் பற்றி விளக்குக?**
   - ❖ 1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதன் பிரிவு 9 ஆகியவற்றின் படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நுகர்வோர் நலனைப் பாதுகாக்க, ஒரு மாவட்ட மன்றம் அமைத்தல் அவசியம்.
   - ❖ மாநில அரசு, அதை செய்ய தகுதியுடையதாக இருந்தால், ஒரு மாவட்ட மன்றமும், ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்ட மன்றங்களை உருவாக்க முடியும்.
   - ❖ ஒரு நுகர்வோர், தனது குறைவினை நுகர்வோர் மன்றத்தில் தாக்கல் செய்யலாம்.
   - ❖ பாதிக்கப்பட்ட நபரால் மட்டுமே புகார் அளிக்கப்பட வேண்டும் என்று அவசியமில்லை. அவர் சார்பாக மற்றவர்களும் புகார் கொடுக்க உரிமை உண்டு.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி? ( SEP 2020 )**
   1) 5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்
   2) அவர்களில் ஒருவர் நீதி துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
   3) ஏனைய நபர்கள் பிறதுறைகளில், அறிவு, ஆற்றல், அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.
   4) இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

2. **மாநில ஆணயத்தின் உறுப்பினர்கள் யார்?** ( MAR 2023 )

- உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக, சம்மந்தப்பட்ட மாநில அரசால் பதவி அமர்த்தப்பட்ட நபர், இந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படலாம்.
- நீதி, நேர்மை, நாணயம் கொண்ட மற்றும் போதிய அறிவு மற்றும் அனுபவம் கொண்ட நபர்களையோ அல்லது பொருளாதாரம் சட்டம், வணிகம் மற்றும் தொழில் நிர்வாகம் போன்ற துறைகளின் ஏற்பட்டும் சிக்கல்களைக் கையாளும் திறனை கொண்டவர்களையும் நியமிக்கலாம்.

3. **தன்னார்வ நுகர்வோர் அமைப்பு பற்றி விவரிக்கவும்.**

- தன்னார்வ நுகர்வோர் அமைப்பு என்பது, நுகர்வோரின் உரிமை மற்றும் நலனை பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்ட அமைப்பை குறிக்கும்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் தன்னார்வ நிறுவனங்களின் நோக்கம் யாது?**

   1) நுகர்வோர் விவகாரத் துறை என்ற அமைப்பை நுகர்வோர் நலநிதியை ஏற்படுத்தி, அதனை நிர்வகித்து வருகிறது.
   2) இந்தியாவில் உள்ள நுகர்வோரை பாதுகாக்க, இந்த துறை நுகர்வோர் குறித்த விழிப்புணர்வை, அகிலந்திய அளவில் பல்வேறு அமைப்புகளின் உதவியுடன் பெருக்கி வருகிறது.
   3) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நலனை வலுப்படுத்துதல் மற்றும் நுகர்வோருக்கு வழிகாட்டுவது மற்றும் ஆலோசனை வழங்குவது மற்றும் குறைகளை தலையீடு செய்து தீர்ப்பது.
   4) தன்னார்வ நுகர்வோர் அமைப்பு நுகர்வோர் நலநிதியிலிருந்து, பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை ஆய்வு செய்யும் செயல் திட்டங்களுக்கு, நிதி உதவி செய்கிறது மற்றும் பொருட்களின் தர சோதனை குறித்து நடத்தப்பட்ட ஆய்வின் கண்டுபிடிப்புகளின் பொதுமக்களுக்கு வெளியீட்டு, நுகர்வோருக்கு பலதரப்பட்ட பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
   5) தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் தங்களின் செயல்பாடுகளை வெளிபடுத்த, நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் . அரசு குடிமக்களிடம் கொண்டுள்ள தொடர்பினை இணையதளம் மூலமாக, வெளிப்படையாக அறிவித்தல்.

2. **நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் அளிக்கப்படும்போது புகார் மனுவில் தரப்படுப்படும் விவரம் யாவை?**

   1) புகார் அளிப்பவரின் பெயர் முகவரி
   2) புகார் அளிக்கும் எதிர்தரப்பினரின் பெயர் முகவரி
   3) வாங்கிய பொருள் அல்லது பயன்படுத்திய சேவையின் நாள்
   4) வாங்கிய பொருள் அல்லது சேவையின் மதிப்பு
   5) வாஙகிய பொருள் அல்லது சேவையின் முழுவிவரம்
   6) புகார் பற்றிய விவரம் அதாவது வணிக பழக்கங்களுக்கு புறம்பான செயல்பாடுகள் அல்லது பொருள் அல்லது சேவையில் உள்ள பழுதா அல்லது மிகையாக செலுத்தப்பட்ட விலையா என தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.
   7) வாங்கிய பொருள் அல்லது சேவை தொடர்பாக வழங்கப்பட்ட ரொக்கம் அல்லது கடன் இரசீது.

**கூடுதல் வினா**

1. **சுந்தரி என்பவர் நகைக் கடையில் ஒரு தங்கச் சங்கிலியை வாங்கினார். வாங்கிய ஒரு மாதத்தில் தங்கச் சங்கிலியின் நிறம் மாறிவிட்டது. நுகர்வோர் மன்றத்தில் வழக்கு தொடங்கும் முறையினை ஆலோசனையாக சுந்தரிக்கு வழங்குக. ( SEP 2020 )**

- புகார் அளிக்க விரும்பும் நபர், தனிப்பட்ட முறையிலோ அல்லது முகவர் மூலமாகவோ அல்லது அஞ்சல் வழியாகவோ குறைதீர்ப்பு அமைப்புக்கு புகாரை அளிக்கலாம். அவ்வாறு புகார் அளிக்கும்போது, கீழ்கண்ட முறைகளில் புகாரினை அளித்திட வேண்டும்.
  1) பொருட்களின் உள்ள குறைப்பாடுகள் தெளிவாக குறிப்பிட்டு, பாதிக்கப்பட்ட சுந்தரி என்ற நுகர்வோர், தனது புகார் மனுவை, தயாரிப்பாளர் அல்லது விற்பனையாளர் அல்லது பொருளை விற்ற வணிகர்கள் இடம் தாக்கல் செய்ய சொல்லுதல்.
  2) நுகர்வோர் தனது பெயர், முகவரி, பொருள் வாங்கிய நாள், வாங்கிய தங்கச் சங்கலி விவரம் குறித்து சட்டப்படி கொடுக்கச் சொல்லுதல்,
  3) வாங்கிய தங்கச் சங்கலியில் உள்ள தரக்குறைப்பாடுகள் அல்லது அதிலிருந்து எழுந்த சிக்கல்களை தெளிவாக குறிப்பிட சொல்லுதல்,
  4) புகாரின் பேரில் சமந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை நிறுவனம், இந்நாள் வரை எடுத்த தீர்வு நடவடிக்கைகளை தெரிந்து கொள்ள அறிவுருத்துதல்,
  5) சமந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் தீர்வு நடவடிக்கை என்ன என்பதையும்,
  6) சமந்தப்பட்ட நிறுவனங்களுக்கு குறைகளை தீர்க்க, கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லுதல்,
  7) சட்டபடி அளிக்கப்பட்ட அறிவிப்புக்கு, சம்மந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை செய்து நிறுவனம், முறைபடி பதிலளிக்கப்படாமல் இருக்கும் நிலையில், வருங்காலத்தில் எடுக்கப்பட இருக்கும் சட்ட நடவடிக்கைகள் குறித்த தெளிவான நிலைப்பாடு, புகார் மனுவில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லுவேன்.

# அலகு 7 . வாணிபச் சூழல்

## அத்தியாயம் 19 . சுற்றுச் சூழல் காரணிகள்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **உட்புறச் சூழல் என்றால் என்ன? ( MAR 2020 )**
   - உட்புறச் சூழல் என்பது, நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும்.
   - இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும்.

2. **பெரு நிறுவன நிர்வாகத்தின் பொருள் என்ன?**
   - பெரு நிறுவன ஆளுகை என்பது, ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் கொள்கைகள் ஆகும்.
   - ஒரு நிறுவனத்தை நிர்வகித்து, அதன் குறிக்கோளை அடைவதற்கான ஒரு வடிவமைப்பை இது வழங்குகிறது.

3. **சரக்குகள் மற்றும் சேவைகள் வரி GST என்றால் என்ன?**
   - நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகளில் மறைமுக வரியாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்டுள்ளது.
   - இது ஒரு விரிவான, பல கட்ட இலக்கு அடிப்படையிலான மதிப்பு கூட்டு வரியாகும்

4. **VUCA-ஐ விரிவாக்கம் தருக.**
   - ❖ வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக ஏற்ற இறக்கம், நிச்சயமற்றத்தன்மை, சிக்கலானத் தன்மை மற்றும் தெளிவற்றத்தன்மை கொண்டவை என்று கூறலாம்.

---

## மூன்று மதிப்பெண் வினாக்கள் சிறு வினாக்கள்

1. **அரசியல் சூழ்நிலை காரணிகள் யாவை? ( ஏதேனும் 3 )**
   1) அரசியல் ஸ்திரத்தன்மை என்பது, தேர்தல் அமைப்பு, சட்டம் மற்றும் ஒழுங்குநிலை , இராணுவம் மற்றும் காவல் படை , ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்துதல், உள்நாட்டு போர் போன்ற பல்வேறு குறிக்கோள்களை கொண்டுள்ளது
   2) அரசியல் அமைப்பு என்பது, அரசியல் கட்சிகள், அரசாங்கம், அதிகாரத்துவத்தின் அதிகாரம் மற்றும் பற்றாக்குறை , குடிமக்கள் மத்தியில் அரசியல் நகர்வின் நிலை , நிதி நிறுவனங்கள் மற்றும் அவர்களால் வழங்கப்படும் செல்வாக்கு அல்லது ஆதிக்கம் ஆகியவற்றின் நிதியியல் போன்றவற்றை குறிக்கிறது
   3) சர்வதேச அரங்கில் தலைவர்கள் மற்றும் நாட்டின் மதிப்பு போன்றவை
   4) வியாபாரத்தின் சட்ட கட்டமைப்பு மற்றும் அதன் நெகிழ்வுத்தன்மையின் அளவு போன்றவை
   5) நாட்டின் அரசியலமைப்பு
   6) சுங்கவரி மற்றும் இலவச வர்த்தகம் குறித்த நாட்டின் வெறியுறவுக் கொள்கை போன்றவை

---

2. **வியாபாரத்தின் மூன்று சுற்றுச் சூழல் காரணிகளை விளக்கு.**
   i. <u>உட்புறச் சூழல்</u>
   - ❖ உட்புறச் சூழல் என்பது, நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும்.
   - ❖ எனவே, இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும்.

   ii. <u>நுண்ணிய சூழல்</u>
   - ❖ வியாபாரத்தின் செயல் திறனை உடனடியாக பாதிக்கும், சுற்று சூழலாக இருக்கும் காரணிகளை இது குறிக்கிறது.

   iii. <u>பரந்த சூழல்</u>
   - ❖ வணிகத்தின் வெற்றி, பரந்த சூழலுக்கு பொருந்தக் கூடிய தன்மையை சார்ந்து இருக்கிறது.
   - ❖ ஏனென்றால், இவை கட்டுப்படுத்த முடியாத காரணிகள் ஆகும்.

---

3. **தொழில் நுட்ப சூழலை விளக்குக.**
   - ❖ தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பின் வளர்ச்சி உலகளாவிய சந்தையை உருவாக்கியுள்ளது.
   - ❖ போட்டியைத் தக்கவைத்துக்கொள்ள தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நுகர்வோரின் சிறப்புத் தேவைகளை சந்தை ஆராய்ச்சியின் மூலம் கண்டறிய முடிகிறது.
   - ❖ புதுமைகளை படைத்து வாடிக்கையாளர்களை கவர்தல் மூலம் வணிகத்தின் வாழ்வாதாரத்தை நிலை நாட்டிக் கொள்ள முடியும்.
   - ❖ வாடிக்கையாளரை நன்கு அறிந்து கொள்ள, தகவல் ஆய்ந்தெடுத்தல் (Data mining) மற்றும் தகவல் பகுப்பாய்வு (Data analytics) பயன்படுத்தப் படுகின்றன.

**கூடுதல் வினா**

**1. வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளில் மூன்றினைக் கூறுக.**

1) நிதி அளிப்பவர்கள் ( MAR 2020 )
2) சரக்கு விற்பனையாளர்கள்
3) சந்தையிடுகை இடைநிலையர்கள்
4) பொதுமக்கள்
5) வாடிக்கையாளர்கள்
6) போட்டியாளர்கள்

---

**ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )**

**1. வியாபாரத்தின் பரந்தச் சூழலின் பங்கு பற்றி விவரி ( ஏதேனும் 5 )**

1) **பொருளாதாரச் சூழல்**
- ஒரு நாட்டில் வணிகம் என்பது பொருளாதார அமைப்பு முறையின் அடிப்படையில் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
- வணிக சுழற்சிகள் தவிர்க்க முடியாதவை. பரந்த சுற்றுசூழலின் பல காரணிகளிடையே தொடர்புடையவை.

2) **சமூக கலாச்சாரச் சூழல்**
- வணிகம் சமூகத்தின் ஒரு அங்கமாகும்.
- சமூக சூழலானது, வணிகம் அமைந்துள்ள சமூகத்தின் மொத்தக் காரணிகளைக் குறிக்கிறது.
- சமுதாயத்தின் சமூக மற்றும் கலாச்சார சூழல் வணிகத்திணை பாதிக்கிறது.

3) **அரசியல் மற்றும் சட்ட சூழல்**
- ஒரு வணிகத்தை நடத்துவதற்கு தேவையான கட்டமைப்பினை, அரசியல் மற்றும் சட்டச் சூழலால் வழங்கப்படுகிறது.
- சட்டம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று காரணிகளும் வணிகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு வணிகத்தை பாதிக்கவும் செய்கின்றன.

4) **புவியியல் சார்ந்தச் சூழல்**
   i) இயற்கை வளங்கள் அதாவது கனிமம் மற்றும் எண்ணெய் அமைப்பதற்கான மூலப் பொருட்களாகும்.
   ii) வானிலை மற்றும் காலநிலை, நிலைமைகளின் மாற்றம், நீர் மற்றும் பிற இயற்கைவளங்கள் கிடைப்பது விவசாயத்துறைக்கு அவசியமாகும்.
   iii) இடவமைப்பிற்கு ஏற்ப, இடத்திற்கு இடம் தேவை மற்றும் நுகர்வு முறை வேறுபடலாம் இவை நிலப்பரப்பை தாக்கும் காரணிகளாகவும் இருக்கின்றன.

5) **தொழில் நுட்பம் சார்ந்த சூழல்**
- வாடிக்கையாளர்களின் மனநிறைவு வியாபாரத்திற்கு முக்கியமானது என்பதால், புதுமைகளை படைத்து வாடிக்கையாளர்களை கவர்தல் மூலம் வணிகத்தின் வாழ்வாதாரத்தை நிலை நாட்டிக் கொள்ள முடியும்.
- டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களை விளம்பரத்திற்கான ஒரு தளமாகவும், தயாரிப்புகளை விளம்பரப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

6) **உலகளாவிய சூழல்**
- தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சியுடன் வர்த்தக எல்லைகள், வேகமாக மறைந்து, புதிய உலகளாவிய சந்தை வளர்ந்து வருகிறது.
- இவை வர்த்தகத்தை பாதிக்கும் காரணிகளாக உள்ளது.

2. **வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்கு. ( ஏதேனும் 5 )**

( SEP 2020 , MAR 2023 )

1) **நிதி அளிப்பவர்கள்**
   - கடனீட்டுப் பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் வணிகம் சிறந்த முறையில் இயங்க, முக்கிய பங்கினை வகிக்கிறார்கள்.

2) **சரக்கு விற்பனையாளர்கள்**
   - எந்தவொரு அமைப்பிலும், மூலப்பொருட்கள் மற்றும் இதர உள்ளீடுகளின் வழங்குநர்கள், மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.
   - விநியோகிப்பாளரிடமிருந்து பெறப்படும் பொருட்கள் உற்பத்திகளில் தொடர்ச்சியான செயல்பாட்டை செயல்படுத்துகிறது.
   - நிறுவனங்கள் தங்கள் உற்பத்திக்கு தேவையான பொருட்களை பெறுவதற்கான ஒரே மூலமாக பெறாமல், ஒரு குழுவிடமிருந்து பெறுவதே சாலச் சிறந்தது.

3) **சந்தையிடுகை இடைநிலையர்கள்**
   - உற்பத்திபொருளை விற்பனை செய்யவும் நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதற்கும் விநியோகிப்பாளர்களின் உதவி தேவைப்படுகிறது.
   - இவர்கள் நிறுவனத்தையும், நுகர்வோரையும் இணைக்கும் பாலமாக திகழ்கின்றனர்.
   - மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் பொருள்களை, நுகர்வோரிடம் சேர்ப்பதை உறுதி செய்கின்றனர்.

4) **பொதுமக்கள்**
   - தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தும பின்வரும் குழுக்கள் பொது மக்கள் எனப்படுகிறது.
   - அவையாவன: ஊடகக் குழு, குடிமக்கள் செயல் குழு மற்றும் உள்ளூர் மக்கள் செயல் குழு. பொது மக்களிடம் ஒரு வியாபாரத்தை உருவாக்குவதற்கும் அல்லது அழிப்பதற்குமான திறமை உள்ளது.

5) **வாடிக்கையாளர்கள்**
   - வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார் மற்றும் அவர்களை சுற்றியே வணிகம் உள்ளது.
   - பல்வேறுபட்ட நுகர்வோரின் தேவையை புரிந்து கொள்வது, வணிகத்திற்கு மிகவும் அவசியமாகிறது.

6) **போட்டியாளர்கள்**
   - அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை, எதிர் கொள்ள வேண்டியுள்ளது.
   - எனவே, வணிக நிறுவனங்கள், போட்டியாளரைப் புரிந்து கொண்டு, போட்டியிடும் போக்கில் அவர்களின் தொழில் யுக்திகளை மாற்ற வேண்டியது அவசியமாகிறது.

---

# அத்தியாயம் 20 . தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகளை எழுதுக.**
   1) தாராளமயமாக்கல்
   2) தனியார் மயமாக்கல்
   3) உலகமயமாக்கல்

---

2. **தனியார்மயமாக்கல் என்றால் என்ன?** ( SEP 2020 , AUG 2021 , MAY 2022 , JUL 2022 )
   - தனியார்மயமாக்கல் என்பது, பொதுதுறை நிறுவனங்களின் உரிமைகளை, தனியார் நிறுவனங்களுக்கு மாற்றி தரும் நிகழ்வு அல்லது கொள்கையை குறிப்பிடுவதாகும்.

( அல்லது )

- தனியார்மயமாக்கல் என்பது பொதுதுறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

**3. தாராளமயமாக்கலின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை குறிப்பிடுக**

1) வேலையின்மையை அதிகரித்தல்
2) உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு
3) அயல் நாடுகளை சார்ந்திருத்தல்
4) சமநிலையற்ற வளர்ச்சி

**4. உலகமயமாக்கலின் ஏதேனும் இரண்டு நன்மையை எழுதுக** ( JUN 2023 )

1) வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல்
2) சந்தை விரிவாக்கம்
3) தொழில்நுட்ப வளர்ச்சி
4) கற்றோரின் புலம்பெயர்வை குறைத்தல்

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

**1. தாராளமயமாக்கல் என்றால் என்ன?** ( AUG 2021 )

- தாராளமயமாக்கல் என்பது, வணிக நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களை அல்லது விதிகளை, பொருளாதாரத்திலும், சந்தை நல்ல நிலையை அடையவும், அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.

**2. உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.** ( SEP 2020 )

1) குறைந்த இயக்கம் செலவுகளின் அடக்கம் மற்றும் புதிய மூல பொருட்கள் மற்றும் கூடுதல் சந்தை மூலம், பெரிய நிறுவனங்கள் போட்டி திறனை பெறுகின்றன.
2) பன்னாட்டு நிறுவனங்கள் பொருட்களை தயாரிக்கவும், வாங்கவும் மற்றும் பொருட்களை விற்பனை செய்யவும் முடிகின்றது.
3) உலகமயமாக்கல், நுகர்வோர் பொருட்களின் சந்தையை வெகுவாக (ஏற்றத்துடன்) பெருக்கிட உதவும் வாய்ப்பை உருவாக்கலாம்.
4) வெளிநாட்டு நிறுவனங்களின் வருகை, உள்ளபடி பொருளாதார வளர்ச்சியையும் மற்றும் வேலை வாய்ப்பையும் உருவாக்கலாம்.
5) உலகமயமாக்கல் என்பது, தொழில் நுட்ப முன்னேற்றம், உயர் உற்பத்தி நுட்பங்கள் மற்றும் தடையற்ற தொழில் விரிவாக்கம் போன்ற பல நன்மைகளை நல்கிட வழி வகுத்தது.

**3. புதிய பொருளாதார கொள்கை பற்றி ஒரு சிறிய குறிப்பை தருக.**

( MAY 2022 , JUN 2023 )

- வணிகம் மற்றும் வரிவிதிப்புத் தொடர்பான பொது உடன்பாடுகள் குறித்து, டங்கன் கொடுத்த, வரைவுத் திட்டம், புதிய பொருளாதார கொள்கைக்கு அடித்தளமாக விளங்கியது.
- ஆர்தர் டங்கன் (1932-2005) 22,000 பக்கங்கள் கொண்ட ஒரு வரைவு ஆவனத்தை, உலக வர்த்தக அமைப்பிற்கு சமர்ப்பித்தார்.
- அதன் அடிப்படையில் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகள், தங்களுக்குறிய புதிய பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்துக் கொண்டனர்.
- 1991 ஆம் ஆண்டு இந்தியாவில் செயல்படுத்தப்பட்ட, புதிய பொருளாதாரக் கொள்கை, டங்களின் வரைவுத் திட்டத்தை ஒட்டியே அமைந்தது.
- புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகள் : தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் ; உலகமயமாக்கல் ஆகும்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக. ( ஏதேனும் 5 )**

**நன்மைகள்** ( SEP 2020 ) ( JUL 2022 )

1) **வெளி நாட்டு முதலீடுகள் அதிகரிப்பு**
   - ❖ தாராளமயமாக்களினால், அதிக அளவில் வெளிநாடுகளிலிருந்து, கவர்ச்சிகரமான முதலீடுகளை பெற முடிகின்றது.
   - ❖ அம்முதலீடுகள் மூலமாக, உள்நாட்டில் மூலதனத்தை பெருக்குவதோடு, அதன் பொருளாதாரத்தை பன்மடங்கு பெருக்குவதற்கு உதவுகிறது.

2) **அந்நியசெலாவணி இருப்பு அதிகரிப்பு**
   - ❖ வெளி நாட்டு முதலீட்டிற்கு, அந்நிய செலவாணிக்குமான கட்டுப்பாடுகளை தளர்த்தி மூலதனத்தை எளிதில் பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது.

3) **நுகர்வு அதிகரிப்பு**
   - ❖ தாராளமயமாக்களினால் ஒரு நாட்டில் பயன்பாட்டிற்கு அதிக அளவிலான பொருட்களை கிடைக்கவும் அதிக உற்பத்திக்கும் வழிவகை செய்கிறது.

4) **விலை கட்டுப்பாடு**
   - ❖ ஏற்றுமதி இறக்குமதி தீர்வைகளை நீக்குவதால், நுகர்வோருக்கு குறைந்த விலைக்கு பொருட்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
   - ❖ இந்நிலையில், தாராளமயமாக்கலினால் இறக்குமதி நாடுகளுக்கு நன்மை விளைவிக்கிறது.

5) **வெளி நாட்டில் பெறும் கடன்களை குறைக்கிறது**
   - ❖ தாராளமயமாக்களின் மூலம், வெளி நாட்டுக் கடன்களை ஈர்ப்பதன் மூலம், வெளிநாட்டு வர்த்தகக் கடன்களை வாங்கும் வாய்ப்பு குறைக்கிறது.

**குறைபாடுகள்** ( AUG 2021 )

1) **வேலையின்மையை அதிகரித்தல்**
   - ❖ வர்த்தக தாராளமயமாக்கல் பெரும்பாலும் பொருளாதாரத்தின் சமநிலைக்கு வழிவகுப்பதால், சிறு தொழிகளில், சில வளர்ந்தும், சில சிறு தொழில்களில் சரிவும் ஏற்படுகிறது.
   - ❖ இதனால், சில தொழிற்ச்சாலைகள் மூடுகின்ற நிலையால், வேலையில்லா நிலை உருவாகிறது.

2) **உள்நாட்டு தொழில் அலகுகளின் இழப்பு**
   - ❖ தராளமயமாக்கல் கோட்பாட்டில், குறைந்த நுழைவுக்கட்டுப்பாடுகளுடன், வெளிநாட்டு தொழில்கள் பல நாடுகளில் ஊடுருவ சாத்தியம் அதிகம் உள்ளது.
   - ❖ இது உள்நாட்டு தொழில்களுக்கு அச்சுறுத்துவதுடன் மற்றும் போட்டியை தோற்று வித்து, உள்நாட்டு தொழில், அடியோடு ஒழிக்கும் சதியாகவும் கருதப்படுகிறது.

3) **அயல்நாடுகளை சார்ந்ததிருத்தலை பெருக்கும்**
   - ❖ வர்த்தக தாராளமயமாக்கல் என்பது, பலம் பொருந்திய பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து, அதிக போட்டிகளை எதிர்கொள்ளும் சந்தையை, தன் கட்டுபாட்டிற்கு கீழ் கொண்டுவரும் நிலையை உருவாக்க நேரிடலாம்.

4) **சமநிலையற்ற வளர்ச்சி**
   - ❖ வர்த்தக தாராளமயமாக்கல், பல வளரும் நாடுகளின் பொருளாதாரத்துக்கு, சேதம் விளைவிப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது.
   - ❖ இது சுதந்திர வர்த்தகத்திற்கு எதிராக போட்டியை உருவாக்க வழி கோலுகிறது.
   - ❖ தாராளமயமாக்கல், வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் அதிக பலனை விளைவித்து வருகிறது.
   - ❖ இதனால், அயல்நாடுகளை சார்ந்திருக்கும் சூழ்நிலையை அதிகப்படுத்துகிறது.

2. **எல்பிஜி (LPG) யின் சிறப்பு அம்சங்களை விளக்குக.** ( ஏதேனும் 5 ) ( JUN 2023 )

i) புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பங்கள் அறிமுகம் செய்வது.

ii) வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்து இழுத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக உதவியது.

iii) முன்னுரிமை மற்றும் வணிகத்தடை சட்டம் 1969 திருத்தியமைக்கப்பட்டது.

iv) கட்டுபாடுகள் அகற்றுதல்

v) பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்த உதவுவது.

vi) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவருவதற்கான வழிமுறைகளை கையாள உதவுவது

vii) வரிகளை மறுசீரமைப்பு செய்தல்

viii) உரிமம் வழங்கும் முறையை அகற்றிட வழிவகுத்து ரத்து செய்தல்.

# அலகு 8 . சரக்கு விற்பனைச் சட்டம் 1930 & மாற்றுமுறை ஆவணச் சட்ட்ம் 1881

## அத்தியாயம் 21 . சரக்கு விற்பனைச் சட்டம் 1930

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **சரக்கு விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன?** ( MAR 2023 )

- ❖ எந்த ஒப்பந்தத்தின் வாயிலாக, பொருளை விற்பவர், வாங்குநருக்கு விலை என்ற மறுபயன் பெற்றுக் கொண்டு, பொருளின் மீதான உரிமையை, மாற்றித் தருகிறாரோ அதுவே சரக்கு விற்பனை ஒப்பந்தமாகும்.

2. **சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிடுக.**

1) இருதரப்பினர்
2) பொருளின் மீதான உரிமை மாற்றம்
3) சரக்கு / பொருள்
4) விலை
5) விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு

3. **சரக்கு என்றால் என்ன?**

- ❖ அனைத்து அசையும் சொத்துகளான பங்குகள், பயிர்கள், மற்றும் கண்ணுக்கு புலனாகாத இனங்களான நற்பெயர், காப்புரிமை, பதிப்புரிமை, வணிகக்குறிகள் , வியாபார சூத்திரம் போன்றவை சரக்கு என்ற சொல்லில் அடங்கும்.

4. **வரு நிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன?** ( MAY 2022 , JUN 2023 )

- ❖ இது ஒருவகை எதிர்கால சரக்கு ஆகும்.
- ❖ இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது.

### மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **தற்போதைய / இருக்கின்ற சரக்கு என்பதை விவாதிக்க.** ( AUG 2021 , MAY 2022 )

- ❖ ஒப்பந்தம் செய்யும் போது, விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற ( தற்போதைய ) சரக்கு ஆகும்.
- ❖ விற்பனை செய்ய முகவரின் கைவசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும், அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் இருக்கின்ற சரக்கு எனப்படும்.

2. **பொருள் விற்பனை ஒப்பந்தம் உட்கிடை நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகளை விவாதிக்க.**

**உட்கிடை நிபந்தனைகள்**

1) **உரிமை குறித்த நிபந்தனை**
   - பொருளை விற்பவர் அந்தக் குறிப்பிட்டப் பொருளை விற்க உரிமை கொண்டவர்
   - வாங்குபவர் பொருளை விற்பவர் , அந்த பொருளை விற்தற்கு உரிமையுள்ளவர் என்று கருதிக் கொள்ளாலாம்

2) **விவரிப்பு குறித்த நிபந்தனை**
   - விவரிப்பு மூலம் விற்பனை செய்யப்பட்ட சரக்கு விவரித்தப்படியே இருக்க வேண்டும்

3) **தகுதி அல்லது தன்மை குறித்த நிபந்தனை**
   - சரக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கிற்கு ஏற்ற தன்மையுடையதாகவோ அல்லது பொருந்தமானதாகவோ இருக்க வேண்டும் என்ற உட்கிடை நிபந்தனை ஏதும் இல்லை

4) **உடல் ஆரோக்கியம் தொடர்பான நிபந்தனை**
   - உண்ணக்கூடிய பொருட்களைப் பொறுத்தவரையில் அவைகள் விற்பதற்கு உகந்ததாக இருப்பதுடன் வாங்குபவரின் உடல் நலத்திற்கு எவ்விதக்கேடும் விளைவிக்காத பொருளாக இருக்க வேண்டும்.

**உட்கிடை நம்புறுதிகள்**

1) **இடையூறற்ற உரிமை**
   - தான் வைத்திருக்கும் சரக்கைப் பிறர் இடையூறு இன்றி முழுமையாக அனுபவிக்க முடியும் என்ற நம்புறுதி உடன்பாட்டில் உண்டு.
   - வேறு யாரேனும் தன்னை விட சிறந்த உரிமை இருப்பதாகக் கூறிக்கொண்டு பின்னர் சரக்கு உரிமைக்கு இடையூறு விளைவித்தால், விற்குநரிடம் வாங்குனர் நட்டஈடு பெறும் உரிமை பெற்றவர்.

2) **வில்லங்கம் பற்றிய நம்புறுதி**
   - தான் வாங்கிய சரக்கு மூன்றாம் நபரின் பிணையத்திற்கு உட்பட்டதல்ல என்ற வில்லங்கம் பற்றிய நம்புறுதி ,விற்பனை ஒப்பந்தத்தில் உண்டு.

3) **அபாயமுள்ள பொருள் சார்ந்த நம்புறுதி**
   - தான் விற்கும் பொருட்கள் அபாயமானவை அல்லது வாங்குநருக்கு அபாயத்தை விளைவிக்கும் என விற்பவர் அறிந்திருந்தால், வாங்குநரிடம் அதுகுறித்து எச்சரிக்கை செய்யவேண்டும்.
   - இல்லையெனில் வாங்குனர்க்கு விற்கப்பட்ட பொருளால் ஏற்படும் விபத்திற்கு நட்டஈடு தரவேண்டும்.

---

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக.** ( AUG 2021 )

1) **இருதரப்பினர்** ( JUL 2022 , MAR 2023 )
   - சரக்கு விற்பனைச் சட்டத்தில் இருதரப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.
   - அவர்களில் ஒருவர் வாங்குனர், இன்னொருவர் விற்பனையாளர்.
   - ஒரு தனி நபர் தனக்கே பொருளை எடுத்துக் கொள்வதை விற்பனை என்ற சொல் குறிக்காது.

2) **பொருளின் மீதான உரிமை மாற்றம்**
   - விற்பனை என்று அழைக்க, விற்பவர் பொருளின் மீதான உரிமையை வாங்குபவருக்கு மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தரவேண்டும்.
   - பொருளின் உடைமையை மாற்றுவது என்ற செயல், விற்பனை ஆகாது.

3) **சரக்கு / பொருள்**
   - சரக்கில் அனைத்து அசையும் சொத்துகளான பங்குகள், பயிர்கள் மற்றும் கண்ணுக்குப் புலனாகாத இனங்களான நற்பெயர், காப்புரிமை, பதிப்புரிமை, வணிகக்குறிகள், வியாபார சூத்திரம் போன்றவைகளும் உள் அடங்கும்.

4) **<u>விலை</u>**

- ❖ பொருளின் விற்பனைக்கு மறுபயனே விலை ஆகும்.
- ❖ பொருளைப் பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்துக் கொள்வது விலையாகாது.
- ❖ பொருளைப் பகுதியாக பொருளுக்கும், மீதப் பகுதியாக விலைக்குமே மாற்றிக் கொள்ளும்போது, விலைக்கு மாற்றிய பகுதி மட்டும் விற்பனை நடவடிக்கை ஆகும்.

5) **<u>விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு</u>**

- ❖ விற்பனை ஒப்பந்தம் என்ற சொல்லில் விற்பனையும் மற்றும் விற்பனை உடன்பாடும் உள்ளடங்கியது.
- ❖ பொருளின் உரிமையை, உடனே மாற்றிவிடக் கூடிய நடவடிக்கைகள் விற்பனை ஆகும்.
- ❖ பொருளின் உரிமையை, எதிர்காலத்தில் மாற்றும் நடவடிக்கைகளுக்கு விற்பனை உடன்பாட்டு நடவடிக்கைகள் ஆகும்.

2. **நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.** ( SEP 2020 , MAY 2022 , JUN 2023 )

| வ.எண் | அடிப்படை | நிபந்தனைகள் | நம்புறுதிகள் |
|---|---|---|---|
| 1 | பொருள் | ஒப்பந்தத்தின் கருப்பொருளாகத் திகழ்வது | ஒப்பந்தத்திற்கு துணையாக இருக்கிறது |
| 2 | முக்கியத்துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது, ஒப்பந்தத்தை மீறுவதாக கொள்ளப்படுகிறது | நம்புறுதியை மீறுவது, ஒப்பந்தத்தினை மீறுவதற்கு ஒப்பாகாது |
| 3 | உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல், உரிமை மாற்றம் நிகழ முடியாது | நம்புறுதியை நிறைவேற்றாமல், உரிமை மாற்றம் நிகழ முடியும் |
| 4 | பரிகாரம் / தீர்வு | நிபந்தனை மீறுவதனால், ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தத்தை நீக்கிகொள்வதுடன், நட்ட ஈடு கோரும் உரிமயைப் பெறுகிறார் | நம்புறுதியை மீறுவதனால், ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர், நட்ட ஈடு கோரும் உரிமையை மட்டும் பெறுகிறார் |

## <u>அத்தியாயம் 22 . மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881</u>

### <u>இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )</u>

1. **மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?** ( AUG 2021 )

- ❖ கே .சி. வில்ஸ் என்பவரின் கருத்துப்படி “ஒருவர் நன்னம்பிக்கையில் மற்றும் மறுபயன் கருதி, தான் யாரிடமிருந்து பெற்றாரோ அவரின் உரிமையில் பழுது இருந்தபோதிலும் எந்த முறையாவணத்தின் மீதான உரிமையை பெறுகிறாரோ அந்த ஆவணமே மாற்றுமுறை ஆவணம்” ஆகும்.

( அல்லது )

- ❖ மாற்றுமுறை ஆவணம் என்பது, ஒரு குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்ட தொகைக்கு உரிமை வழங்குவதும் மற்றும் மேலெழுதுதல் அல்லது கையில் கொடுப்பது மூலம் ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு அதன் உரிமையை மாற்ற ஏதுவான ஆவணம் ஆகும்.

2. **கடனுறுதிச் சீட்டின் சிறப்பு இயல்புகளில் இரண்டினை குறிப்பிடுக.**

   1. இது எழுதப்பட்டிருக்க வேண்டும்
   2. உறுதிமொழி, நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்
   3. வரைபவர் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்
   4. வரைபவரைப் பற்றிய விவரங்கள் தெளிவாக இருக்க வேண்டும்

3. **காசோலை என்றால் என்ன?**

- ❖ மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 - ன் பிரிவு 6 - ன் படி வெளிப்படையாக கேட்டாலன்றி, வேறு எப்போதும் பணம் தரக்கூடாது என, வாடிக்கையளரால் வங்கியின் மீது எழுதப்படும் மாற்றுச்சீட்டே காசோலை எனப்படும்.

> வெளிப்படையாக கேட்டாலன்றி வேறு எப்போதும் பணம் தரக்கூடாது என வாடிக்கையளரால் வங்கியின் மீது எழுதப்படும் மாற்றுச்சீட்டே காசோலை எனப்படும்.

## கூடுதல் வினா

1. **எழுதப்படிக்கத் தெரியாதவர் ஒரு மாற்றுமுறை ஆவணத்தை எவ்வாறு மேலெழுதுவார்?** ( MAR 2020 )

- ❖ எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரல் குறி இட்டு மாற்றுமுறை ஆவணத்தை மேலெழுதுவார்.
- ❖ அவர் இட்ட பெருவிரல் குறியை ஒருவர் சான்று கூறுவார்.
- ❖ உறுதி கூறுபவர் முழுமுகவரியைத் தெரிவித்தல் அவசியம்.

2. **காசோலை - வரையறுக்கவும்.** ( SEP 2020 )

- ❖ மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881-ன் பிரிவு 6-ன் படி வெளிப்படையாக கேட்டாலன்றி வேறு எப்போதும் பணம் தரக்கூடாது என வாடிக்கையளரால் வங்கியின்மீது எழுதப்படும் மாற்றுச்சீட்டே காசோலை எனப்படும்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **மாற்றுமுறை மற்றும் உரிமைமாற்றம் இவைகளை வேறுபடுத்துக.** (ஏதேனும் 3 )


( MAR 2023 )

| வ. எண் | வேறுபாடுகள் | மாற்றுமுறைத் தன்மை | உரிமைமாற்றம் |
|---|---|---|---|
| 1 | சட்டமுறை உரிமை மாற்றம் | உரிமையை மேலெழுதி தருவதன் மூலமாகவோ அல்லது கொணர்பவர் மாற்றுச்சீட்டை வேறுவகையில் ஒப்படைதன் மூலமாகவோ உரிமை மாற்றம் செய்யமுடியும் | உரிமை மாற்றும் சட்டத்தின் கீழ், வரையறுக்கப்பட்ட சடங்கு முறைப்படி உரிமையை மாற்ற வேண்டும் |
| 2 | அறிவிப்பு | மாற்றுமுறை ஆவணத்தைக் கொண்ட நபர், கடனாளியிடமிருந்து பணத்தை செலுத்தி கேட்க தேவையில்லை | உரிமை மாற்றம் பெற்றவர், கடனாளியிடமிருந்து தன்னிடம் கடன் தொகையை செலுத்த அறிவிக்க வேண்டும் |
| 3 | உரிமையின் தன்மை | உரிமை மாற்றத்தை மறுபயன் கொடுத்து நன்நம்பிக்கையுடன் ஆவணம் ஒன்றை பெறுபவரின் உரிமை, அதனை தன்னிடம் மாற்றி கொடுத்த நபரின் உரிமையை விட சிறந்த உரிமையாக கருதப்படுகிறது | உரிமை மாற்றத்தை பொறுத்தவரை மாற்றுபவருக்கு எவ்வளவு உரிமை உள்ளதோ அதே அளவு உரிமை மாற்றப் பெறுபவருக்கும் மாறும் |
| 4 | மறுபயன் | இதில் மறுபயன் இருப்பதாக கொள்ளப்படுகிறது | உரிமை மாற்றம் பெற்றவர், பறுபயனை மெய்ப்பிக்க வேண்டும் |

2. **மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. ( ஏதேனும் 3 )** ( JUN 2023 )

1) மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.
2) மாற்றுச்சீட்டில் “கொடுக்க” என்ற கட்டளை இருக்க வேண்டும்.
3) கட்டளை நிபந்தனை அற்றதாக இருக்க வேண்டும்.
4) மாற்றுச்சீட்டை விடுநர் அல்லது எழுதுபவர் கையொப்பம் இடவேண்டும்.
5) தொகை இவ்வளவு தருக என்பதை திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டும்.
6) பணம் யாருக்குச் செலுத்தப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக குறிப்பிடவேண்டும்.
7) குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு வருவாய் தலை ஒட்டப்பட்டிருக்க வேண்டும்

3. **இரண்டு வகை கீறல்களின் வரைபடைத்தை வரைக.**




## கூடுதல் வினா

1. **மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட இடம் போதவில்லையென்றால் எவ்வாறு மேலெழுதலாம்?** ( MAR 2020 )

❖ மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட போதிய இடம் இல்லையானால், ஒரு சிறு ஒட்டுத்தாளை ஆவணத்துடன் சேர்த்து அதில் மேலெழுத்து இடலாம்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக.** ( ஏதேனும் 5 )

| வ.எண் | வேறுபாடு | மாற்றுச் சீட்டு | காசோலை |
|---|---|---|---|
| 1 | வரையப்படுவது | ஒரு குறிபிட்ட நபர் மீது வரையப்படுவது | ஒரு குறிபிட்ட வங்கியர் மீது வரையப்படுவது |
| 2 | செலுத்தப்படுவது | கேட்டவுடனோ அல்லது குறிப்பிட்ட கால முதிர்வின் போதோ தருமாறு எழுதப்படுவது | எப்போதும் கேட்டவுடனே பணம் கொடுக்குமாறு எழுதப்படுவது |
| 3 | ஏற்பு | எழுதப்பெற்றவர் ஏற்க வேண்டும் | இதனை ஏற்பு செய்திட தேவையில்லை |
| 4 | சலுகை நாள் | மூன்று சலுகை நாட்கள் வழங்கப்படுகின்றது | சலுகை நாட்கள் தரப்படுவதில்லை |
| 5 | படிகள் | அந்நிய மாற்றுச் சீட்டு மூன்று படிகள் தயாரிக்கப்படுகிறது | காசோலைக்கு பணம் பெற படிகள் எடுக்க வேண்டிய அவசியமில்லை |

| | | | |
|---|---|---|---|
| 6 | வருவாய்தலை | இதில் வருவாய்தலை அதன் மதிப்பிற்கு ஏற்ப ஒட்ட வேண்டும் | இதில் வருவாய்தலை ஒட்ட வேண்டியதில்லை |
| 7 | செலாவணி | இதனை எந்நாட்டு செலாவணியிலும் எழுதலாம் | இதனை உள்நாட்டு செலாவணியில் மட்டுமே எழுதமுடியும் |
| 8 | கீறல் | இதனை கீறலிட முடியாது | இதனை கீறலிட முடியும் |

---

**2. காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக.** ( ஏதேனும் 5 ) ( SEP 2020 , MAR 2023 )

1) **காசோலை எழுத்து வடிவில் இருக்க வேண்டும்**
   - ❖ காசோலை எழுத்து வடிவில் வரையப்பட்டு இருக்கவேண்டும்.
   - ❖ ஆனால் சட்டமோ அது பென்சிலால் கூட எழுத தடைவிதிக்கவில்லை.
   - ❖ என்றாலும், மோசடி செய்யும் வாய்ப்பைக் கருதி, வங்கியாளர்கள் தாங்களே காசோலையை அச்சிட்டு தருகிறார்கள்.

2) **நிபந்தனையற்ற ஆணை**
   - ❖ காசோலையில் வாடிக்கையாளர் பணம் “கொடுக்க” என கட்டளை பிறப்பிக்க வேண்டும். தயவு செய்து என்ற வார்த்தை இருந்தாலும் காசோலை செல்லும்.
   - ❖ ஆனால் கட்டளை, நிபந்தனைகள் அற்றதாக இருக்கவேண்டும்.

3) **குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்படுதல்**
   - ❖ காசோலையை ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுத முடியும். அதுவும் ஒரு வங்கியின் எந்தக் கிளையில் வாடிக்கையர் பணம் வைத்துள்ளாரோ சம்மந்தப்பட்ட கிளையில் பணம் கொடுக்குமாறு எழுதவேண்டும்.
   - ❖ மின்னணு மற்றும் ஒருங்கிணைந்த வங்கி முறை நடைமுறையில் இருக்கும் இந்நாளில், எந்த கிளையில் வேண்டுமென்றாலும் பணம் பெறமுடியும்.
   - ❖ ஆனால், ஆணையிடுவது ஒரு குறிப்பிட்ட வங்கியின் கிளையைதான், என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

4) **நிச்சயமான ஒரு தொகை**
   - ❖ வங்கியரை ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும் படி ஆணை இட வேண்டும்.
   - ❖ குறிப்பிட்ட அளவு பிணையம் வெளியிட ஆணை பிறப்பிக்க முடியாது.

5) **பணம் பெறுபவரைத் திட்ட வட்டமாக குறிப்பிட வேண்டும்**
   - ❖ காசோலையை ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவரது ஆணை பெற்றவருக்கு தரும்படி எழுத வேண்டும் அல்லது கொணர்பவர் காசோலை எனில், கொணர்பவருக்கு பணம் தருமாறு ஆணையிடலாம்.

6) **கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது**
   - ❖ காசோலையை கேட்டவுடன் தருமாறு எழுதப்பட வேண்டும்.
   - ❖ எப்போது தர வேண்டும் என்ற நாள் குறிப்பிடப்பட்டிருப்பின், கேட்டவுடன் கொடுக்க என்ற கட்டளை தேவையற்றது.

7) **எழுதுபவர் கையொப்பம்**
   - ❖ எழுதுபவர் கையொப்பம் இடவேண்டும்.
   - ❖ வங்கியருக்கு ஐயம் ஏற்படின், அவர் கணக்கு ஆரம்பித்த பொழுது கொடுத்திருக்கும் மாதிரி கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்படும்.

3. **செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளை கூறுக.** ( ஏதேனும் 5 )

1) மாற்றுமுறை ஆவணத்தின் முகப்பில் மேலெழுத வேண்டும். மையில் எழுதுவதே நல்லது. பென்சிலால் எழுதுவதை தவிர்க்கலாம்.
2) மேலெழுதுபவர் தாம் இயல்பாக கையொப்பம் இடுவது போன்றே மேலெழுத வேண்டும்.
3) மேலெழுத்தில் பெயர் எழுதப்பட்டபடியே தான், கையொப்பபமும் இருக்க வேண்டும். பெயர் தவறாக எழுதியிருப்பின், கையெழுத்தும் அத்தவறான எழுத்துக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
4) ஆவணத்தின் முழுமதிப்பிற்கும், மேலெழுதப்படல் வேண்டும். மதிப்பின் ஒரு பகுதிக்கு மேலெழுத்து செய்யப்பட்டிருப்பின் அது செல்லாது.
5) எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரல் குறி இட்டால் போதுமானது. அவர் இட்ட பெருவிரல் குறியை ஒருவர் சான்று கூறல் வேண்டும்.
6) மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுத்திட போதிய இடம் இல்லையானால், ஒரு சிறு ஒட்டுத்தாளை ஆவணத்துடன் சேர்த்து அதில் மேலெழுத்து இடலாம்.
7) மேலெழுத்து ஆவணத்தில் உள்ள வரிசைப்படி மேலெழுதப்பட்டதாக கொள்ளப்படுகிறது.
8) பெரிய எழுத்தில் கையொப்பம் இடுவது, முறையான மேலெழுத்து ஆகாது.

---

# அலகு 9 . தொழில் முனைவு மேம்பாடு

## அத்தியாயம் 23 . தொழில் முனைவுக்கான அடிப்படைக்கூறுகள்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் இரண்டினை குறிப்பிடுக.** ( JUN 2023 )

1) தொழில் துணிகர உணர்வு
2) தன்னம்பிக்கை
3) நெகிழ்வு தன்மை
4) புதுமை புகுத்தல்
5) கடின உழைப்பு

---

2. **தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக.** ( ஏதேனும் 2 )

1) திட்டம் தீட்டல்
2) அமைப்பு பணி
3) கட்டளை இடல்
4) கட்டுபாடு காத்தல்
5) ஒருங்கிணைப்பு

---

3. **தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை குறிப்பிடுக.** ( ஏதேனும் 2 )

i) வாய்ப்புகளை கண்டறிதல்
ii) தொழிலின் நோக்கத்தினை தீர்மானித்தல்
iii) ஆழ்ந்த பகுப்பாய்வு
iv) தொழில் நிறுமத்தின் அமைப்பு முறையினை தேர்வு செய்வது
v) தொழில் துவங்கும் சடங்குமுறைகள்
vi) தொழில் திட்டம் தயாரித்த செயல்
vii) நிதி திரட்டுதல்

4. **மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் சிக்கல்களை எழுதுக.** ( AUG 2021 ) ( MAY 2022 )

1) நிதிப்பிரச்சனை
2) இயக்கத்தடை
3) கல்வியறிவு இன்மை
4) ஆதரவு இன்மை
5) கடும் போட்டி
6) உணர்ச்சி வயப்படல்
7) போதிய விவரமின்மை
8) சார்ந்து வாழும் கலாச்சாரம்

---

**கூடுதல் வினா**

1. **தொழில் முனைபவருக்கு பகுப்பாய்வுத் திறன் ஏன் அவசியம்?** ( MAR 2020 )

- தொழில் முனைபவர் பாரபட்சமின்றி விருப்பு வெறுப்புகளை தவிர்த்து சமநிலையில் முழு மனதுடன் மேற்கொள்ள வேண்டும்.
- அவசர நிலையில் எடுக்கும் முடிவுகள் இலக்கை அடைய வழிவகுக்காது.
- எனவே எந்த ஒரு முடிவை மேற்கொண்டாலும் சம்மந்தப்பட்ட காரணிகளை சீர்தூக்கி பகுத்தாய்ந்து ஒரு தெள்ளிய முடிவை மேற்கொள்ள வேண்டும்.
- எனவே ஓர் நல்ல பகுத்தறிபவராக தொழில் முனைவோர் இருத்தல் வேண்டும்

---

**மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )**

1. **தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் இவர்களை வேறுபடுத்தி காட்டுக.**

( AUG 2021 , JUL 2022 , JUNE 2023 ) (ஏதேனும் 3 )

| வ. எண் | அடிப்படை | தொழில் முனைபவர் | மேலாளர் |
|---|---|---|---|
| 1 | நோக்கு | ஒரு அமைப்பினை தேர்ந்தெடுத்து தன்னுடைய வினையை துவக்குவது | துவக்கிய வினையில், செவ்வனே பணியாற்றுவது இவரின் நோக்கு |
| 2 | தகுநிலை | தொழில் முனைபவர் தான் துவக்கிய அமைப்பின் உரிமையாளர் | மேலாளர் ஊதியம் பெறும் உழைப்பாளி |
| 3 | இடர் ஏற்றல் | தான் துவக்கிய வினையினால் ஏற்படும் இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மையை தாங்குபவர் | வினையின் இடரில் பங்கு பெறுவது இல்லை. |
| 4 | வெகுமதி | இவர்கள் தன்னுடைய இடர் ஏற்பிற்கு வெகுமதியாக இலாபத்தினை பெறுகின்றனர் | இவர்கள் இலாபத்தில் பங்கு பெறுவது இல்லை. ஊதியம், மேலூதியம், படிகள், ஊக்க ஊதியம் பெறுபவர்கள் |
| 5 | ஆற்றல் | இவர்கள் படைப்பாற்றல், உள்ளுணர்வு மற்றும் எதையாவது புதியதாக செய்ய வேண்டும் என்ற உந்துதல் பெற்றவர்கள் | இவர்கள் நல்ல கோட்பாட்டு அறிவும், மனித உறவு திறனும் பெற்றவர்களாக இருக்க வேண்டும் |

2. **தொழில் முனைவோரின் வணிகப் பணிகளைக் குறிப்பிடுக.** ( ஏதேனும் 3 )
   a) உற்பத்தி அல்லது தயாரிப்பு பணி
   b) சந்தையிடுகை
   c) கணக்கியல் பணி
   d) நிதிசார் பணி
   e) மனிதவள பணிகள்

3. **தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை கூறுக.** ( ஏதேனும் 3 )
   1) வாய்ப்புகளை கண்டறிதல்
   2) தொழிலின் நோக்கத்தினை தீர்மானித்தல்
   3) ஆழ்ந்த பகுப்பாய்வு
   4) தொழில் நிறுமத்தின் அமைப்பு முறையினை தேர்வு செய்வது
   5) தொழில் துவங்கும் சடங்குமுறைகள்
   6) தொழில் திட்டம் தயாரித்த செயல்
   7) நிதி திரட்டுதல்
   8) கருவிகலன்கள் மற்றும் கச்சா பொருட்கள் பெறுதல்

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெருவிடை வினாக்கள் )

1. **தொழில் முனைவோரின் சிறப்பு இயல்புகள் யாவை?** ( ஏதேனும் 5 ) ( MAY 2022 )
   1) **தொழில் துணிகர உணர்வு**
      - தொழில் முனைபவர், தான் மேற்கொண்ட தொழிலில் ஏற்படும் இடர்களை, துணிவுடன் எதிர்கொள்ளவேண்டும்.
   2) **தன்னம்பிக்கை**
      - தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படுத்துகிறது.
      - எதிர்மறை உணர்வுகள் ஏற்பட்டாலும், இந்த வினையை கைவிடேன், வெற்றி ஒன்றே இலக்கு என தொழில் முனைபவர் தொழில் வினையில் பயணிக்க வேண்டும்.
   3) **நெகிழ்வு தன்மை**
      - மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தொழில் முனைபவன், தன் முடிவை அல்லது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளும் நெகிழ்வு தன்மையை கடைப்பிடிக்க வேண்டும்.
   4) **புதுமை புகுத்தல்**
      - தொழில் முனைபவர் புதுமை படைப்பாளராக இருந்திட வேண்டும்.
      - ஏதேனும் ஒரு புதுமையைப் புகுத்தி, சந்தையில் நிரந்தரமான இடத்தை பிடிக்க வேண்டும்.
   5) **வளத்தை திரட்டுபவர்**
      - தான் மேற்கொண்ட செயலை செயலாக்கிட, தொழில் முனைபவர், புலனாகக்கூடிய மற்றும் புலனாகாத உட்பொருட்களையும் ஒன்றிணைப்பவர் ஆவார்.
   6) **கடின உழைப்பு**
      - தொழில் முனைபவர், தான் மேற்கொண்ட செயலின் நோக்கத்தை அடைய, அரும்பாடு படவேண்டும்.
      - தன்னம்பிக்கை மற்றும் முயற்சி உடையவராக இருத்தல் வேண்டும்.
   7) **தொலைநோக்கு பார்வை**
      - தொழில் முனைபவர், ஒரு நல்ல முன் கணிப்பாளராக இருத்தல் வேண்டும்.
      - நுகர்வோர்களின் ஆதரவு, பொருளாதார சூழ்நிலையின் மாற்றம், தொழில் நுட்பமாற்றம் மற்றும் போட்டி சூழ்நிலை பற்றி சிந்திக்க வேண்டும்.

2. **தொழில் முனைவோர் மற்றும் அகத்தொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக.** ( ஏதேனும் 5 )

| வ. எண் | அடிப்படை | தொழில் முனைபவர் | அகத் தொழில் முனைபவர் |
|---|---|---|---|
| 1 | சிந்தனை | இவர் ஒரு தடையற்ற சிந்தனைவாதி | இவர் தன்னிச்சையான சிந்தனை வாதி |
| 2 | சார்பு நிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்து இருப்பவர் |
| 3 | நிதி திரட்டல் | தன் சொந்த முயற்சியில் தொழிலுக்கான நிதியை திரட்ட வேண்டும் | நிதி திரட்டும் பொறுப்பு இல்லை. ஆனால், திரட்டிய நிதியை கையாளும் பொறுப்பு உள்ளது |
| 4 | வெகுமதி | தங்களின் இடர் ஏற்பு பணிக்காக இலாபம் என்ற வெகுமதியை பெறுகின்றனர் | இலாபத்தில் பங்கு இல்லை. ஆனால், திரட்டிய நிதியை கையாளும் பொறுப்பு உள்ளது |
| 5 | இடர் ஏற்றல் | தான் ஆரம்பித்த தொழிலின் இடரை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது | இவர், தொழில் தொடர்பாக எழும் இடர்பாட்டில் பங்கு பெறுவதில்லை |
| 6 | தகுநிலை | இவர் உரிமையாளர் என்ற தகுநிலை படைத்தவர் | இவர் உரிமையாளர் அல்ல. ஆனால், ஊழியர் தான் மேற்கொண்ட செயலுக்கு, தன்னுடைய மேல் அதிகாரிக்கு பதில் சொல்ல கடைமையுடையவர் |
| 7 | செயல்பாடு | தான் தொடங்கிய தொழிலின் புறத்தின் நின்று பெரும்பாலும் செயல்படும் நபர் | முழு நிறுமத்திற்கு உட்பட்டு இயங்கும் நபர் |

3. **மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி**

( ஏதேனும் 5 ) ( JUL 2022 , MAR 2023 )

( திருமதி. சிந்தியா என்பவர் புதிய தொழில் ஒன்றைத் தொடங்க விரும்புகிறார். அவரது தொழில் பிரயாணத்தில் எதிர்கொள்ளும் ஏதேனும் ஐந்து சவால்களை விவரிக்கவும்.) ( MAR 2020 )

1) **நிதிப்பிரச்சனை**
   - தங்களின் பெயரில் சொத்துக்கள் இல்லாத மகளிர் உரிமையாளர்கள், பிணைக்கடன் பெறுவதிலும், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறவும், பெரும் இன்னல்களுக்கு உட்படுகிறார்கள்.
   - இதனால், தாங்கள் மேற்கொண்டுள்ள வினைகளை, போதிய அளவில் விரிவாக்கம் செய்ய இயலாமல் தவிக்கிறார்கள்

2) **இயக்கத்தடை**
   - மகளிர் தொழில் முனைவோர்கள், நமது நாட்டு கலாச்சாரப்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய சூழலில், வீட்டு பொறுப்புகளையும் சுமக்க வேண்டியுள்ளது.
   - அதன் காரணமாக தொழில் செயல்பாடுகளில் போதிய பங்களிப்பை அவர்களால் வழங்க முடிவது இல்லை.

3) **கல்வியறிவு இன்மை**
   - ஏட்டறிவு இல்லா அல்லது குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள், வியாபாரம் அல்லது தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதாக புரிந்து கொள்ள முடியாதவராக உள்ளனர்.

4) **ஆதரவு இன்மை**

- தொழிலில் நெருக்கடிகள் வரும்போது, பலதரப்பட்ட மக்களின் கனிவு, பரிவு மற்றும் ஆதரவு இவைகள் தேவைப்படுகின்றன.
- ஆனால், ஆண் ஆதிக்க மனப்பான்மை கொண்ட நபர்களின் நடத்தை மற்றும் வார்த்தை, வன்முறைகள், மகளிரின் தொழில் துணிவை மிகவும் பாதிக்கிறது.

5) **கடும்போட்டி**

- தாராளமயமான போட்டி உலகில், போட்டியை வலுவாக எதிர்கொள்ள, விளம்பரம் மற்றும் விற்பனை பெருக்க யுக்திகளை கையாள வேண்டியுள்ள சூழ்நிலையில், மகளிர் தொழில் முனைவோர்கள் ஈடுகொடுக்க முடியாமல் திணறுகின்றனர்.

6) **உணர்ச்சி வயப்படல்**

- மகளிராக இருப்பவர்கள், இயற்கையாகவே உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள்.
- உணர்ச்சி பொங்கி எழும்போது, கோபப்படக் கூடியவர்கள்.
- இப்படிப்பட்ட மனநிலை, தொழிலில் சிக்கல் அல்லது சவால்கள் எழும்போது அமைதியாக, நிதானமாக, பொறுமையாக முடிவெடுக்க அவர்களை விடுவதில்லை.

7) **போதிய விவரமின்மை**

- மகளிர் தொழில் முனைவோர்கள், தங்களின் குறைந்த படிப்புத் தகுதி காரணமாகவோ, அலட்சியம் காரணமாகவோ அல்லது வீட்டு வேலை சுமையின் காரணமாகவோ, தங்களால் துவக்கப்படும் தொழிலைச் சுற்றி என்ன நடக்கிறது? என்பது போன்ற தகவல்களை உள்வாங்க இயலாதவராக இருக்கின்றனர்.

8) **சார்ந்து வாழும் கலாச்சாரம்**

- பல சமயங்களில், மகளிர் தன் வாழ்நாள் முழுவதும், பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.
- இப்படிப்பட்ட கலாச்சார தடை, மகளிர் தொழில் முனைவோர்களை தன்னுடைய விருப்பப்படி தொழிலை துவங்கி, அதனை நிர்வகிக்க அனுமதிப்பதில்லை.

---

# அத்தியாயம் 24 . தொழில் முனைவோர்களின் வகைகள்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

**1. வியாபார தொழில் முனைவோரின் இதர பெயர்கள் என்ன?**

1) தனித் தொழில் முனைவோர்
2) வணிகத் தொழில் முனைவோர்

**2. கூட்டு பங்கு தொழில் முனைவோரின் மற்றொரு பெயர் என்ன?**

- தோற்றப் பணியாளர்

**3. வேளாண் தொழில் முனைவோர் என்பவர் யார்?**

- வேளாண் பொருட்களை விளைவித்து சந்தையிடும் தொழிலை மேற்கொளப்வர் வேளாண் தொழில் முனைவோர் ஆவார்.

**4. தெளிவான தொழில் முனைவோருக்கு உதாரணம் தருக.** ( MAR 2020 )

1) திருபாய் அம்பானி
2) ஜாம்செட் டாடா
3) T.V. சுந்தரம் ஐயங்கார்
4) சேஷாத்திரி
5) பிர்லா
6) நாராயண மூர்த்தி
7) அஸிஸ் பிரேம்ஜி

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **தனி உரிமை தொழில் முனைவோர் என்பவர் யார்?**
   - தனியாகவோ அல்லது கூட்டாகவோ சொந்த இடரில் நிதியை திரட்டி தொழில் நடத்த முனைபவர் தனி உரிமை தொழில் முனைவோர் எனப்படுகிறார்கள்.

2. **மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதவும்.**
   - மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்கள், தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை தங்களின் அறிவு, ஆற்றல், வல்லமையை வைத்துக்கொண்டு, வேறுமுறையில் வடிவமைப்பவர்கள்.
   - இவர்கள் மேலைநாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்களை தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

3. **காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதவும்.**
   - பழமை தொழில் முனைவோர்கள் எதையும் புதிதாக புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள்.
   - குறிப்பாக புதியது புகுத்தினால் இடர்வந்துவிடும் என அச்சம் கொள்பவர்கள்.
   - தொழில் சூழ்நிலைகள் மாறிவரும் போதிலும் மாறாத இவர்கள் மாற்றத்தை வேறு வழி இல்லாத நிலையில் ஏற்க தள்ளப்படுபவர்கள்.
   - அதாவது மாற்றத்தை உள்வாங்கவில்லை எனில், தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றால் மட்டுமே மாற்றத்தை பின்பற்றுவார்கள்.
   - காலம் காலமாக தங்களின் மூதாதையர்கள் வகுத்த பழமை முறைகளைப் பிசகாமல் பின்பற்றுபவர்கள்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **வியாபார அடிப்படையிலான தொழில் முனைவு வகைப்பாட்டினை விவரித்து எழுதுக.** ( ஏதேனும் 5 )

   1) **உற்பத்தி தொழில் செய்யும் தொழில் முனைவோர்**
      - இவ்வகையான தொழில் முனைவர், ஒரு பொருள் (அ) சேவை பொருளை உருவாக்க எண்ணி தொழில் முனைவை மேற்கொள்பவர்.
      - இவர் பெரிய அல்லது சிறிய அளவில் தொழிலை ஏற்படுத்தி தன் எண்ணத்தில் உதித்த பொருளை (அ) சேவைப் பொருளை தயாரித்து சந்தை இடுபவர்.

   2) **வணிகத் தொழில் முனைவோர்**
      - பொருளை வாங்கி விற்கும் செயலில் மட்டும் தன்னை உட்படுத்திக் கொள்பவர்.
      - இவர் உள்நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ பொருளை வணிகம் செய்பவர்.

   3) **தொழிற்சாலை தொழில் முனைவோர்**
      - இவர்கள் வாடிக்கையாளரின் தேவைகளை துல்லியமாக கண்டுணர்ந்து, அவர்களின் தேவைக்கேற்ப பொருளை உற்பத்தி செய்யும் தொழிலை முனைகின்றனர்.

   4) **கூட்டுப்பங்கு தொழில் முனைவோர்**
      - கூட்டுப்பங்கு தொழில் முனைவோர் என்பவர், நிறுமத்தை கூட்டுப்பங்கு வடிவில் தொழிலை துவங்க முனைபவர் ஆவர்.

   5) **வேளாண் தொழில் முனைவோர்**
      - வேளாண் தொழில் முனைவோர் வேளாண் பொருட்களை விளைவித்து சந்தையிடும் தொழிலை முனைகின்றனர்.

   6) **சில்லறை தொழில் முனைவோர்**
      - இவர்கள் சிறு அளவில், பொருட்களை பல்வேறு மொத்த வணிகர்களிடமிருந்து பெற்று, பலதரப்பட்ட பொருட்களை இருப்பு வைத்து, ஒரு கூரையின் கீழ் இறுதி நுகர்வோருக்கு பொருளைத் தருவிக்கும் தொழிலை நடத்துபவர்கள்.

2. **பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி.**

1) **<u>புதுமை படைக்கும் தொழில் முனைவோர்</u>**
- ஒரு புதுமை புகுத்திக் கொண்டே இருப்பவர்.
- இவர்கள் எப்போதும் வியாபாரச் சூழல்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே இருப்பவர்கள்.
- அதன் அடிப்படையில், நுகர்வோருக்கு எந்தெந்த தேவை நிறைவேறாமல் இருக்கிறது என்பதைப் பகுத்து ஆய்ந்து, அதனை தங்களுடைய பொருட்களின் மூலம் நிறைவேற்றுவார்கள்.

2) **<u>மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்</u>**
- இவர்கள் தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை, தங்களின் அறிவு, ஆற்றல், வல்லமையை வைத்துக்கொண்டு வேறுமுறையில் வடிவமைப்பவர்கள்.
- இவர்கள் மேலைநாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்களை, தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

3) **<u>காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர்</u>**
- எதையும் புதிதாக புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள்.
- குறிப்பாக புதியது புகுத்தினால், இடர் வந்துவிடும் என அச்சம் கொள்பவர்கள்.
- அதாவது மாற்றத்தை உள்வாங்கவில்லை எனில், தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றால் மட்டுமே மாற்றத்தை பின்பற்றுவார்கள்.

4) **<u>மந்தமான தொழில் முனைவோர் (அ) ஆண் தேனி தொழில் முனைவோர்</u>**
- பழமைவாத தொழில் முனைவோருக்கு நிகராக மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள்.
- இவர்கள் யாரும் நுழைய விரும்பாத அல்லது பெரிய நிறுமங்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிறிய சந்தையில் செயல்படுபவர்கள்.
- அதாவது சிறிய குட்டையில் பெரிய மீனாக அரசாள்பவர்கள்.
- அந்த சிறுசந்தையில் எவ்விதமாற்றமும் செய்யாமல் அப்படியே இயங்குபவர்கள்.

---

## <u>அத்தியாயம் 25 . தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள்</u>

### <u>இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள்)</u>

1. **ஏதேனும் இரண்டு அரசின் தொழில் முனைவோர் திட்டங்களின் பெயர்களை எழுதுக.** ( SEP 2020 )
   1) ஸ்டார்ட் அப் இந்தியா
   2) இந்தியாவில் தயாரிப்பு திட்டம்
   3) அடல் புதுமை திட்டம்
   4) டிஜிட்டல் இந்தியா
   5) ஸ்டாண்ட் அப் இந்தியா
   6) ஜந்தன் - ஆதார் - மொபைல்

---

2. **டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.** ( AUG 2021 , MAY 2022 , JUN 2023 )
- இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும், பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது.
- இதனால் இந்திய பொருளாதாரம், மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது.
- உலகெங்கும் கிடைக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை, மக்கள் மின்னணு முறையில் பெறவகை செய்திடும் அறிவு பொருளாதாரமாக, இந்திய பொருளாதாரம் மாறி வருகிறது

3. **தொழில் முனைவோருக்கு தேவைபடும் இரண்டுவிதமான நிதியைக் குறிப்பிடுக.** ( JUL 2022 )

1) நீண்டகால நிதி மற்றும் 2 ) குறுகிய கால நிதியாகும்.

- நிலையான சொத்துக்களை பெறுவதற்கு நீண்டகால நிதி தேவையும்.
- நடைமுறை மூலதனத்திற்கு குறுகிய கால நிதி தேவையும் தேவைப்படுகிறது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **ஸ்டாட்டப் இந்தியா என்றால் என்ன?** ( Startup India ) ( SEP 2020 , MAY 2022 )

- தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்க்கும் திட்டத்தினை 2016 ம் ஆண்டு சனவரியில் துவங்கியது.
- துவக்கக் காலம் முதலே பல தொழில் முனைவோர்கள் பல தரப்பட்ட தொழில் வினைகளை துவக்கி வெற்றி கண்டனர்.
- நிதிகளின் நிதி (Fund of Fund) என்ற நிதியின் மூலம் தொடக்க நிலை தொழில் வினைகளுக்கு நிதி வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

2. **பின் வருவனவற்றிக்கு விரிவாக்கம் தருக.**

i) STEP - Support to Training and Employment Programme for Women ( பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு )

ii) JAM - Jan - Dhan - Aadhar - Mobile ( ஜன்தன் - ஆதார் - மொபைல் )

iii) TREAD - Trade Related Entrepreneurship Assistance and Development ( வணிகம் சார்ந்த தொழில் முறை உதவி மற்றும் வளர்ச்சி திட்டம்)

iv) M-SIPS -- Modified Special Incentive Package Scheme (திருத்தப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகுப்பு திட்டம்)

v) SEED - Science for Equity Empowerment and Development (விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி )

vi) New Gen IEDC - New Gen Innovation and Entrepreneurship Development Centre (புதிய தலைமுறை புதுமை புகுத்துதல் மற்றும் thoழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்)

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.**

1) **ஸ்டாட்டப் இந்தியா** Startup India:

- தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்க்கும் திட்டத்தினை 2016 ம் ஆண்டு சனவரியில் துவங்கியது.
- நிதிகளின் நிதி (Fund of Fund) என்ற நிதியின் மூலம் தொடக்க நிலை தொழில் வினைகளுக்கு நிதி வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

2) **இந்தியாவில் தயாரிப்பு திட்டம்** Make in India ( MAR 2023 )

- இத்திட்டத்தின் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது.
- இத்திட்டம் 2014 செப்டம்பர் மாதம் நடைமுறை படுத்தப்பட்டது.
- இத்திட்டத்தில் பங்கேற்று இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது

3) **<u>அடல் புதுமை புகுத்தல் திட்டம்</u>** **Atal Innovation Mission (AIM)**

- ❖ பன்னாட்டு தரத்திற்கு இணக்கமான முறையில், புதுமையான பொருட்களை வடிவமைப்பது மற்றும் தொழில் முனைவை முழுவீச்சில் ஊக்குவித்து அதை வளர்ப்பது என்ற முதன்மையான நோக்குடன் அடல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4) **<u>பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு</u>**

**Support to Training and Employment Programme for Women (STEP)**

- ❖ ஊரகப் பகுதியில் உள்ள மகளிருக்கு முறைசார் பயிற்சியை நல்கும் நோக்குடன் மகளிர் மற்றும் சிறார் அமைச்சகம் இத்திட்டத்தை செயல் படுத்தியது.

5) **<u>ஜன்தன் - ஆதார் - மொபைல்</u>** **Jan-Dhan-Aadhar-Mobile (JAM)**

- ❖ இத்திட்டத்தின் மூலம், பல அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேரவேண்டிய மானியத்தை, சம்பந்தப்பட்ட துறை நேராக அவர்களுக்கு வழங்கும் நோக்கத்தில் பயனாளிகளை கட்டாயமாக வங்கிகளில் கணக்கு ஆரம்பிக்க கட்டாயப்படுத்தப்பட்டு, அனைவர் பெயரிலும் வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.
- ❖ இதனால் பயனாளிகளுக்கு செல்லவேண்டிய மானியத்தை, சுரண்டி வந்த இடைத்தரகர்கள் அறவே அகற்றப்பட்டனர்.

6) **<u>இலக்குமுறை இந்தியா (OR) டிஜிட்டல் இந்தியா</u>** **DIGITAL INDIA**

- ❖ இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும், பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது.
- ❖ இதனால் இந்திய பொருளாதாரம், மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது.

7) **<u>ஸ்டாண்ட் அப் இந்தியா</u>** **Stand-up India**

- ❖ இத்திட்டத்தின் மூலம் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட் இனத்தைச் சார்ந்த மகளிருக்கு, நிறுமக் கடன் வழங்கி, அவர்களும் வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தின் பலனை பெற்று அனுபவிக்க வகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

---

## 2. புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான படிநிலைகளை விளக்குக.

1) **<u>பொருள் தேர்வு</u>** **( JUN 2023 )**

- ❖ திறன், உள்நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.
- ❖ அவர்/அவள் ஒரு அடையாளக் குறியீடு, புதிய தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.
- ❖ திட்டத்தின் பொருளாதார நம்பகத்தன்மையை தொழில் முனைவோர் ஏற்படுத்த வேண்டும்.

2) **<u>உரிமையின் வடிவத்தை தேர்வு செய்தல்</u>**

- ❖ குடும்பம், உரிமை, கூட்டாண்மை, தனியார் வரம்புக்கு உட்பட்ட நிறுவனம் ஆகியவற்றிற்கான தொழில் முறை அமைப்பு, நிறுவனத்தை தேர்வு செய்யவேண்டும்.
- ❖ குடும்பத்தின் உரிமைகள் மற்றும் கூட்டாண்மை வடிவங்கள் ஆகியவை நிறுவுன நிதியுதவி, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் வணிக அனுபங்களை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

3) **<u>இடத் தேர்வு</u>**

- ❖ தொழில் முனைவோர் தனது முயற்சியைத் தக்கவைப்பதற்கு பொருத்தமான தொழில் இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- ❖ இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் பின்வரும் விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.
  1) சொந்த ஊருக்கு அருகில்
  2) அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஊக்கங்கள்

3) சந்தைக்கு அருகில்

4) தொழிலாளர் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மை

5) உள்கட்டமைப்பு வசதிகள்

4) <u>மூலதன கட்டமைப்பை தீர்மானித்தல்</u>

- இந்த துணிகர நிதிக்கு நிதியளிப்பதற்கான ஆதாரத்தை தொழில் முனைவோர் தீர்மானிக்க வேண்டும்.
- அவர்/அவள் சொந்தசேமிப்பு இருப்பு, நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து காலக் கடன்களை திரட்டமுடியும்

5) <u>உற்பத்தியை கையகப்படுத்துதல் என்பதை அறிதல்</u>

- தொழிற் துறை ஆய்வு கூடங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழிற் துறை மேம்பாட்டுப் பிரிவுகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசகர்களிடமிருந்து , உற்பத்தியை எவ்வாறு செய்யமுடியும் என்பதனை அறியலாம்.

6) <u>திட்ட அறிக்கை தயாரித்தல்</u>

- கால கடன் வழங்கும் நிறுவனங்களின், கடன் விண்ணப்பப் படிவில் வடிவமைக்கப்பட்ட, வடிவமைப்பின் படி, திட்டஅறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும்.
- ஒரு தொழில் முனைவோர் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் அல்லது தணிக்கையாளர்கள் அல்லது ஆலோசகர்கள் அல்லது மேம்பாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையைப் பெற்று திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

7) <u>தற்காலிகமான பதிவு சான்றிதழ்</u>

- தொழில் முனைவோர், தற்காலிக பதிவு சான்றிதழ் விண்ணப்பிக்க வேண்டும்.
- தொழில் முனைவோர், சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், ஒரு வருட காலத்திற்கு, ஆறு மாதத்திற்கு ஒருமுறை புதுபிக்கும் அடிப்படையில் தரப்படும்.
- தொழில் முனைவோர், நீட்டிப்புக் காலத்திற்கு பிறகும், உற்பத்தியைத் தொடங்க முடியாவிட்டால், மேலும் நீட்டிப்பு வழங்கப்பட மாட்டாது.

8) <u>நிரந்தர பதிவு சான்றிதழ்</u>

- உற்பத்தியை ஆரம்பித்தவுடன் அல்லது உற்பத்தியைத் தொடங்கத் தயாராகி விட்டால், நிரந்தர பதிவு சான்றிதழை பெற தகுதியுடையவர்கள் ஆவார்.

9) <u>சட்டபூர்வ உரிமம்</u>

- தொழில்முனைவோர் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து நகராட்சி உரிமம் பெறவேண்டும்.
- பிறகு, தொழில் முனைவோர், உற்பத்தி அலகை மத்திய மற்றும் விற்பனை வரித் துறையுடன் பதிவு செய்யவேண்டும்.

10) <u>மின் இணைப்பு</u>

- தொழில் முனைவோர், மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தை, பாதுகாப்பு வைப்புத் தொகையை செலுத்தி மற்றும் அலுவலக முறைமைகளை நிறைவேற்றி, மாநில மின்சார வாரியத்தின், உதவி கோட்ட பொறியாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

11) <u>நிதி ஏற்பாடு</u>

- தொழில் முனைவோருக்கு, நீண்டகால நிதி மற்றும் குறுகிய கால என இரண்டு விதமான நிதி தேவைப்படுகிறது.
- நிலையான சொத்துக்களை பெறுவதற்கு, நீண்டகால நிதி தேவையும்,
- நடைமுறை மூலதனத்திற்கு, குறுகிய கால நிதி தேவையும் தேவைப்படுகிறது.

**கூடுதல் வினா**

1. **அருண் என்பவர் புதியதாக ஒரு தொழிலைத் தொடங்க விரும்புகிறார். அவருக்கு ஒரு திட்ட அறிக்கை தயாரிக்க உதவுக.** ( SEP 2020 )

**திட்ட அறிக்கை தயாரித்தல்**

1) கால கடன் வழங்கும் நிறுவனங்களின், கடன் விண்ணப்பப் படிவில் வடிவமைக்கப்பட்ட, வடிவமைப்பின் படி, திட்ட அறிக்கைகள் தயாரிக்கச் செய்தல்.
2) அருண் என்ற தொழில் முனைவோரை, தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் அல்லது தணிக்கையாளர்கள் அல்லது ஆலோசகர்கள் அல்லது மேம்பாட்டு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையைப் பெற்று திட்ட அறிக்கைகள் தயாரிக்கச் செய்தல்.
3) நிதியியல், தொழில்நுட்ப அறிவு, உழைப்பு மற்றும் மூலப்பொருட்களின் ஆதாரங்கள், சந்தை திறன் மற்றும் இலாபத் தன்மை போன்ற அம்சங்களை உள்ளடக்கி, திட்ட அறிக்கையினை தயாரிக்கச் செய்தல்.
4) நிதிசார்ந்த நம்பகத்தன்மையை குறிப்பிட்டு, திட்ட அறிக்கையினை தயாரிக்கச் செய்தல்.
5) முக்கியமாக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை, இயந்திரங்கள் நிறுவப்பட்ட திறன், சந்தை பங்கு, எதிர்பார்க்கப்பட்ட வருவாய் மற்றும் பொருத்தமான விலை கட்டமைப்பு ஆகியவற்றின் தேவைகளை உள்ளடக்கி, திட்ட அறிக்கையினை தயாரிக்கச் செய்தல்.
6) திட்டஅறிக்கையில், துணிகரத்தை நிர்வகிப்பதற்கான பொறி முறையைக் கொண்டிருக்கச் செய்தல்.

# அலகு 10 . நிறுமச் சட்டம் மற்றும் செயலர்

## அத்தியாயம் 26 . நிறுமச் சட்டம் 2013 - ஓர் அறிமுகம்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )

1. **நிறுமம் உருவாக்கத்தில் உள்ள நான்கு நிலைகள் யாவை?**
   1) நிர்வாகம்
   2) பதிவு செய்தல்
   3) முதல் போடுதல்
   4) வியாபாரத்தை தொடங்குதல்

2. **ஊக்கப்பங்குகள் என்றால் என்ன?**
   - செயல்முறை விதிகளின்படி ஒரு நிறுமமானது, தனது முதலில் ஏற்பட்ட இலாபத்தை பெருக்கும் நோக்கில் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை, ஊக்கப்பங்காக வெளியிடுகிறது.
   - இது நிறுமத்தின் பொதுவான இயல்புகளுக்காக வெளியிடப்படுகிறது.
   - இது நிறுமத்தின் உபரிகளையும் மற்றும் காப்புகளையும் முறையாக பயன்படுத்துதல் ஆகும்.
   - முந்தைய பங்குதாரர்கள் எந்தவிதமான மறுபயன் எதிர்பார்க்காமல் இது வெளியிடப்படும்.

3. **உரிமைப்பங்குகள் என்றால் என்ன?**
   - நிறுமத்தின் பங்களிப்பு மற்றும் பங்கு முதலை உயர்த்தவும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் மற்றும் நிலையான வகையில், பழைய பங்குதாரர்கள் வாங்க ஏதுவாகவும் வெளியிடும் பங்குகள், உரிமைப் பங்குகள் ஆகும்.
   - இந்த வெளியீடுகள் செயல்முறை விதிகளுக்கு உட்பட்டு இருக்கும்.

4. **கடன் பத்திரங்கள் என்றால் என்ன?**

- ❖ தனது நிறுமத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் நோக்கில், தேவையான நிதியைபெற, பங்கு முதலை அதிகமாக வெளியிடாமல், பொது வைப்பின் மூலம் ஒரு நிலையான காலத்தில், ஒரு நிலையான வட்டியில் பெற கடன் சான்றிதழ் வழங்குகிறது.
- ❖ இத்தகைய கடன் சான்றிதழ், கடன்பத்திரம் ஆகும்.

## <u>மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள்)</u>

1. **பங்குகளை முனைமத்தில் வெளியிடல் என்பது குறித்து நீவிர் அறிவது யாது?** ( MAR 2023 )

- ❖ ஒரு நிறுமம், தனது முகமதிப்பில் உள்ள பங்கின் மதிப்பினை, அதிகரித்து வெளியிடுவது பங்கு முனைமம் ஆகும்.
- ❖ எடுத்துக்காட்டாக ₹. 10 முகமதிப்பு உடைய ஒரு பங்கினை ₹. 12 க்கு வெளியிடுவது பங்குகளை முனைமத்தில் வெளியிடுவது ஆகும். இதில் ₹. 2 முனைமத் தொகையாகும்.

2. **பல்வேறு வகையான முன்னுரிமைப் பங்குகளை சுருக்கமாக கூறுக.** (ஏதேனும் 3

1) <u>மீள்தகு முன்னுரிமைப் பங்குகள்</u>
   - ❖ ஒரு நிலையான காலம் (அ) தவணைநாள் முடிந்து பெறக் கூடிய பங்குகள் ஆகும்.
2) <u>மீள்தகா முன்னுரிமைப் பங்குகள்</u>
   - ❖ நிறுமத்தை கலைக்கும் போது (அ) சொத்துக்களை விற்று நீர்மைத்தன்மை ஆக்கும் போது பெறக் கூடிய பங்குகள் ஆகும்.
3) <u>மாற்றக்கூடிய முன்னுரிமைப் பங்குகள்</u>
   - ❖ ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், சாதாரண பங்குகளை மாற்றக் கூடிய தன்மை கொண்ட பங்குகள் ஆகும்.
4) <u>மாற்றமுடியாத முன்னுரிமைப் பங்குகள்</u>
   - ❖ எந்த சூழ்நிலையிலும் சாதாரண பங்குகளாக மாற்ற இயலாத தன்மை கொண்ட பங்குகள் ஆகும்.
5) <u>பங்கு பெறும் முன்னுரிமைப் பங்குகள்</u>
   - ❖ கூடுதல் இலாபம் கிடைக்கும் போது, சாதாரணப் பங்குதாரர்களுக்கு அளிக்கப்படும் பங்கு பெறும் உரிமை ஆகும்.
6) <u>பங்கு பெறாதா முன்னுரிமைப் பங்குகள்</u>
   - ❖ கூடுதல் இலாபம் கிடைக்கும் போது (அ) நிறும கலைப்பின் போது சாதாரணப் பங்குதாரர்களுக்கு அளிக்கப்படாத பங்கு உரிமை ஆகும்.

## <u>கூடுதல் வினா</u>

1. **“ இந்தியா டெக் பொது நிறுமம் நேர்மை பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டது. சில ஆண்டுகளுக்கு பிறகு அந்நிறுமம் கலைப்பிற்கு உள்ளானது. நிறும கலைப்பின் போது எவ்வகை பங்குநர் தங்கள் பங்கு முதலை திரும்பப் பெறுவார்? விளக்குக.** ( MAY 2022 )

   - ❖ நிறுமம் கலைப்பின் போது **முன்னுரிமைப் பங்குநர்** தங்கள் பங்கு முதலை முதலில் திரும்பப் பெறுவார்.
   - ❖ நிறுமச் சட்டம் 2013. பிரிவு (42)ன்படி, முன்னுரிமைப் பங்குதாரர்கள், நிறுமம் இயங்கும் போதும், கலைக்கப்படும் போதும், சாதாரணப் பங்குதாரர்களை விட முன்னுரிமையை பெறுவதால், நிறுமம் கலைப்பின் போது முன்னுரிமைப் பங்குநர் தங்கள் பங்கு முதலை முதலில் திரும்பப் பெறுவார்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **பங்குகளுக்கும், கடன் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 ) ( AUG 2021 , JUL 2022 , MAR 2023 )**

| வ. எண் | பங்குகள் | கடன் பத்திரங்கள் |
|---|---|---|
| 1 | இது நிறுமத்தின் முதலில் ஒரு பங்கு ஆகும் | இது சட்டப்படி ஒரு கடன் ஆகும் |
| 2 | பங்குதாரர்கள் நிறுமத்தின் உறுப்பினர்கள் / உரிமையாளர்கள் ஆவர் | கடன் பத்திரதாரர்கள் நிறுமத்தின் கடனீந்தோர்கள் ஆவர் |
| 3 | பங்குதாரர்கள் மாறுபடும் விலையில் பங்காதாயம் பெறுவர் | கடன் பத்திரதாரர்கள் நிலையான விகிதத்தில் வட்டி செலுத்தி அதற்கான பங்காதாயம் பெறுவர் |
| 4 | பங்குகளில் எந்தவிதமான விதிப்பும் கிடையாது | நிறுமத்தின் சொத்துகளின் மீது கடன் பத்திரங்கள் விதிக்கப்படும் |
| 5 | பங்குதாரர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு | கடன் பத்திரதாரர்கள் வாக்களிக்கும் உரிமை இல்லை |
| 6 | இயக்குநர் அவையின் முடிவின் அடிப்படையிலும், இலாபத்தின் அடிப்படையிலும் பங்காதாயம் வீதம் மாறும் | கடன் பத்திரங்களின் வட்டி வீதம் நிலையானது |
| 7 | பங்குதாரர்களின் பங்காதாயம் என்பது, நிறுமத்தின் இலாபத்தை கருத்தில் கொண்டது | கடன் பத்திரங்களின் மீதான வட்டி என்பது, இலாபத்தை கருத்தில் கொள்ளாமல், முதலை கருத்தில் கொள்வது |

2. **கடன்பத்திரங்களின் வகைகள் யாவை? ( ஏதேனும் 5 ) ( SEP 2020 , MAY 2022 )**

- கடன்பத்திரங்கள் வெளியிடும் முறை, அவற்றின் வெளியீட்டு நிபந்தனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பலவிதங்களாக பிரிக்கலாம்.

1) மாற்றுதல் அடிப்படை
2) பிணையங்கள் (அ) ஈட்டின் அடிப்படை
3) மீட்பு அடிப்படை
4) பதிவு செய்தல் அடிப்படை

### 1) மாற்றுதல் அடிப்படை

- மாற்றுதல் அடிப்படையில் கடன் பத்திரங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை.

**i) மாற்ற இயலாத கடன் பத்திரங்கள்**

- மாற்ற இயலாத கடன் பத்திரங்கள் அவற்றின் கடன் இயல்பை தக்க வைத்துக் கொள்கின்றன மற்றும் சாதாரணப்பங்குகளாக மாற்றப்பட முடியாது.

**ii) பகுதி மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்**

- பகுதி மாற்றத்தக்க கடன் பத்திரங்களின் நிலையில் அவைகளின் ஒரு பகுதி வெளியிடுபவர் அறிவிக்கும் சமயம் எதிர்காலத்தில் சாதாரணப்பங்குகளாக மாற்றப்படுகின்றன.

iii) <u>முற்றிலும் மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்</u>

- இவை வெளியீட்டாளர் அறிவிக்கும் சமயம், முற்றிலுமாக சாதாரண பங்குகளாக மாற்றப்படுகின்றன.
- மாற்ற வீதமானது வெளியீட்டாளரால் முடிவு செய்யப்படுகின்றது.
- மாற்றப்பட்ட பிறகு முதலீட்டாளர்கள் நிறுமத்தின் சாதாரணப் பங்குதாரர்களை போலேவே அதே அந்தஸ்தினை அனுபவிப்பர்.

iv) <u>தேர்வின்படி மாற்றத்தக்க கடன் பத்திரங்கள்</u>

- தேர்வின்படி மாற்றத்தக்க கடன் பத்திரங்களின் நிலையில் இப்பங்குகளை வெளியீட்டாளர் முடிவு செய்யும் விலையிலோ (அ) வெளியீட்டின் சமயம் உடன்பட்ட விலையிலோ மாற்றிப் பெறும் தேர்வு உள்ளது.

## 2) பிணையங்கள் (அ) ஈட்டின் அடிப்படை

- பிணையங்கள் அடிப்படையில் கடன்பத்திரங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை.

a) <u>பிணையம் தரப்பட்ட கடன் பத்திரங்கள்</u>

- நிறுமத்தின் சொத்துக்கள் மீது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தி வெளியிடப்படும் பத்திரங்கள் பிணையம் தரப்பட்ட கடன்பத்திரங்கள் எனப்படும்.

b) <u>பிணையம் தரப்படாத கடன் பத்திரங்கள்</u>

- நிறுமத்தின் சொத்துக்கள் மீது எந்தவிதமான பற்றுப் பொறுப்பும் ஏற்படுத்தப்படாமல் வெளியிடப்படும் கடன் பத்திரங்கள், பிணையம் தரப்படாத கடன் பத்திரங்கள் ஆகும்.

## 3) மீட்பு அடிப்படை

- கடன் பத்திரங்களை மீட்பு அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை.

அ) <u>மீட்கக் கூடிய கடன் பத்திரங்கள்</u>

- ஒரு குறிப்பிட்ட தேதியில் (அ) குறிப்பிட்ட காலக் கெடுவுக்கு பிறகு மீட்கக் கூடிய கடன் பத்திரங்கள் இவ்வகைகள் ஆகும்.

ஆ) <u>மீட்க இயலாத கடன் பத்திரங்கள்</u>

- நிறுமம் கலைக்கப்பட்டால் தவிர, மற்றப்படி நிறுமத்தின் ஆயுள் காலத்தில் மீட்க தேவையில்லாத கடன் பத்திரங்கள், மீட்க இயலாத கடன் பத்திரங்கள் ஆகும்.
- பெரும்பாலும் இவ்வகைக் கடன் பத்திரங்களை நிறுமம் வெளியிடுவது இல்லை.

## 4) பதிவு செய்தல் அடிப்படை

- பதிவு செய்தல் அடிப்படையில் கடன் பத்திரங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை.

i) <u>பதிவு செய்யப்பட்ட கடன் பத்திரங்கள்</u>

- கடன் பத்திரங்கள் குறிப்பிட்ட நபர்களின் பெயரில், நிறுமம் தனது பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டு இருந்தால், அவற்றைப் பதிவு செய்யப்பட்ட கடன் பத்திரங்கள் என்று கூறுகின்றோம்.

ii) <u>கொணர்பவர் பத்திரங்கள்</u>

- இவ்வகைப் பத்திரங்களை யார் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அப்பத்திரங்கள் மீதான உரிமை உண்டு.
- எனவே இவற்றைப் பதிவு செய்யப்படாத பத்திரங்கள் என்றும் கூறுகின்றனர்.
- இவற்றைப் பங்குரிமை ஆணையுடன் ஒப்பிடலாம்.
- இவற்றை மாற்றி தருவதும் எளிது.

## அத்தியாயம் 27 . நிறும மேலாண்மை

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள்)

1. **மேலாண்மையில் முக்கிய நபர்களை எவ்விதமான நிறுமங்கள் நியமனம் செய்திருக்க வேண்டும்?**
   1) ஒவ்வொரு பட்டியலிடப்பட்ட நிறுமமும்
   2) ரூபாய் 10 கோடி மற்றும் அதற்கு மேல் பங்கு முதலை கொண்டுள்ள ஒவ்வொரு பொது நிறுமமும்

---

2. **முழுநேர இயக்குனர் என்பவர் யார்?** ( AUG 2021 , JUL 2022 )
   - நிறுமத்தின் இயக்குனராக பணிபுரியும் ஒருவர், தனது வேலை நேரம் முழுவதையும் நிறுமத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவதும், நிறுமத்திற்கு வருமானம் ஏற்படும் வகையில், குறிப்பிடத்தக்க நேரடி ஆர்வத்தைக் காட்டுபவரும் முழுநேர இயக்குனர் ஆவார்.

---

3. **மேலாண்மை இயக்குனர் என்று யாரை அழைக்கிறோம்?** ( JUN 2023 )
   - அதிகபட்சமான அதிகாரங்களை கொண்டவரும்,
   - நிறும நிர்வாகத்தில் அதிக ஆர்வமமும், அதிகபட்சமான சுதந்திரமும் உடையவரும்,
   - நிறுமத்தை வழிநடத்துவதற்கு, இயக்குனர்களை கட்டுப்படுத்தும் உரிமையும் கொண்ட இயக்குனர், மேலாண்மை இயக்குனர் ஆவார்.

---

4. **எந்த இயக்குனர் செயல் இயக்குனராக செயல்பட முடியும்?**
   - நிறுமத்தின் முதன்மை தலைமை அதிகாரி என்ற பொறுப்பை வகிக்கக்கூடியவரும்,
   - நிறுமத்தின் நோக்க நிலையை அடையும் பொருட்டு தேவையான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் பொறுப்பை வகிப்பவரும்,
   - நிறும வெற்றிக்கு முக்கியமாக கருதப்படுபவர் எவரோ, அவரே நிறுமத்தின் செயல் இயக்குநனராக செயல்பட முடியும்.

---

### மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )

1. **எப்பொழுது மாற்று இயக்குனர்களை நியமிக்கலாம்?** ( AUG 2021 )
   - ஒரு இயக்குனர், இந்தியாவில் குறைந்தது மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால், அவருக்கு பதிலாக மாற்று இயக்குனர்களை, இயக்குனர் குழு நியமிக்கலாம்.

---

2. **நிழல் இயக்குனர் என்று யாரை அழைக்கிறோம்?** ( JUN 2023 )
   - இயக்குனர் குழுவில் இடம் பெறாத ஒருவர், ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர், நிழல் இயக்குனர் எனப்படுகிறார்.
   - பிற்காலத்தில் அவர்கள் விருப்பப்பட்டால் இயக்குனராக நியமிக்கப்படலாம்.

---

3. **ஒரு தனியார் நிறுமத்தில் குறைந்தது எத்தனை இயக்குனர்கள் இருக்கவேண்டும் என்பதை குறிப்பிடுக.**
   - தனியார் நிறுமத்திற்கு இரண்டு இயக்குனர்கள் இருக்க வேண்டும்.
   - ஒரு நபர் நிறுமத்திற்கு ஒரு இயக்குனர் இருக்க வேண்டும்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் ( KMP ) என்பவர் யார்?** ( MAY 2022 )
    1) முதன்மை பிரதான நிர்வாக அதிகாரி
    2) நிர்வாக இயக்குனர் அல்லது மேலாளர்
    3) நிறுமத்தின் செயலாளர்
    4) முழுநேர இயக்குநர்
    5) முதன்மை பிரதான நிதி அலுவலர்
    6) அத்தகைய மற்ற அலுவலர்கள்

---

2. **இயக்குனரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி.** ( ஏதேனும் 5 )

### வித்தியாசமான அணுகுமுறையின்படி இயக்குநர்களின் வகைகள்.

1) **முழுநேர இயக்குனர்**
    - ❖ நிறுமத்தின் இயக்குனராக பணிபுரியும் ஒருவர், தனது வேலை நேரம் முழுவதையும், நிறுமத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவதும், நிறுமத்திற்கு வருமானம் ஏற்படும் வகையில் குறிப்பிடத்தக்க நேரடி ஆர்வத்தைக் காட்டுபவரும் முழுநேர இயக்குனர் ஆவார்.
2) **மேலாண்மை இயக்குனர்**
    - ❖ இயக்குனராக நிறுமத்தில் பணி புரியும் ஒருவர், அதிகபட்சமான அதிகாரங்களை கொண்டவருமாக நிறுமத்தின் நிர்வாகத்தில் அதிக ஆர்வம், அதிகபட்சமான சுதந்திரமும் உடையவர், நிறுமத்தை வழிநடத்துவதற்கும் இயக்குனர்களை கட்டுப்படுத்தும் உரிமையும் இவருக்கு உண்டு.
3) **செயலாக்க இயக்குனர்**
    - ❖ இவர் நிறுமத்தின் முதன்மை தலைமை அதிகாரி என்ற பொறுப்பை வகிக்கிறார்
    - ❖ இவர் நிறுமத்தின் நோக்க நிலையை அடையும் பொருட்டு தேவையான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் பொறுப்பை வகிக்கிறார்.
    - ❖ மேலும் நிறும வெற்றிக்கு இவர் பங்கு முக்கியமாகிறது
4) **செயலாக்கம் இல்லாத இயக்குனர்கள்**
    - ❖ இவர்கள் நிர்வாக மேளாண்மையில், அன்றாட பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது இல்லை.
    - ❖ ஆனால் கொள்கை முடிவுகள் எடுக்கும் போதும், திட்டமிடல் செயல்கள் செய்யும் பொழுதும், தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.
    - ❖ இது மட்டுமல்லாமல், நிர்வாக இயக்குனர்களை மேற்பார்வையிடும் பொறுப்பும், பங்குதாரர்களின் நலனுக்காக செயல்படும் பொறுப்பும் இவர்களுக்கு உண்டு.

### நிறுமங்கள் சட்டம் 2013 ன்படி இயக்குநர்களின் வகைகள்.

5) **இந்திய குடியுருப்பு இயக்குனர்** ( SEP 2020 )
    - ❖ ஒரு நிறுமத்தின் இயக்குனர், கடந்த நாட்காட்டி ஆண்டில் ஒத்த காலத்தில் குறைந்தது 182 நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும்.
    - ❖ அவ்வாறு உள்ளவரையே, இந்திய குடியிருப்பு இயக்குனர் எனப்படுகிறார்.
6) **சுதந்திர இயக்குனர்**
    - ❖ இந்திய நிறுமச் சட்டம் 2013 பிரிவு 149 (6) ன் படி, இவர் ஒரு மாற்று இயக்குனராவார். கீழ்க்கண்ட நிறுமங்கள் குறைந்தபட்சம் இரண்டு சுதந்திர இயக்குனர்களை நியமிக்கவேண்டும் அல்லது கொண்டிருக்க வேண்டும். அவை --
        1. செலுத்தப்பட்ட மூலதனம் பத்து கோடிக்கு அல்லது அதற்கு மேல் உள்ள பொது நிறுமங்கள்
        2. ஒரு பொது நிறும விற்பனையின் அளவு 100 கோடி அல்லது அதற்கு மேல் கொண்டிருந்தால். மேலும்
        3. ஒரு பொது நிறுமத்தின் கொடு படவேண்டிய மொத்த கடன்கள், கடன்பத்திரம், வைப்புகளின் மதிப்பு 50 கோடி அல்லது அதற்கு மேல் இருப்பின்

7) **சிறு பங்குதாரர்களின் இயக்குனர்**

❖ ஒரு பட்டியலிடப்பட்ட நிறுமம், குறைந்தபட்சம் 1,000 அல்லது பத்தில் ஒரு பங்கு பங்குதாரர்களுக்கு எழுத்து மூலமான அறிவிப்பு செய்தியை வழங்கி, நியமிக்கப்படும் நபரையே சிறு பங்குதாரர்களின் இயக்குனர் எனப்படுகிறார்.

8) **பெயரளவு இயக்குனர்**

❖ நிதி நிறுமங்கள் தங்களின் நலன் கருதி அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தத்தின் படியோ அல்லது மத்திய அரசின் வழிகாட்டுதலின் படியோ நியமிக்கப்படும் நபர் பெயரளவு இயக்குனர் ஆவார்.

9) **கூடுதல் இயக்குனர்கள்** ( SEP 2020 )

❖ நிறுமம் ஒரு தனிமனிதனை தேவைபட்டால், கூடுதல் இயக்குனராக நியமித்துக் கொள்ளலாம்.

10) **மாற்று இயக்குனர்கள்**

❖ ஒரு இயக்குனர் இந்தியாவில் குறைந்தது மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால், அவருக்கு பதிலாக நியமிக்கப்படுபவர் மாற்று இயக்குனர் ஆவார்.

11) **நிழல் இயக்குனர்** ( SEP 2020 )

❖ இயக்குனர் குழுவில் இடம் பெறாத ஒருவர், ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர், நிழல் இயக்குனர் எனப்படுவார்.

❖ பிற்காலத்தில் அவர்கள் விருப்பப்பட்டால், இயக்குனராக நியமிக்கப்படலாம்.

---

### 3. இயக்குனரின் தகுதிகள் பற்றி கூறுக. ( JUN 2023 )

❖ பொவாக ஒரு இயக்குனர், நிதி, சட்டம், மேலாண்மை, விற்பனை, சந்தைப்படுத்தல், நிர்வாகம், ஆராய்ச்சி, பெருநிறும ஆளுமை, தொழில்நுட்ப செயல்பாடுகள் அல்லது நிறுமத்தின் வணிக தொடர்பான பிற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் பொருத்தமான திறன்கள், அனுபவம் மற்றும் அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.

❖ மேலும்,

1) ஒரு இயக்குனர் சரியான மனநிலை உடைய நபராக இருக்க வேண்டும்.
2) ஒரு இயக்குநர் நிறுமம் செயல் முறை புத்தகதில் குறிப்பிட்டுள்ள தகுதி பங்குகள் வைத்திருக்க வேண்டும்.
3) ஒரு இயக்குனர் தனிநபராக இருத்தல் வேண்டும்
4) நல்ல நிதி நிலை உடையவராக இருத்தல் வேண்டும்.
5) நீதிமன்றத்தால் எந்தவிதமான குற்றத்திற்காகவும், குற்றவாளி என அறிவிக்கப்பட்டாமல் / தண்டிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

---

## கூடுதல் வினா

### 1. திரு. ரகு என்பவர் ஒரு நிறுமத்தின் இயக்குநராக பணியமர்த்தப்படுகிறார். அவர் தனிப்பட்ட முறையில் மூன்றாம் நபருக்கு பொறுப்பாவாரா? ஆம் எனில், எச்சூழ்நிலைகளில் அவர் பொறுப்பாவார்? ( MAR 2020 )

❖ ஆம், திரு. ரகு என்பவர் தனிப்பட்ட முறையில் மூன்றாம் நபருக்கு கீழ்கண்ட சூழ்நிலைகளில் பொறுப்பாவார்.

- இயக்குனர்கள் மூன்றாம் நபராக தனிப்பட்ட முறையில் பொறுப்பாளர்களாக ஆதல்

1) இயக்குனர்கள் தங்களின் சொந்த தகுதியின் அடிப்படையில் மூன்றாம் நபர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள்
2) இயக்குனர்கள் முகவர்கள் என்ற அதிகாரத்தின் அடிப்படையில் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றி விவரம் முதல்வருக்கு தெரிவிக்கப்படாமல் இருத்தல்
3) வருங்கால நிறுமத்தின் சார்பாக ஒப்பந்தங்களில் ஈடுபடுத்திக் கொள்ளுதல்
4) கம்பெனியின் அதிகாரவரம்பு மீறிய ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்

- **<u>இயக்குனர்கள் தங்களின் சட்டபூர்வமான கடமைகளிலிருந்து தவறும் போது மூன்றாம் நபர்களுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாளர்களாக ஆதல்</u>**
    1. தகவல் அறிக்கையில் உள்ள தவறான செய்திகள்
    2. முறையற்ற பங்கு ஒதுக்கீடு
    3. குறிப்பிடப்பட்ட குறைந்த பட்ச பங்களிப்பு செய்யாதவர்கள் செலுத்திய விண்ணப்ப பணத்தை திரும்ப செலுத்தாத போது
    4. பங்கு மாற்று சந்தையில் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களை ஒதுக்கீடு செய்யப்படாதவர்கள் செலுத்திய உதவித் தொகையை திரும்ப செலுத்தாத சூழ்நிலையில்.

# <u>அத்தியாயம் 28 . நிறுமச்செயலர்</u>

## <u>இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( குறு வினாக்கள் )</u>

1. **செயலர் என்பவர் யார்?**
    - ❖ நிறுமத்தின் நிர்வாகம் மற்றும் நிதிசார்ந்த அனைத்து செயல்பாடுகள் குறித்து, வெளியிட முடியாத சில இரகசிய தன்மையுடைய செயல்பாடுகளை, இரகசியமாக செய்து முடிக்க, பணி அமர்த்தப்படும் நபரை நிறுமச் செயலர் என அழைக்கலாம்.

2. **"கூட்டம்" என்றால் என்ன?**
    - ❖ பல வகையான சட்டவிதி கூறுகளுக்கு உட்பட்டு, முறையான வகையில் ஒருங்கிணைக்கப் படும் நபர்களின் குழுவை கூட்டங்கள் எனலாம்.

3. **"பகராள்" சிறு குறிப்பு வரைக.**
    - ❖ நிறுமக் கூட்டத்தில் ஒரு பங்குநரின் பிரதிநிதியாக, பங்குநரின் முடிவுகளை செயல்படுத்தும் முகவரை பகராள் என அழைக்கலாம்.
    - ❖ இவர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். ஆனால் வாக்களிக்க முடியாது.

4. **"வாக்கெடுப்பு" என்றால் என்ன?**
    - ❖ ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாகவோ, அல்லது எதிராகவோ, ஒருவர் தனது விருப்பத்தை, உரிய முறையில் பதிவு செய்வதை வாக்கெடுப்பு எனப்படுகிறது.

## <u>கூடுதல் வினா</u>

1. **சட்டமுறைக் கூட்டம், ஆண்டு பொதுக்கூட்டம் தவிர நடத்தப்படும் பங்குநரின் கூட்டத்தின் பெயரைக் கூறி விளக்குக.** ( SEP 2020 )
    - ❖ சட்டமுறைக் கூட்டம் , ஆண்டு பொதுக்கூட்டம் ஆகிய இரண்டையும் தவிர, பிறக் கூட்டங்கள் அனைத்தும் சிறப்பு கூட்டங்கள் என அழைக்கப்படுகிறது.
    - ❖ சில அவசர வியாபார முடிவுகளை எடுக்க, இரு ஆண்டு பொதுக் கூட்டங்களுக்கு இடையே கூட்டப்படும் இதர கூட்டங்கள் அனைத்தும் சிறப்புக் கூட்டகளாகும்.

## <u>மூன்று மதிப்பெண் வினாக்கள் ( சிறு வினாக்கள் )</u>

1. **சிறப்பு தீர்மானம் என்றால் என்ன?** ( SEP 2020 )
    - ❖ ஒரு முடிவை நிறைவேற்ற கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள பங்குநர்களின் எண்ணிக்கையில் 75 சதவீதம் நபர்கள், முடிவிற்கு சாதகமாக வாக்களித்தால் அது சிறப்பு தீர்மானம் ஆகும்.

2. **சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?**

- ஒரு பொது நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும் கூட்டம் சட்டமுறை கூட்டம் ஆகும்.

3. **சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளை தருக.**

1) நிறும பெயரைத் திருத்த ( MAR 2020 )
2) நிறும பங்கு முதலை மாற்றியமைக்க
3) கடனீட்டு பத்திரங்களை மீட்க
4) பங்காதயங்கள் அறிவிக்க
5) ஆண்டு இருப்புநிலைக் குறிப்பை ஒப்புதல் வழங்க
6) இயக்குநர்களை பணியமர்த்த.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள் ( பெரு வினாக்கள் )

1. **பலவகையான நிறும கூட்டங்களை விளக்கு.** ( JUL 2022 )

1. **பங்குநர்கள் கூட்டம்**

- நிறும பங்குநனர்களால் நடத்தப்படும் கூட்டங்கள், பங்குனர்கள் கூட்டம் என அழைக்கப்படுகிறது.
- நிறும பங்குநர் கூட்டங்களை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1) **சட்டமுறை கூட்டம்** ( MAR 2023 )

- ஒரு பொது நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும் கூட்டம் சட்டமுறை கூட்டம் ஆகும்
- நிறுமச் சட்டப்படி ஒவ்வொரு பொது நிறுமமும் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து 6 மாதத்திற்குள் பங்குனர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும்.
- இதனை சட்டமுறை கூட்டம் என அழைக்கப்படுகிறது.

2) **ஆண்டுப் பொதுக் கூட்டம்**

- ஒவ்வொரு ஆண்டும் நிறுமத்தில் இயல்பான நடவடிக்கை குறித்து ஆலோசிக்க கூட்டப்படும் கூட்டம் ஆண்டு பொதுக் கூட்டம் ஆகும்.
- இக்கூட்டம் நிறுமம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 18 மாதத்திற்குள், முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
- அடுத்த ஒவ்வொரு ஆண்டும், இக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
- இரண்டு ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு இடைப்பட்ட காலம் 15 மாதத்திற்கு மிகையாக கூடாது.

3) **சிறப்புக் கூட்டம்** ( SEP 2020 , MAR 2023 )

- சட்டமுறைக் கூட்டம் மற்றும் ஆண்டு பொதுக்கூட்டம் ஆகிய இரண்டையும் தவிர, பிறக் கூட்டங்கள் அனைத்தும் சிறப்பு கூட்டங்கள் என அழைக்கப்படுகிறது.
- சில அவசர வியாபார முடிவுகளை எடுக்க, இரு ஆண்டு பொதுக் கூட்டங்களுக்கு இடையே கூட்டப்படும் இதர கூட்டங்கள் அனைத்தும் சிறப்புக் கூட்டகளாகும்.

2. **இயக்குநர்கள் கூட்டம்**

அ) **இயக்குநர் அவைக் கூட்டம்**

- நிறுமத்தின் நடவடிக்கைகள் குறித்து இயல்பான முடிவுகளை எடுப்பதற்காக இயக்குனர்களால் கூட்டப்படும் கூட்டம் இயக்குநரவை கூட்டம் ஆகும்.
- இயக்குரவை முதல் கூட்டம், நிறும பதிவு செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் கூட்டப்பட வேண்டும்

ஆ) **வாரியக்குழுக் கூட்டம்**

- பட்டியலிடப்பட்ட நிறுமமும் ரூபாய் 10 கோடி அல்லது அதற்கு மேல் பங்கு முதலுடைய ஒவ்வொரு பொது நிறுமம், தணிக்கை குழு கூட்டத்தை கூட்ட வேண்டும்.
- இக்கூட்டம் ஆண்டுக்கு, குறைந்தது நான்கு முறை கூட்ட வேண்டும்.

3. **<u>சிறப்புக் கூட்டங்கள்</u>**

a. **<u>வகுப்பு கூட்டம்</u>** ( MAR 2020 )

- ஒரு குறிப்பிட்ட வகையான பங்குகள் அல்லது கூட்டங்கள், குறிப்பிட்ட வகையான கடனீட்டுப்பத்திரங்களும், கூட்டப்படும் கூட்டம், வகுப்பு கூட்டம் ஆகும்.
- அவ்வப்பாழுது மாற்றி அமைக்கப்படும் கடனீந்தோர் பத்திரம், பாதுகாப்பு பத்திர விதிகளுக்கு இக்கூட்டங்கள் கூட்டப்படுகிறது.
- நிறும மறுஅமைப்பு, நிறும ஒருங்கிணைப்பு மற்றும் நிறும களைப்பின் போது கடனீட்டுப் பத்திர (அ) பிணையப் பத்திர உரிமையார்களின் நலன் பாதிக்கப்படாமல் பாதுகாக்க இக்கூட்டங்கள் கூட்டப்படுகிறது.

b. **<u>கடனீந்தோர் கூட்டம்</u>** ( MAR 2020 )

- நிறுமக் கூட்டங்களை போல இது ஒரு நிறும கூட்டம் அல்ல.
- இருப்பினும், இது ஒரு புதிய கடன் கொள்கையை அறிமுகம் செய்யும் போது அல்லது கடனீந்தோர்கள் தொடர்பான சில வழக்குகளை பேசி முடிவு எடுக்கவும், கடனீந்தோர்களுடன் சில ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவும் இவ்வகை கூட்டங்கள் கூட்டப்படுகிறது

---

## 2. பலவகையான திறந்த மற்றும் இரகசிய வகையில் செய்யப்படும் வாக்கெடுப்பு முறைகளை விளக்குக.

1. **<u>திறந்த நடைமுறை</u>**

- இம்முறையில் அனைத்து உறுப்பினர்களும் கூடியிருக்கும் கூட்டத்தில், ஒரு உறுப்பினர் யாருக்கு வாக்களிக்கிறார் என மற்றவருக்கு தெரியும் வகையில், வாக்கெடுப்பு நடத்தப்படும்.
- இம்முறையில் வாக்கெடுப்பில், எவ்வித ஒளிவு மறைவும் இருக்காது.

➢ **<u>இம் முறை வாக்கெடுப்பில் பின்வரும் முறைகள் உள்ளடங்கும்.</u>**

அ) **<u>குரல் வாக்கெடுப்பு</u>**

- இம்முறை வாக்கெடுப்பு ஒரு பிரபலமான முறையாகும்.
- இத்தகைய வாக்கெடுப்பு முறையை, மிகவும் சிக்கலான அல்லது முரண்பாடுடைய விஷயங்களுக்கு முடிவு எடுக்க பயன்படுத்துவது இல்லை.
- தலைவர் ஒரு முடிவை முன்மொழிய, அதற்கு ஆதரவாக உள்ளவர் "ஆம்" என்று குரலை உயர்த்தி கூறவேண்டும்.
- பின்னர் அம்முடிவிற்கு மறுப்பவர்கள் "இல்லை" என குரலை உயர்த்தி கூற வேண்டும்.
- தலைவர் இவ்விரு வேறுபட்ட ஓசையையும் நன்கு கூர்ந்து கவனித்து தனது முடிவை தெரிவிப்பார்.
- இந்த முடிவுக்கு தலைவரே முழுமையான பொறுப்பேற்க வேண்டும்.
- ஒரு சர்ச்சைக்குரிய விஷயததிற்கு, ஓசையை எழுப்புவதன் மூலம், தீர்வு காண முடியாது.
- இம்முறை, ஒரு அறிவியல் சார்ந்த முறையல்ல.
- இங்கு வாக்குகள் எண்ணப்படுவதில்லை.
- ஒரு நபரை ஒரு பதவிக்கு தேர்ந்தெடுக்க இம்முறையை பரிந்துரைக்கப்படுவதில்லை.

ஆ) **<u>கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்கெடுப்பு</u>**

- நிறுமச் சட்டம் பிரிவு 177 ன் படி, மறைமுக வாக்கெடுப்பு நடைமுறை பின்பற்ற தேவையில்லாத விஷயங்களுக்கு, தலைவர் உறுப்பினர்களை அழைத்து, ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாக உள்ளவர்களை கையை உயர்த்த சொல்லி. சில உறுப்பினர்கள் உதவியுடன் எண்ணிக்கொண்டு, பின்னர் எதிராக உள்ளவர்களை கையை உயர்த்த சொல்லி எண்ணிக்கொள்ள வேண்டும்.
- பின்னர் முடிவை, எண்ணிக்கையின் அடிப்படையில், தலைவர் வெளியிடுவார்.

- இம்முறையில் ஒரு உறுப்பினர் இரண்டு கைகளையும் உயர்த்த வாய்ப்பு உள்ளது.
- மேலும் ஆதரவாகவும், எதிராகவும் ஒரே உறுப்பினர் இரண்டு முறை கையை உயர்த்த வாய்ப்பு உள்ளது.
- இது, இம்முறையில் உள்ள குறைபாடாகும்.
- மிக அதிக உறுப்பினர் கொண்ட கூட்டத்தில், இம்முறை வாக்கெடுப்பை பின்பற்ற முடியாது.

2. **இரகசிய வாக்கு முறை**

- ஒரு உறுப்பினர் அளிக்கும் வாக்கு, மற்ற உறுப்பினர்களால் அறிந்து கொள்ள முடியாத வகையில், இரகசியமாக வாக்கெடுப்பு நடத்தப்படுவதை இரகசிய வாக்கு முறை என்கிறோம்.
- சில சிக்கல்களுக்கு முடிவு எடுக்க, இம்முறை பயன்படுத்தப்படுகிறது.
- ஒரு உறுப்பினர் அளிக்கும் வாக்கு, மிகவும் இரகசியமாக பாதுகாக்கப்படுவதால், இரகசிய வாக்கெடுப்பு முறை ஒரு பிரபலமான முறையாகும்.

(அ) **வாக்கு சீட்டு முறை**

- இம் முறையில் வரிசை எண் இடப்பட்ட வாக்கு சீட்டு, ஒவ்வொரு உறுப்பினருக்கும் தரப்படும்.
- அதில் உறுப்பினர், ஒரு இரகசிய அறையில் தனது விருப்பத்தை, x அல்லது குறியிட்டு வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போட வேண்டும்.
- ஓட்டு எண்ணுபவர்கள் அல்லது வேட்பாளரின் முகவர்களின் முன்னிலையில், அப்பெட்டியை திறந்து, வாக்குகள் எண்ணப்படும்.
- இதில் தவறான முறையில் அளிக்கப்பட்ட வாக்கு சீட்டுகளை நிராகரித்த பிறகு, மீதமுள்ள சீட்டுகளை எண்ணி, முடிவுகளை அறிவிக்கப்படும்.

(ஆ) **அஞ்சல் வாக்கு**

- மிகப் பெரிய நிறுமங்கள் அல்லது பெரிய சங்கங்களுக்கு, நாடுகள் தழுவிய அளவில் உறுப்பினர்கள் இருக்கலாம்.
- வாக்குச் சாவடிக்கு வர இயலாத உறுப்பினர்களும், வாக்களிக்கும் வகையில் வரிசை எண் இடப்பட்ட வாக்குச் சீட்டுகள் மூலம் வாக்குச் சீட்டு, அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.
- உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்து, அஞ்சல் மூலம் மூடப்பட்ட அஞ்சல் உறையிலிட்டு அனுப்புவார்கள்.
- வாக்கு சீட்டு பெட்டிகள் திறக்கும் போது, இவ்வாறு பெறப்பட்ட அஞ்சல் உறைகள் திறக்கப்பட்டு, எண்ணிக்கையுடன் சேர்க்கப்படும்.
- உடல் ஊனமுற்ற அல்லது வாக்குப்பதிவு நடைபெறும் இடத்திற்கு வெகு தூரத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் உறுப்பினர்களும் வாக்களிக்க இம்முறை பின்பற்றபடுகிறது.